# திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

GAZETTEER UNIT
MADRAS
1965
BUILDINGS, MADRAS-8



மாலை 2] விகாரி பங்குனி [மணி 7
ஏப்ரல் 1960

சென்னை அரசாங்க அறநிலையப்

## திருத்தணி, திருவாலங்காடு, வள்ளிமலை

### 1—4—1960 முதல் சென்னை மாநிலத்துடன் சேர்ந்தன

சென்னை-ஆந்திர எல்லை மாற்ற சட்டத்தின்படி ஆந்திர நாட்டிலிருந்து சென்னை மாநிலத்துக்கு 1-4-1960 முதல் சில பகுதிகள் சேர்ந்துவிட்டன. அப்பகுதிகளில் இருக்கும் திருத்தணி, திருவாலங்காடு, வள்ளிமலை முதலிய தலங்கள் சென்னை அரசாங்க அறநிலையத்துறை ஆட்சியின்கீழ் வந்துள்ளன. திருத்தணியைப் பற்றிய கட்டுரை, "திருக்கோயில்" மாலை 1-மணி 7-ஆம் இதழில் வெளிவந்திருக்கிறது. திருவாலங்காட்டைப் பற்றிய கட்டுரையை இந்த இதழில் காணலாம். வள்ளிமலையைப்பற்றிப் பின்னர் வெளியிடப்படும்.

---


# திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,
நுங்கம்பாக்கம் ஹைரோடு,
சென்னை -6.


---

## பொருளடக்கம்


1. திருச்செந்தூர்த் திருவிழா
2. திருவாலங்காடு
3. திருவுந்தியார்
4. பத்திராசல இராமதாசர்
5. எறிபத்த நாயனர்
6. கண்ணன் பிறந்தான்-2
7. வைஷ்ணவம்
8. நவதிருப்பதி அநுபவம்
9. திருமோகூர்
10. திருப்பாற்றுறை
11. திருவிளையாடற் பரமாலை


(முகப்புப்படம் - திருத்தணி முருகன். திருவாரூர்க்கோயில் ஓவியங்களான பஞ்ச பிரமமூர்த்தியின் படங்களை உள்ளே காணலாம்)

# திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 2] விகாரி பங்குனி - ஏப்ரல் 1960 [மணி 7


GAZETTEER UNIT
MADRAS RECORD OFFICE
MADRAS
409/...

## திருச்செந்தூர்த் திருவிழா

திருக்கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் நித்தியோற்சவம், வார உற்சவம், பட்ச உற்சவம். மாத உற்சவம், அயன உற்சவம், வசந்த உற்சவம். வருஷோற்சவம், விரதோற்சவம், பவித்திரோற்சவம் எனப் பல வகைப்படும். நித்திய உற்சவம் என்பது ஒவ்வொரு நாளும் ஸ்ரீபலிநாதரை ஒவ்வொரு காலமும் எழுந்தருளச் செய்வது. வார உற்சவம் என்பது ஒவ்வொரு வாரமும் சிறப்பாக ஒருநாள் சோமவாரம், சுக்கிரவாரம் முதலிய விசேட தினங்களில் எழுந்தருளச் செய்வது. பட்சோற்சவம் என்பது அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம் முதலிய காலங்களில் எழுந்தருளச் செய்வது. மாத உற்சவம் என்பது மாதப் பிறப்பு நாட்களிலும் முக்கிய நட்சத்திரங்களிலும் கொண்டாடப்படுவது. சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரம், வைகாசியில் விசாகம், ஆனியில் மூலம், ஆடியில் உத்திராடம், ஆவணியில் திருவோணம், புரட்டாசியில் பூராடம், ஐப்பசியில் அசுவினி, கார்த்திகையில் கிருத்திகை, மார்கழியில் திருவாதிரை, தையில் பூசம், மாசியில் மகம், பங்குனியில் உத்திரம் இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்களில் திருவிழாக்களைக் கொண்டாடுவது உண்டு. அயன உற்சவம் என்பது தட்சணயனம், உத்தராயணம், சித்திரை விசு, ஐப்பசி விசு முதலிய புண்ணிய காலங்களில் கொண்டாடப்பெறுவது. வசந்தோற்சவம் என்பது வசந்தருதுவாகிய சித்திரை வைகாசி மாதங்களில் வசந்த மண்டபத்தில் எழுந்தருளச் செய்வது. வருஷோற்சவம் என்பது பிரம்மோற்சவம் அல்லது மகோற்சவம் ஆண்டுக்கொருமுறை நட்சத்திரங்களையாவது, திதியையாவது பிரதானமாகக் கொண்டு நடத்தப் பெறுவது. சித்திரா பௌர்ணமி, ஆவணி சுக்கிலபட்ச சதுர்த்தி, புரட்டாசி சுக்கில பட்ச நவமி, ஐப்பசி சுக்கில பட்ச சஷ்டி, மாசி கிருஷ்ண பட்ச சதுர்த்தசி முதலிய திதிகளைப் பிரதானமாகக் கொண்டது. பவித்திரோற்சவம் என்பது ஆண்டுக்கொருமுறை நித்திய நைமித்திக பூசைகளில் அறிந்தோ அறியாமலோ ஏற்படும் குறைகளுக்குப் பிராயச்சித்தமாக நடத்தப் பெறும் உற்சவம். ஆடிப்பூர உற்சவம் பெண்களுக்கு உகந்தது. நவராத்திரி போன்று அம்பிகை சந்நிதியில் சிறப்பாகக் கொண்டாடப் பெறும்.

உற்சவங்கள் அந்தந்த திருக்கோயில்களில் பொருளாதார நிலைமைக்கேற்பவும் ஆகம விதிகளுக்கு ஏற்பவும் ஒருநாள் முதல் நாற்பத்தெட்டு நாள் வரை நடைபெறும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சைவம் | 1 | நாள் |
| 2. | கௌணம் | 3 | ,, |
| 3. | பௌதிகம் | 5 | ,, |
| 4. | பவனம் | 7 | ,, |
| 5. | தைவதம் | 9 | ,, |
| 6. | பைத்ருகம் | 12 | ,, |
| 7. | கௌமாரம் | 13 | ,, |
| 8. | சாவித்திரம் | 15 | ,, |
| 9. | சாந்திரம் | 17 | ,, |
| 10. | சௌரம் | 25 | ,, |
| 11. | சாவரம் | 29 | ,, |
| 12. | சௌபாக்கியம் | 31 | ,, |
| 13. | சௌக்கியம் | 37 | ,, |
| 14. | மங்களம் | 48 | ,, |

திருச்செந்தூர் செந்திலாண்டவன் திருக்கோயிலில் நடைபெறும் உற்சவங்கள் குமார தந்திரத்தை யனுசரித்து நடத்தப் பெறுகின்றன. கொடியேற்றத்துக்குப் பின் முதல் திருநாள் பக்தோற்சவம் கொண்டாடப்படுகிறது. திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு சிறப்பு வகையில் அபிஷேகம் செய்து உழவாரப் படையுடன் அலங்கரித்து பூஜை வழிபாடுகள் செய்து எழுந்தருளப்பண்ணி வீதிவலம் செய்விக்கப் படுகிறது. அப்போது அவருடைய தேவார திருத்தாண்டகப்பாசுரங்கள் ஓதப்பெற்று வீதிகளும் சுத்தம் செய்து அலங்கரிக்கப்படுகின்றன. பேரிதா

ஓ2ணா211,N58
N60·2·7



158338
600 008

டனம் என்ற வாத்தியமும் தாளத்துடன் வாசிக்கப் பெறுகின்றது. ஸ்ரீபலிநாதர், அஸ்திரதேவர் இருவரையும் எழுந்தருளச் செய்து நவசக்திகளிலும் ஆவாகனத்துடன் சந்தியா தேவதைகள் பூசிக்கப் பெறுகின்றன. யாகசாலையிலும் விதிப்படி சகளீகரணம் முதல் அக்கினிகாரியம், ஸ்தாலிபாகம் வரை பூசைகள் செய்து பூர்ணாகுதி நைவேத்திய தீபாராதனைகளுடன் யாக பூசை செய்யப்பெறும். யாகபூசை முடிந்த பின் ஸ்ரீபலிநாதர், அஸ்திர தேவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து சந்தி தேவதைகளுக்கு அன்னம் புஷ்பம் முதலியன பலிதானம் செய்யப்படும்.

இரண்டாம் நாள் மூஷிக வாகனத்தில் விநாயகரையும், பல்லக்கில் அம்மனையும் காலையில் எழுந்தருளச் செய்வது மரபு. எந்தக் காரியமும் விநாயக வழிபாட்டுடன் தொடங்க வேண்டுவது அவசியமாதலால் விநாயகரையும், இறைவன் சக்தியினிடமாகவே படைப்பு முதலிய ஐந்தொழில்களை நிகழ்த்துகிறான் என்பதை அறிவிக்கவே அம்பிகையை மாத்திரம் எழுந்தருளச் செய்யப்படுகிறது. அன்றிரவு சிங்காசனத்தின் மீது முருகப் பெருமான் எழுந்தருளுவார். கந்தபுராண வரலாற்றின்படி இந்திரன் முதலிய தேவர்கள் கந்த வெற்பின்மேல் தேவதச்சனால் அமைக்கப் பெற்ற திருக்கோயிலில் சிங்காசனத்தில் முருகப் பெருமானை எழுந்தருளச் செய்து திருமஞ்சனம் தூப தீப முதலிய சிறப்பு வழிபாடு இயற்றித் துதித்த நிகழ்ச்சியைக் குறிக்கும்.

மூன்றும் நாட் காலையில் பூங்கோயில் விமானத்தில் எழுந்தருளச் செய்வது முருகப்பெருமான் அனுக்கிரகம் செய்ததைக் குறிக்கும். அன்றிரவு ஆட்டுக்கடா வாகனத்தில் எழுந்தருளிக் காட்சியளிப்பார். நாரத முனிவர் செய்த யாகத்தினின்றும் தோன்றிய ஆட்டுக்கடாவை வீரவாகுதேவர் பிடித்து இழுத்துக் கொண்டுவந்து முருகப் பெருமானிடம் வாகனமாய் கொடுத்ததைக் குறிக்கும்.

மிக்கபுகழ் நாரத முனிவன்
விண்ணோர் புடைசூழ் வேள்வியினில்
வெற்றிச் செங்கட் கிடாய்தோன்றி
விரிஞ்சன் முதலோர்க்கு அடங்காமல்
துக்கம் உறவே பாதாளம்
துலங்கும் பூமி அந்தரமும்
சுவர்க்கம் புகழ் சத்தியலோகம்
துன்னுஞ் சக்ராயுதன் உலகம்
திக்கு எலாமும் புகுந்துஉலவத்
தீரன் விரவாகு முன்னே
சென்று பிடித்துவர அந்தச்
செங்கட் கிடாயை மகிழ்ந்தேறிச்
சக்ர வாளகிரி வலஞ்செய்
சதுரா தாலோ தாலேலோ
சந்த்ர குமாரகிரி மேவுஞ்
சரண தாலோ தாலேலோ."

என்ற பாடலும்,

" மருப்பாயுந் தார்வீரவாகு
நெருப்பி லுதித்து
அங்கட் புவனம்
அனைத்தும் அழித்துலவும்
செங்கட் கிடாயதனைச்
சென்றுகொணர்ந்து எங்கோன்
விடுக்குதிஎன்று உய்ப்பஅதன்
மீதிவர்ந்து எண்டிக்கும்
நடத்தி விளையாடும்
நாதா"

என்ற கந்தர் கலிவெண்பா பகுதியும் இவ்வரலாற்றை நன்கு விளக்குகின்றன.

நாலாம் நாள் யானை வாகனம், பிரணவத்திற்குப் பொருள்கூற முடியாது திகைத்த பிரமனைக் குட்டிச் சிறை செய்து பின் சிவபெருமான் அருளால் மீட்கப் பெற்று பிரமதேவன் அகந்தை நீக்கி மெய்யுணர்வு பெற்ற வரலாறு யாவரும் அறிந்ததே. யானை வாகனம் பிரணவ சொரூபம். முருகப்பெருமானே பிரணவ மந்திர தாரகன் என்பதை விளக்குவது இந்த யானை வாகனம்.

......... ........
.....:... படைப்போன்
அகந்தை உரைப்பமறை
ஆதி எழுத்தொன்று
உகந்த பிரணவத்தின்
உண்மை புகன்றிலையால்
சிட்டித் தொழில் அதனைச்
செய்வது எங்கன் என்றுமுனம்
குட்டிச் சிறையிருத்தும்
கோமானே மட்டவிழும்
பொன்னங் கடுக்கைப்
புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரமம்
மொழிந்தோனே!

என்ற கந்தர் கலிவெண்பாப் பகுதி இதனை நன்கு விளக்கும்.

ஐந்தாம் நாள் மயில் வாகனம். சூரபதுமனை வேற்படையால் வதைத்த போது கடலுள் பாய்ந்து மாமரமாகத் தலைகீழாக நின்று முருகன் வேலினால் வெட்டுண்ட போது மயிலாகவும் கோழியாகவும் மாறியபோது மயிலை வாகனமாகவும், கோழியைக் கொடியாகவும் அமைத்துக் கொண்ட திருக்கோலத்தை மயில் வாகனக் காட்சி குறிக்கும். முருகன் மயில் வாகனத்திலமர்ந்து சேவற் கொடியேந்தி கோபுர வாயிலில் எழுந்தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

" நீலக்கலாப மயிலே
நினைப்பவர் உள்ளத்தில்

கோலக் குறத்திமணாளன்
குமரன் அமரர்கள் நாதன்
சீலச்சிலம்பணி பாதன்
சேவற்கொடி வலங்கொண்டோன்
வேலுக்கு இறைவன் தணிகை
விசாகனே மேற்கொண்டு வாராய்.''

திருச்செந்திலாண்டவன் திருக்கோயிலிலிருந்து மயில் வாகனத்தில் வெளிவரும்போது நீல வானமும், நீலக்கடலும், நீலமயில் வாகனமும் ஒருங்கமைந்து காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்.

**ஆறும் நாள் கோரதம்.** தாருகாவனத்து முனிவர்களையும் அவர் பத்தினிகளையும் இறைவன் பிட்சாடனக் கோலத்திலும், திருமால் மோகினி வடிவத்திலும் வென்று அனுக்கிரகித்த திருவிளையாடல்களைக் குறிக்கும். இந்த உற்சவத்தில் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இடபாருடராய் அம்மையப்பர் காட்சி கொடுத்து ஞானப்பால் ஊட்டிய திருவிளையாடலும் நடைபெறும். அன்றிரவு இந்திர விமானத்தில் காட்சியளிப்பர். மதுரையம்பதியில் இறைவனுக்கு இந்திரன் விமானம் அமைத்து வழிப்பட்டுய்ந்ததைக் குறிக்கும்.

**ஏழாம் நாள்** அதிகாலை முருகன் குழந்தை கோலத்துடன் எழுந்தருளுவது தனிப் பெருங்காட்சி. சண்முகப்பெருமான் மூலத்தானத்திலிருந்து உருகுபலகை சட்டத்தில் கொண்டுவரப் பெற்று மூலத்தான சுப்பிரமணியர் திருமுன்பு அமைக்கப் பெறுவது கர்ப்பக்கிரகத்திலிருந்து வெளித்தோன்றி உலக அனுக்கிரகத்தின் பொருட்டுப் படைப்புத் தொழில் செய்வதைக்குறிக்கும். மூர்த்திகளுக்கு மஞ்சள் ஆடைகளும் மஞ்சள் நிறப் புஷ்பங்களும் அணியப்பெறும். மூலவர் சுப்பிரமணியருக்கு கற்பூர ஆராதனை செய்து அவருடைய பச்சை நிற ஆடை சண்முகப் பெருமானுக்கு அணிவிக்கப்படுகிறது. சண்முகப் பெருமான் சண்முக விலாச மண்டபத்துக்கு வந்த பின் வெட்டி வேர் மஞ்சத்தில் அமர்த்தப் பெற்று உலகம் உய்யும் பொருட்டுக் காட்சி கொடுப்பது காத்தல் தொழிலை உணர்த்தும். மூர்த்திகளுக்கு நீல ஆடைகளும், நீல நிறப் பூக்களும், வெட்டிவேர் மாலைகளும் அணியப் பெறும். வெட்டிவேர் மஞ்சத்தில் சண்முகவிலாசத்திலிருந்து பிள்ளையன் மண்டபத்துக்கு எழுந்தருளுவார். அங்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளுக்குப் பின் சுவர்ண மஞ்சத்திலமர்ந்து சிவப்பு நிறமுடைய புஷ்பங்களால் அலங்கரிக்கப் பெற்று சிவந்த ஆடையணிந்து சங்கார கர்த்தாவாகிய சங்கரன் தானே யென்பதை உணர்த்துவர். 'சிவனெனும் நாமம் தனக்கே யுடைய செம்மேனி எம்மான்' ஆகிய அரனே ஆறுமுகன் என்பதை விளக்க, ஆறுமுகன் திருவுருவத்தின் பின்புறத்தில் நடராஜ உருவத்தில் ஆனந்தத் தாண்டவ கோலத்துடன் காட்சியளிப்பார்.

'' ஆறு முகத்தில் அதிபதிநான் என்றும்
கூறு சமயக் குருபரன்நான் என்றும்
தேறினர் தெற்குத் திருஅம்பலத் துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கிநின் றானே.''
—திருமந்திரம்.

செந்தாமரைப் பவளம்போல் செம்மேனியும் சிவந்த ஆடையும், செந்தாமரைச் சேவடியும், செந்நிறப்பூக்களும் அணிந்து செங்கதிரோன் காட்சியளிக்கும் தோற்றம் கண்கொள்ளாக் காட்சி.

தாமரைபுரையும் காமர் சேவடிப்
பவளத்தன்னமேனித் திகழொளிக்
குன்றியேய்க்கும் உடுக்கைக்குன்றின்
நெஞ்சுபக யெறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைகல் யெய்தின்றால் உலகே
—குறுந்தொகை.

அங்கிருந்தும் புறப்பட்டு ஊருக்குள்ளிருக்கும் சிவக்கொழுந்தீசுவரர் கோயில் முன்புள்ள மண்டபத்தில் இரவு தங்கியிருப்பர். ஏழாம் நாள் நடக்கும் இந்த உற்சவம் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலுக்கும் அதிபதியாகிய பிரம விஷ்ணு சங்கரர் தானே என்பதை உணர்த்தும் வகையில் அமைந்திருக்கிறது.

''மூவருமாகிநின்ற மூர்த்தியே ஓலம் ஓலம்''

''சரவண பவா வென்றோதுந்தாவறு
பதங்கள் மூன்றிற்
பரவுறு சரமென்றாய பதமது
சலமே யாகும்
வருவநம் வாசமிந்த வான்பத
மிரண்டும் பார்க்கில்
அரிதுமா தவத்து நாராயண
னெனுமருத்த மாமாம்''

''அயனெனவாகி அரியெனவாகி
அரனெனவாகி அவர்மேலாய்''

**எட்டாம் திருநாள்** அதிகாலையில் வெள்ளி மஞ்சத்தில் அமர்ந்து யாவும் சுத்தமான வெண்மையால் வெள்ளை புஷ்பங்கள், வெள்ளை ஆடைகள், வெள்ளை தோரணங்கள், வெள்ளைத் திரைகளோடு சூரியோதயத்துக்கு முன்பாகவே சிவக்கொழுந்தீசுவரர் திருக்கோயிலுக்குள் எழுந்தருளுவார். இது திரௌபவ கிருத்தியத்திற்கு அதிபதியாகிய மகேச கோலத்தைக் குறிக்கும். வெண்மையென்றது உண்மையில் தன்னுள் ஏழு நிறங்களை மறைத்துக் கொண்டிருக்கிறது. இந்த ஏழு நிறங்களில் சிவப்பும் நீலமும் தான் மூல நிறங்கள். சிவப்பு, மஞ்சள், சிவந்த மஞ்சள் (ஆரஞ்சு நிறம்), நீலம், கருநீலம், பச்சை, செந்நீலம் என்னும் இவ்வேழு நிறங்களும் சேர்ந்ததே வெண்மை. வானவில்லில் இந்த ஏழு நிறங்களையும் காணலாம். எனவே **ஆன்மாக்கள்**

அவர்கள் பாவபுண்ணியங்களைச் சேர்த்து இன்பதுன் பங்களினின்று இளைப்பாறச் செய்யும் மறைத்தல் தொழிலைச் செய்யும் மகேசன் முருகனே என்பதை இந்த வெள்ளை சாத்தித் திருவிழா காட்டுகிறது.

**எட்டாம் நாள்** காலை விசேஷ அபிஷேக ஆரா தனைகளுக்குப் பின் முருகனும் வள்ளி தெய்வயானை யும் பச்சை சாத்தி எழுந்தருளுவர். மஞ்சத்தின் நிறமும் பச்சை; புஷ்பங்களும் கொழுந்துகளும் பச்சை; உடைகளும் திரைகளும் தோரணங்களும் பச்சை. இந்தப் பச்சையும் குளிர்ச்சியும் பொருந் திய திருக்கோலம் உயிர்களுக்கெல்லாம் அனுக்கிர கம் செய்யும் கர்த்தாவாகிய சதாசிவமூர்த்திதானே என்பதை உணர்த்தும். அன்று நடக்கும் அபிஷே கம் மிகச்சிறந்த முறையில் நடைபெறுகின்றது. அவற்றுள் முக்கியமானவை தைலம், மாப்பொடி. மஞ்சட்பொடி, நெல்லிப் பருப்புப்பொடி, பஞ்சகவி யம், பஞ்சாமிர்தம், வாழை, மா, பலா, எலுமிச்சம் பழம், நாரத்தம்பழம், தமரத்தம்பழம், கொளுஞ்சிப் பழம், மாதுளம்பழம் முதலிய பழங்களும் அவை களின் சாறும், இளநீர், அன்னம், திருநீறு, பன்னீர், சந்தனம், வில்வோதகம், தார்வோதகம், சகஸ்ர தாரை, காண்டாமிருகக்கொம்பு ஜலம், வலம்புரிச் சங்கு ஜலம் முதலியன. மேற்கண்ட ஐந்து நிறங் களும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்களின் தன்மையையும், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் களையும் சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் என்ற இறைவன் ஐம்முகங் களையும் குறிக்கும். அந்தந்த சமயங்களில் அந் தந்த முகங்களுக்குரிய மந்திரங்களால் வழிபடுவது சிறப்பாகும்.

சோதி இளம்பரிதி நூருயிரங் கோடி போல்
வளரும் தெய்வீக வடிவம்—உளந்தனில் கண்
டாதரிப்போர்க்கு ஆருயிராய் ஓதிலவத்து
ஓங்காரத்து உள் ஒளிக்கும் உள்ளொளியாய்
நீங்காத பேருருவாய் நின்றனே [ஐந்தொழிலும்
—குமரகுருபரர்.

பச்சை சாத்திய கோலத்துடன் வீதி வலம் வந்து எல்லா உயிர்களுக்கும் அனுக்கிரகம் செய்து விசேஷ மேளதாளங்களுடன் திருக்கோயிலுக்கு எழுந்தருளும் காட்சியே இந்த திருவிழாவின் சிகரம்.

அன்றிரவு குதிரை வாகனத்தில் கத்தி, கேட யம், வில், அம்பு, ஈட்டி முதலிய ஆயுதங்களோடு அமர்ந்து பரிவேட்டைக்குச் செல்லும் காட்சி துஷ்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனத்தைக் குறிக்கும்.

**ஒன்பதாம் நாட்** காலை பல்லக்கில் எழுந்தருளு வர். சிவிகையில் எழுந்தருளுவது உயிர்களுக்கு இறைவனே குருவாய் வந்து ஆட்கொள்ளும் தன் மையைக் குறிக்கும். சிவஞான போதம் எட்டாஞ் சூத்திரத்தில்,

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில்
உணர்த்தவிட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே

என்றவாறு மாணிக்கவாசகர் போன்ற உண்மை அடியார்களுக்கு இறைவனே குருவாய்த் தோன்றி ஆட்கொள்வான் என்ற தத்துவத்தை உணர்த்து கின்றது. பிற்காலத்தில் பணம் படைத்தவர்களும் மேனாக்கள், பல்லக்குகள் முதலியவற்றில் சென்றார் கள். என்றாலும் ஆதியில் ஞானசம்பந்தர் போன்ற சமய குரவர்களும் ஞானசாரியர்களாகிய மடாதி பதிகள், சமய குருக்கள் போன்ற பெரியோர்களும் சிவிகைகளில் சென்றார்கள். ஆதலால் இறை வனே உண்மையான குரு என்பதை இந்த வாக னம் உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

ஒன்பதாம் நாள் கைலாசபர்வத வாகனம். இது இராவணனுடைய அகந்தையை அழித்துப்பின் அவன் வருந்தி உணர்ந்தபோது அருள் செய்த தைப்போல் ஆன்மாக்களின் ஆணவத்தைப்போக்கி அருள் பாலித்துக் கைலாய பதவியைக் கொடுத் தருளும் பரமபதிதானே என்பதைக் குறிக்கும்.

பத்தாம் நாள் தேரோட்டம். தேரினுடைய சக்கர தண்டம் மகாமாயையும், சக்கரங்கள் சூரிய சந்திரர்களையும், பட்டிகையில் ருத்திரர்கள் விஷ்ணு வாயு முதலியோரையும், ஸ்தூபியில் சதாசிவத்தை யும், அதன்கீழ் மகேசுவரரையும், கணபதி இந்திரன் தட்சணாமூர்த்தி முதலியோரையும், சாரதிபீடத்தில் பிரமாவையும், குதிரைகளில் நான்கு வேதங் களையும், முன்புறம் இரண்டு துவார பாலகர் களையும், எட்டுத் திக்குகளிலும் அஷ்டநாகங் களையும், அஷ்டகஜங்களையும், மேலே சிவ கணங்களையும், நட்சத்திரங்களையும், இராசிகளை யும், கலைகளையும், கால்களில் நவசக்திகளையும், முப்பத்தாறு தத்துவங்களையும் பாவித்துப் பூசை செய்து தேரோட்ட வைபவம் நடைபெறும். இறை வன் முப்புர மெரித்த திருவிளையாடலை இந்த உற் சவம் குறிக்கும். 'முப்புரமாவது மும்மலகாரியம்' என்ற திருமந்திரத்திற்கிணங்க ஆன்மாக்களின் மும்மலங்களைப்போக்கி சிவானந்தப் பெருவாழ்வு கொடுக்க எழுந்தருளும் காட்சியே தேரோட்ட மாகும்.

பத்தாம் நாள் இரவு சத்தாவரணம். பல்லக் கில் எழுந்தருளி நான்கு வீதிகளிலும் வேதகோஷம். திருமுறைப்பாராயணம் நிருத்த கீதம், சகல வாத் திய முழக்கம், இவற்றுடன் கலந்து ஆன்மாக்க ளுக்கு அருள் செய்வதைக் குறிக்கும்.

சூர்ணோற்சவம் என்பது மங்கள நீராட்டுக் குரிய கிரியை. மஞ்சள் சூரணம் செய்து கும்ப ஜலத்தொடு கலந்து நீராடுவதற்காக வழங்குவது சூர்ணோற்சவம்.

தீர்த்தோற்சவம்: இறைவன் தீர்த்தவாரி உற் சவத்தில் தீர்த்தம் கொடுத்தல் ஆன்மாக்களாகிய

நாமும் அவனுடன் இரண்டறக்கலந்து பேரானந்தப் பெருவாழ்வு பெறும் அருளை உணர்த்துகிறது.

அவரோகணம்: சேவற்கொடி படத்தை விதிப் படிப் பூசித்து இறக்கிப் பிரார்த்திப்பது அவரோகண மாகும்.

சந்திதேவதைகளை மறுபடி பூசித்து விடை பெறுவது மௌன உற்சவம் எனப்படும்.

பதினோராம்நாள் ஆசாரிய உற்சவம். உற்சவ ஆரம்பத்தில் இரட்சரபந்தனம் செய்து கொண்ட உற்சவ ஆசாரியாருக்கு மரியாதை செய்து அவரு டைய திருமடத்துக்கு அழைத்துச் சென்று அனுக் கிரகம் பெறுவது ஆசாரிய உற்சவம். அன்றிரவு தெப்போற்சவம். நீரில் வாழும் ஜீவராசிகளுக்கு அருள்புரிவதற்காக எழுந்தருளும் உற்சவம் இது. ஒவ்வொரு சுற்றிலும் வேதம், திருமுறை, நிருத்தம், கீதம், வாத்தியம் முதலியவைகள் நடைபெறும்.

பன்னிரண்டாம் நாள் மங்களோற்சவம். சர்வ லோகங்களுக்கும் மங்களம் உண்டாகவேண்டும், எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டு மங்களகோஷத்தோடும் மங் கள வாத்தியங்களோடும் இறைவனைக் கோயிலுக்கு எழுந்தருளச் செய்வது மங்கள உற்சவம்.

இவ்வாறு பன்னிரண்டு நாள் நடக்கும் உற் சவம் ஜனத்குமார பிரச்ன குமாரதந்திர விதிப்படி நடத்தப்பெறுகிறது. இந்த உற்சவம் ஆண்டுக்கு இருமுறை திருச்செந்தூரில் நடைபெறுகிறது. ஆவணி மாதத்தில் நடக்கும் உற்சவத்திற்குப் பெரும்பாலும் திருநெல்வேலி மாவட்டத்திலும் அரு கிலும் உள்ள மக்களுமே வருவார்கள். மாசி மாதத்தில் நடக்கும் உற்சவத்திற்கு கேரளம் முத லிய பிரதேசங்களிலிருந்து ஏராளமான மக்கள் வரு வார்கள்.

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானுர்
படையம படையென வஞ்சிக் குங்கட்
கடையாலே
வரியளி நிறைமுரல் கொங்குக் கங்குற்
குழலாலே
மறுகிடு மருளனை இன்புற் றன்புற்
றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித்
தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
செயசெய ஹர ஹர செந்திற் கந்தப்
பெருமாளே.

---

## *செய்திகள்*

**சோளிங்கபுரம்** *இலட்சுமிநரசிம்மசுவாமி கோயிலில் 8—3—60-ல் தவனோற்சவம் நடைபெற்றது.*

**திருவாஞ்சியம்** *வாஞ்சிநாதர் கோயிலில் 1 முதல் 11—3—60 வரை மாசிமகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது.*

**சென்னை** *முல்லாசாகிப் தெரு அருணசலீசுவரர் ஆலயத்தில் 9—3—60-ல் கனம் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் சம்ப்ரோக்ஷண விழாசிறப்பாகநடை பெற்றது.*

**ஒப்பிலியப்பன்கோயில்,** *சீனிவாசப்பெருமாள் கோயிலில் 15 முதல் 24—3—60 வரை பங்குனி பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெற்றது.*

**கோயமுத்தூர்,** *கோணியம்மன் திருக்கல்யாண விழா 8—3—60-ல் சிறப்பாக நடை பெற்றது. (பிரம்மோற்சவம் 10-2-60 முதல் 13-3-60 வரை சிறப்பாக நடைபெற்றது.)*

*சென்னை, சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவப்பெருமாள் கோயிலில் திருக்கச்சிநம்பி கள் சாற்றுமுறை உற்சவம் 26—2—60 முதல் 6—3—60 வரையிலும், குலசேகர ஆழ்வார் சாற்றுமுறை உற்சவம் 8-3-60 அன்றும் வீதிபுறப்பாட்டுடன் சிறப்பாக நடந்தது. மேற்படி கோயிலில் பிரம்மோற்சவம் 15 முதல் 24—3—60 வரை நடைபெற்றது.*

**சென்னை,** *வடபழநி ஆண்டவர் கோயில் பங்குனி உத்திர இலட்சார்ச்சனை விழா 1-4-60 முதல் ஆரம்பித்து 9-4-60 முடிய சிறப்பாக நடைபெறும். ஒவ்வொருநாள் விழா விலும் திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்கள் குழுவினர்களால் தேவார திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தப்பெறும். 10-4-60 முதல் 12-4-60 வரை தெப்போற்சவ விழாவும் சிறப்பாக நடைபெறும்.*

# திருவாலங்காடு

துஞ்சவருவாருந் தொழுவிப்
பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப்
பாருமுனை நட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்
கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழையனூ ராலங்
காட்டெம் மடிகளே

—திருஞானசம்பந்தர்.

வெள்ளநீர்ச் சடையர் போலும்
விரும்புவார்க் கெளியர் போலும்
உள்ளுளே யுருகி நின்றங்
குகப்பவர்க் கன்பர் போலும்
கள்ளமே வினைக ளெல்லாங்
கரிசறுத் திடுவர் போலும்
அள்ளலம் பழனை மேய
ஆலங்காட் டடிகளாரே

—திருநாவுக்கரசர்.

வண்டார் குழலி யுமைநங்கை
பங்கா கங்கை மணவாளா
விண்டார் புரங்க ளெரிசெய்த
விடையாய் வேத நெறியானே
பண்டாழ் வினைகள் பலதீர்க்கும்
பரமா பழைய னூர்மேய
அண்டா ஆலங் காடாவுன்
அடியார்க் கடிய னுவேனே

—சுந்தரர்.

திருஆலங்காடு தொண்டை நாட்டில் பாடல் பெற்ற முப்பத்திரண்டு பதிகளில் ஒன்று. 1-4-1960 முதல் ஆந்திரப் பிரதேசம் சித்தூர் மாவட்டத்திலிருந்து சென்னை மாநிலத்துடன் சேர்க்கப்பெற்ற பகுதியி லிருக்கிறது. திருவாலங்காடு என்ற இருப்புப் பாதை நிலையத்திலிருந்து வடகிழக்கே மூன்று கல் தொலைவிலிருக்கிறது. வடவனம், வட வாரணியம் என்ற பேர்களும் இவ்வூருக் குண்டு.

தென்னாட்டிலுள்ள நடராஜ சபைகள் ஐந்தனுள் இரத்தின சபை அல்லது மணி மன்று என்பது திருவாலங்காடு. பொதிகை மலையிலுள்ள திருக்குற்றாலத்தில் சித்திர சபை, திருநெல்வேலியில் தாம்பிர சபை, மது ரையில் இரஜித சபை (வெள்ளியம்பலம்-கால் மாறி ஆடிய திருக்கோலம்), தில்லையில் கனக சபை (பொன்னம்பலம்), திருவாலங் காட்டில் இரத்தின சபை (மணிமன்று) என் பன அவ்வைந்தும்.

குடதிசையதனில் மருவு குற்றாலம்
கோதறு சித்திர சபையாம்
குற்றமில் குணக்கின் பழயனூர் மன்றம்
குலநவ ரத்தின மன்றென்பார்
அடல்விடைப் பாகன் நெல்லையம்
பதியின் அம்பலம்
தாம்பர சபையாம் ஆலவாய்
மதுரை வெள்ளி அம்பலமாம்
அணிதில்லைச் செம்பொன் னம்பலமே

—இரட்டையர் தில்லைக் கலம்பகம்.

அம்பலக்கூத்தர் நடனங்களில் தில்லை யில் ஆனந்த தாண்டவமும், திருவாரூரில் அசபா நடனமும், மதுரையில் ஞானசுந்தர நடனமும், திருமுருகன் பூண்டியில் பிரம நடனமும், திருப்புக்கொளியூர் அவிநாசியி லும், திருவாலங்காட்டிலும் ஊர்த்துவ தாண் டவமும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. திருக் களர், பேரூர், திருவெண்காடு, திருநல்லம் முதலிய தலங்களிலுள்ள நடராஜ உருவங் களும் முக்கியமானவை. பாடல்பெற்ற தலங் களுள் திருவாலங்காடு வடவாரணியம் எனப் படும். இதையடுத்துள்ள திருவெண்பாக்கம் இலந்தைக்காடு (பதரிகாரணியம்) எனவும், திருப்பாசூர் மூங்கிற்காடு (வம்சாரணியம்), கூவம் என்ற திருவிற்கோலம் தர்ப்பைக்காடு (நைமிசாரணியம்) எனவும் வழங்குகின்றன.

காரைக்காலம்மையார் கயிலை சென்று அங்கிருந்து தலையால் ஊர்ந்து வந்து இறைவன் ஆணைப்படி நடராஜப் பெருமானின் திருவடிக்கீழ் என்றும் வீற்றிருக்கும் பெருவாழ்வு பெற்ற தலம். முஞ்சிகேச முனிவருக்கும் கார்க்கோட முனிவருக்கும் காட்சி கொடுத்த பதி. இத்தலத்தில் இறைவன் காளியோடாடி காளியின் அகந்தையைப் போக்கினர். காளியம்மனின் உருவம் திருக்கோயிலுக்குள் இருக்கிறது. தனிக் காளி கோயில் கோயிலுக்கு வட மேற்கேயுள்ள முத்திதீர்த்தம் என்னும் திருக்குளத்தின் வடகிழக்குப் பக்கத்தில் இருக்கின்றது. இத்தலத்திலும், திருவம்பர்மா காளம், திருவெண்காடு, திருவக்கரை, தில்லை முதலிய இடங்களிலும் காளி கோயில்கள் சிறப்பாக இருக்கின்றன.

'ஆடினர் காளிகாண ஆலங்காட்டடிகளாரே'
என்பது அப்பர் தேவாரம்.

'அண்டம் புழைபட விடத்தாள் நீட்டி
அற்புதன் காளிதோற்க ஆடியததிது'
என்பது திருவிளையாடற் புராணம்.

'கொடிய வெஞ்சினக் காளியிக்
குவலய முழுது
முடிவு செய்வனென் றெழுந்தாள்
முளரியோன் முதலோர்
அடைய அஞ்சலும் அவள்செருக்
கழிவுற அழியாக்
கடவு ளாடலால் வென்றதோர்
வடவனங் கண்டான்
என்பது கந்தபுராணப் பாடல்.

"திகழ் வேடங் காளியோ டாடிய
செகதீசங் கேசந டேசுரர்
திருவாலங் காடினில் விறிய பெருமானே"

"அன்ருலங் காட்டண் டருமுய
நின்ருடுங் கூத்தன் திருவருள்
அங்காகும் பாட்டின் பயனினை அருள்வாழ்வே"

"முடிமிசை சோமன்சூட்டி வடிவுள
ஆலங்காட்டில்
முதிர்நட மாடுங் கூத்தர் புதல்வோனே"

என்பவை அருணகிரிநாதரின் திருப்புகழ் வாக்குகள்.

திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்துக்கு எழுந்தருளியபோது காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்து வழிபட்டதாதலின் அதை மிதிக்க அஞ்சி அண்மையிலுள்ள பழையனூரில் தங்கினர். அன்றிரவு கனவில் இறைவன் காட்சி கொடுத்து 'நம்மை அயர்த்தனையோ பாடுதற்கு' என்று அருளிச்செய்தார். பேயொன்று பெண் வடிவம் கொண்டு ஒரு மகவை எடுத்துக்கொண்டு தன்னைத் தொடர்ந்து வருவதற்குப் பயந்து வணிகன் ஒருவன் பழையனூரிலிருந்த வேளாளர்களிடம் அடைக்கலம் புகுந்தான். நீலி என்ற அந்தப் பேய்ப் பெண் கணவனுகிய அவன் தன்னைப் புறக்கணித்துச் செல்கிருன் என்று அவர்களிடம் முறையிட்டாள். அவள் செய்த பாசாங்கை உணராமல் வேளாளர்கள் எழுபது பேர்கள் வணிகனுக்கு ஒன்றும் நேராமல் காப்பதாகவும், அப்படி நேர்ந்தால் தாங்கள் தீப்பாய்வதாகவும் வாக்களித்தார்கள். வணிகனையும் நீலியையும் ஓரிடத்தில் தங்க ஏற்பாடு செய்தார்கள். இரவில் அப்பெண் பேயுருக்கொண்டு வணிகன் உடலைக் கிழித்துக்கொன்றது. மறுநாள் அதையறிந்த எழுபது வேளாளர்களும் தாம் செய்து கொடுத்த வாக்குறுதியைக் காப்பதற்காக தீக்குழி பாய்ந்து தம்மை மாய்த்துக்கொண்டார்கள். இந்த வரலாற்றையும், இறைவன் தன்னை உணர்த்திப் பாடச் செய்ததையும் "துஞ்சவருவாரும்" என்று தொடங்கும் பாசுரத்தில் திருஞானசம்பந்தர் நன்கு விளக்கியுள்ளனர்.

இத்தலத்திறைவன் திருநாமம் தேவர் சிங்கப்பெருமான் என்று வழங்கப்பெறுகிறது; இறைவியின் திருப்பெயர் வண்டார்குழலி என்பது, சுந்தரர் தேவாரத்திலும் அப்படியே குறிக்கப்பெற்றிருக்கிறது. இத்தல விருட்சம் பலா. இத்தலத்திற்கு சம்பந்தப்பெருமான் ஒரு பதிகமும், அப்பரடிகள் இரண்டு பதிகங்களும், சுந்தரமூர்த்திகள் ஒரு பதிகமும் ஓதியருளியுள்ளனர். காரைக்காலம்மையார் 22 பாடல்களுடைய மூத்த திருப்பதிகங்கள் இரண்டைப் பாடியருளியிருக்கின்றனர். பதினேராம் திருமுறையில் இடம் பெற

றுள்ளது. காரைக்காலம்மையார் சிவபெருமானைக் கேட்ட வரத்தை சேக்கிழார்,

"இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும்போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்"

என்று அழகுபடக் கூறுகிறார்.

அருணகிரிநாதர் நான்கு திருப்புகழ்ப் பாடல்களைப் பாடியிருக்கின்றனர்.

திருவாலங்காட்டுக் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. திருவாலங்காட்டுச் செப்பேடுகள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. 8¼ மணங்கு எடையுள்ள 31 செப்பேடுகள் உள்ளன. முதல் பத்து சமஸ்கிருத, கிரந்த எழுத்துக்களினால் பொறிக்கப் பெற்றவை; மற்றவை தமிழ் எழுத்துக்களாலுள்ளவை. கங்கைகொண்ட சோழன் என்ற முதல் இராஜேந்திர சோழன் (கி. பி. 1011-1043) காலத்தது. அம்மன்னன் பழையனூர் கிராமத்தைத் திருவாலங்காட்டுக் கோயிலுக்கு அளித்ததை அறிவிக்கிறது. தானச் செய்தியை ஊரார் அறியும் பொருட்டு பிடி சூழ்ந்து படாகை நடப்பித்துப் பிரசுரம் செய்யப்பட்டது. பெண் யானை ஒன்றை ஊர் எல்லை முழுவதும் சுற்றிவரச் செய்து கள்ளியும் சூலக்கல்லும் நாட்டப்பெற்றது. இவ்வூரில் "தெங்கும் பனையும் ஈழவர் ஏறப் பெருததாகவும்" செப்பேட்டில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலுள்ள தென்னை பனை மரங்களிலிருந்து கள் இறக்குவதில்லையென்று தெரிகிறது.

கோயிலிலுள்ள கல்வெட்டுக்களில், ஜயங்கொண்ட சோழமண்டலத்து, மணவிற்கோட்டத்து, மேல்மலைப் பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு என்றும், வடாடவி என்றும் இவ்வூர் குறிக்கப்பெறுகிறது. விஜய நகர ஆட்சியில் சந்திரகிரி இராஜ்யப் பகுதியிலிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. குலோத்துங்கன் I, பல்லவ மதுசூதன தேவன், பின் பராந்தக சோழன், குலோத்துங்கன் III, விக்கிரம சோழன், விஜயநகர தேவராய மகாராயன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், கங்கபல்லவ நிருபதுங்க தேவன், இராஜராஜன் III, இராஜாதிராஜன் II, விஜயநகர மல்லிகார்ஜுனராயன், கிருஷ்ணதேவராயன், சதாசிவராயன், திருமலைய தேவமகாராயன், கம்பண்ண உடையார், இராஜராஜன் I, இராஜேந்திரன் I, இராஜாதிராஜன் I சாளுவதிப்பைய தேவன் முதலிய மன்னர்களின் காலத்திய கல்வெட்டுக்கள் அவையெல்லாம். இறைவன் பெயரை, திருவாலங்காடுடைய நாயனார் என்றும், இறைவியின் பெயரை வண்டார்குழலி, திருக்காமக்கோட்டத்து நாச்சியார் என்றும் குறிக்கப்பெற்றிருக்கின்றது, ஊர்த்துவ தாண்டவமூர்த்தியை "திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளிய நாயனார்" என்று கூறியிருப்பது இன்புறத்தக்கது. கோயிலுக்கு நிலம், பொன், விளக்கெரிக்க நிலம், பசுக்கள், ஆடுகள், பொன் இவைகளையளித்ததையும், கோயில் மண்டபம் ஒன்றை அம்மையப்பன் பழியஞ்சிப் பல்லவரையன் கட்டியதையும், திருவிழா நடைபெறத் தானம் செய்ததையும், நில விற்பனையையும், பூசை நடைபெறப் பொன் கொடுத்ததையும், இன்னும் பல அரியசெய்திகளை அக்கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. பாடல்பெற்ற தலமான திரு இலம்பையங்கோட்டூரைப்பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

சூடுமதியஞ் சடைமேல் உடையார்
சுழல்வார் திருநட்டம்
ஆடும்அரவம் அரையில்ஆர்த்த
அடிகள் அருளாலே
காடுமலிந்த கனல்வாய் எயிற்றுக்
காரைக் காற்பேய்தன்
பாடல்பத்தும் பாடி ஆடப்
பாவ நாசமே

—காரைக்காலம்மையார்.

# திருவுந்தியார்

[திரு. K. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி.,]

(முன் தொடர்ச்சி)

**சாதனம்**

முதற்பொருளை ஒருவன் தன் உணர்வின்கண் வெளிப்படக் கண்டு இன்புறுவதே வாழ்க்கையின் மேலான குறிக்கோள் ஆகும். அங்ஙனம் காணும் காட்சியே மெய்யுணர்வு அல்லது உயர்ஞானம் எனப்படும். ஆனால், முதற்பொருள் உயிரின் உணர்வுக்குச் சார்பாய், அவ்வுணர்வை விளக்குவதாய் உள்ளது. உயிர் கண்போன்றது. உயிரின் உணர்வை விளக்கும் முதல்வன் திருவருள், கண்ணை உள்நின்று செலுத்தி விளக்கும் உயிரின் அறிவைப்போல உள்ளது. ஆதலால், கண் புறப்பொருளைக் கண்டு, உயிரைக் காணமாட்டாததாயிருத்தல் போல, உயிரும் உலகப்பொருள்களை அறிந்து வருவதல்லது, தன்னையும் உணராது; தன் உணர்வுக்கு முதலாக உள்ள முதல்வனையும் உணராது. இக்காரணம்பற்றி, முதற்பொருளை உயிர் தலைப்பட்டு உணர்தற்கு உரிய சாதனங்களை ஞானநூல்கள் சிறந்தெடுத்துக் கூறுகின்றன.

அத்தகைய சாதனங்களுள் சிறந்த சாதனமாகக் கொள்ளப்படுவது நான் அழிய அன்பு செய்தல் என்பது ஆகும். இதனையே திருவுந்தியார்

> உள்ளம் உருகில்உடன் ஆவரல்லது
> தெள்ள அரியர்என் றுந்தீபற
> சிற்பரச் செல்வரென் றுந்தீபற

எனக் கூறுகின்றது.

இதிற் குறிக்கப்பட்ட சாதனம் "உள்ளம் உருகில் உடன் ஆவார்" எனத் திருஞானசம்பந்தர் திருவாய்மூர்த் திருப்பதிகத்தில் அருளிச் செய்ததைப் பின்பற்றி, அத்தொடரின் அனுபவப் பொருளை விளக்கும் முறையில் அமைந்திருத்தல் அறியத்தக்கது.

ஆன்மா, நீரில் கலந்துள்ள உப்பு நீர் முழுதும் கலந்து நிறைந்திருத்தல் போல, சிவ நிறைவிற் கலந்து சிவமேயாய் ஒற்றித்துநின்று உணரும் இயல்பை உடையது. ஆன்மா என்ற சொல்லே வியாபகம் (பரவி நிற்பது) என்னும் பொருளில் உள்ளது. ஆயினும், உப்பு நீரினின்று பிரிந்து உள்ளபோது ஏகதேசப்பட்டு நிற்றல்போல, உயிரும், முதல்வனை உணராதபோது, உடம்பையும் உடம்பில் உள்ள கருவிகளையும் பற்றி ஏகதேசப்பட்டு வரும். அஃது ஏகதேசப்பட்டு உலகப் பொருள்களை அறிந்து வரும்போது, தான் ஒரு முதல் எனவும், தனக்குச் செயல்செய்யும் ஆற்றல் உள்ளது எனவும் உணர்ந்து வரும்; மேலும் உலகப் பொருள்களின் முதற் காரணமாக உள்ள சத்துவம், இராசதம், தாமதம் என்னும் முக்குண வயப்பட்டு, காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கள் உடையதாய், இன்பத்துன்ப மயக்கம் என்னும் வேதனைகளைப் பொருந்திவரும். இந்நிலையில் உயிர் உள்ளம் எனப்படும். உள்ளம் என்னும் சொல் புருடன் அல்லது சீவான்மா என்னும் சொற்களின் பிரியாயமாய்த் தமிழ் மெய்ந் நூல்களுள் வழங்கிவரும் சொல்.

இவ்வாறு யான் எனது என்னும் செருக்கு உடையதாய் உள்ளவரை, உயிர் முதல்வனை உணரமாட்டாது. முதல்வன், உயிர்க்குயிராய்க் கலந்து நிற்பினும் இச்செருக்குப் பற்றி உயிர்க்கு உலகியல் துறையில் நிகழும் சுட்டறிவிற்கும், ஆன்மநிட்டையில் யான் முதல் (அஹம்பிரஹ்மம்) என நிகழும் பசுஞானத்திற்கும் அப்பாற்பட்டு, அறியப்படாதவனாகவே நிற்பன். ஆகலின், உப்பின் கடினநிலை தண்ணீரிற் கரைந்துவிடுமாறு போல, உயிர், யான் எனது என்னும் உணர்வு திருவருளில் கரைந்து போகும்படி, முதல்வன் அருள்வழி நிற்பின், அவன், அந்நிலையில் உயிர்க்கு இற

வாத இன்ப அன்பை விளைவித்து, அவ்வன்பே தானாக வெளிப்பட்டு, ஞானானந்த மயமாய் விளங்குவன். இவ்வனுபவ உணர்வில் உயிர் வேறு முதல்வன் வேறு எனப்பிரித்தறிய வாராதபடி, முதல்வன் உயிரோடு உடனாய் நின்று உணர்த்திவரும் உபகாரம் புலனாகும். இங்கு முதல்வனாகிய காட்சிப்பொருளும், உயிராகிய காண்பானும், அனுபவ உணர்வாகிய காட்சி உணர்வும், இக்காட்சியை உயிர்க்குத் தரும் திருவருள் ஒளியாகிய காட்டும்—ஆகிய நான்கும் இருப்பினும், அவை இவ்வாறு பகுத்துணரப்படாது, காட்சிப் பொருள் ஒன்றே மேம்பட்டு ஏனையவற்றைத் தன்கண் அடங்கக் கொண்டு விழுங்கி நிற்கும். திருவுந்தியில் **"உடன் ஆவர், அல்லது தெள்ள அரியர்"** என்பதற்கு இதுவே கருத்தாகும். உடன் ஆதல் என்பது பிரிப்பின்றி நின்று உயிரின் இச்சை அறிவு செயல்களைச் செலுத்தித் தன்னை விடயிக்குமாறு செய்தல். இது **தாயாய் முலையைத் தருவானே** என்னும் திருவாசக உருவகம் பற்றித் தெளியப்படும். தெள்ள அரியர் என்றது உணரப்புகும் உயிர், தன்னை வேறாக நிறுத்தி முதல்வனைவேறு காணப்படும் பொருளாகக் குறித்துக் காணுதல். இக்காட்சிக்கு அரியர் என்றதனால், மத்துவர் கூறும் பேதவாதம் இங்கு இல்லை; **உடனவர்** என்றதனால், சங்கரர் கூறும் **'கேவலம் ஒன்று'** என்னும் ஏகாத்மவாதமும் இங்கு இல்லை; ஆராய்ச்சி நிலையைக் கடந்த அனுபவ நிலை ஆதலினால், இராமாநுசர் முதலாயினர்கூறும் 'விசேஷணமாக அடுத்து நிற்றலின் ஒன்று' என்னும் விசிட்டாத்துவிதமும் அன்று; பின், ஆன்மா பாசங்களின் நீங்கிய சுத்தநிலையில் இரண்டாகப் பிரிந்து தோன்றாமை பற்றியது. ஆதலின், இவ்வியைபு **சுத்தாத்துவிதம்** எனப்படும் மகாவாக்கியத்துள், தத் (அது) என்னும் சொல்லாற் குறிக்கப்படும் முதற்பொருளும், த்வம் (நீ) என்பதனாற் குறிக்கப்படும் **ஆன்மா**வும் முத்திநிலைக்கண் இங்குத் திருவுந்தியுட் கூறியபடி உடனாய் (அநந்நியமாய், அத்துவிதமாய்) நிற்கும் நிலை அஸி (ஆகிறாய் அல்லது இருக்கிறாய்) என்னும் பயனிலையால் குறிக்கப் பட்டது என்பது சித்தாந்த சைவர்கள் கொள்கை.

இங்ஙனம் முதல்வன் பசுபாசங்களைத் தன் நிறைவில் அடங்கக்கொண்டு அவற்றை இயக்கும் நிலை **ஔபச்சிலேடிக வியாபகம்** என்னுந் தொடரால் வடநூல்களுள் வழங்கப்படும். அக்கருத்துத் தமிழ் நூல்களில் உடனிலை (ஒருங்கு நிற்றல்) என்பதனால் குறிக்கப்படும்.

இனி, இவ்வனுபவ நிலையைப் பெறுவதற்கு வழியாக உள்ள இரண்டு நிலைகள் கூறப்படுகின்றன. ஒன்று ஆதாரயோகம் என்பது; மற்றொன்று நிராதாரயோகம் என்பது. ஆதாரயோகப் பயிற்சியின் முதிர்வில் நிராதார யோகம் பயிலத்தக்கது.

ஆதாரயோகம் என்பது மூலாதாரம் முதலிய இடங்களில் ஆகமங்களில் கூறியுள்ளபடி தாமரை, அதன் இதழ்கள், அங்குள்ள எழுத்துக்கள், பொகுட்டின்மேல் உள்ள மூர்த்தி என்பவற்றை மனத்தால் கற்பித்துத் தியானித்து, உணரப்படும் பொருள் வேறு உணர்வோனாகிய தான் வேறு என்னும் பகுப்பு உணர்வு தோன்றாதபடி நிற்கும் சமநிலையைப் பெறப் பழகுதல் ஆகும். முதல்வன் திருவருள் கற்பனைகளைக் கடந்த உள்பொருள் ஆதலால், அஃது இவ்வாதார யோகத்திற்கு அப்பாற்பட்டதே. ஆதார யோகத்தின் பின் நிராதார யோகத்தைப் பழகவேண்டும்.

நிராதார யோகமாவது முதல்வனது குணமாகிய திருவருளொளியைத் தலைப்பட்டு அதன் வியாபகத்தில் அடங்கி நிற்றல் ஆகும். இந்நிலையைப் பெறுதற்குத் திருவைந்தெழுத்தின் பொருள் உணர்ந்து அதைச் சுத்தமானதமாகக் கணித்தல் வேண்டும். அங்ஙனம் கணிக்கப் புகும்போது மனம் ஒருங்குதல் பற்றி அறியாமை மேம்பட்டு உறக்கநிலை வந்து விடக்கூடும். அல்லது மனம் முதலிய கருவிகளின் தொழிற்பாடுகள் பலவாகப் பெருகிக் கற்பனை உணர்வுகள் தோன்றுதல் கூடும். இவற்றுள் முன்னையது கேவலம் எனப்படும்; பின்னையது சகலம் எனப்படும். கேவல நிலையை இரவு எனவும் சகல நிலையைப் பகல் எனவும் குறிப்பது நூல்வழக்கு. திருவைந்தெழுத்தை எண்ணும்போது கேவலம் சகலம் என்னும் இரண்டும் நிகழாமல் இருக்கும்படி பழகவேண்டும். அப்பழக்கத்தில் திருவருள் வெளிப்பட்டு விளங்கும். அத்திருவருளைச் சார்பாகப் பெறும் நிலையே மீதானம் எனப்படும். இதுவே சுத்தநிலை எனவும் இராப்பகல் அற்ற இடம் எனவும் முதல்வன் திருவடி எனவும் மெய்ந்நூல்களுள் குறிக்கப்படும்.

இனி, சுத்தமானதமாக எண்ணும்போது திருவைந்தெழுத்தின் பொருணிலையே உணரப் படுவது; அதன் ஒலிவடிவோ, வரிவடிவோ, அல்லது அதனாற் குறிக்கப்படும் மூர்த்தி வடிவோ அன்று. ஞான மெய்ந்நெறியைக் காதலிப்போர் திருவைந்தெழுத்தைச் "சிவாய நம" என்னும் அடைவுபடக் கருதுவர். இவ்வடைவில் ஐந்தெழுத்துக்களும் முறையே (1) பேரின்பவடிவ முதற்பொருள், (2) அம்முதற்பொருளின் குணமாகவும் சொரூபமாகவும் இருந்து முதற்பொருளைக் காட்டவல்ல திருவருள் ஒளி, (3) சகல கேவலப்பட்டு அவற்றைவிட்டுத் தூய சுத்தநிலை பெற முயலும் உயிர், (4) உயிரின் உலக உணர்வாகிய சகலத்திற்குக் காரணமாகிய மாயாகாரியங்களும் அவற்றின் பின்னாக மறைந்து நிற்கும் முதல்வன் உபகாரமும், (5) கேவல நிலைக்குக் காரணமாகிய அறியாமையை விளைத்து நிற்கும் மூலமலம் என்னும் ஐந்து பொருள்களை முறையே குறிக்கும்.

கேவலம் சகலம் என்னும் அழுக்கு நிலையின் நீங்கிச் சுத்தநிலையைத் தலைப்படுதற்கு மேற்கூறியபடி ஈசன், அருள், ஆவி, திரோதம், மலம் என்னும் அஞ்சு பொருள்களையே அஞ்செழுத்தாக அறிந்து, அவற்றுள் ந, ம என்னும் சகல கேவலம் நீங்கத் திருவருள் வெளிப்பாட்டை விழைந்து நிற்பதே அதனைப் பெறுதற்கு உரிய உபாயம் ஆகும்.

இவ்வுபாயத்தால், புருவ நடு முதலிய அவத்தைத் தானங்களில் பொருந்திச் சகலத்தில் சகலம், சகலத்தில் கேவலம் என்னும் அவத்தைகளை எய்தி வந்த தம்மை யாவர் ஒருவர் அருளொளி நிறைந்த முற்றம் எனப்படும் துரிய நிலைக்கண் உயர்த்தப் பெற்றாரோ அவரே மிகச் சிறந்தோராய்த் தவமுதல்வர் எனப் புகழப்படுவர்.

இவ் வருணிலையைத் தலைப்பட்டுப் பேச்சற நின்றார்க்கு முதல்வன் பேரின்ப சொரூபமாய் வெளிப்பட்டு மும்மல வாதனையை நீக்கி, மீளப் பிறவா நன்னிலை எய்தும்படி செய்வன்.

இவ்வாறு திருவருள் உண்மையினையும் அதன்வழி நின்று பேரின்பம் அடையும் முறையினையும் பிற சமயங்களிற் காண்டல் அரிது. அவையெல்லாம் முன்னர்த் தழைத்து வளர்ந்து பின் விளைவு உண்டாக வேண்டிய காலத்தில் சாவியாய்ப் போகும் பயிர்போல், ஆரவார மாத்திரையாய் மக்களைக் கவர்ந்து, பயன் தராது ஒழிவன ஆகலின், அவற்றில் சென்று வாழ்நாளை வீண் நாளாகக் கழிக்க வேண்டா.

(தொடரும்)

---

## செய்திகள்

**தெத்தி,** (நாகப்பட்டினம் வட்டம்) அக்கினீசுவரர் கோயிலில் 9—3—60-ல் ஆலயத்திருப்பணி துவக்கவிழா நாகை உதவி ஆணையர் திரு. என். சி. நாராயணசுவாமி பி.ஏ., அவர்களால் நடத்தி வைக்கப்பெற்றது. நகரப்பெருமக்கள் வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தார்கள்.

**சிதம்பரம்,** தில்லை கோவிந்தராஜசுவாமி கோயிலில் மாசிமக மண்டகப்படி உற்சவம் 12 முதல் 18—3—60 வரை சிறப்பாக நடைபெற்றது.

**காஞ்சிபுரம்,** ஏகாம்பரநாதசுவாமி கோயிலில், பங்குனி உத்திரப்பெரு விழா 30—3—60 முதல் 13—4—60 வரை சிறப்பாக நடைபெறும்.

**குளித்தலை கடம்பர்கோயில்,** கடம்பவனேசுவரர் கோயிலில் 9—3—60-ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ். அவர்கள் முன்னிலையில் திருமுறைக்கோயில் பிரதிஷ்டையும், ஸ்ரீ அருணகிரிநாதர் சிலாவிக்கிரகப் பிரதிஷ்டையும், தலப்பாடல்கள் கல்வெட்டுத் திறப்பு விழாவும், திருப்பணி துவக்கவிழாவும் நடைபெற்றது.

**திருமோகூர்,** காளமேகப்பெருமாள் கோயிலில் 13—3—60-ல் யானைமலை கஜேந்திர மோட்ச உற்சவம் நடைபெற்றது. அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. ஏ. சக்கரை பி.ஏ.,பி.எல்., அவர்களும் கலந்துகொண்டார்கள்.

# பத்திராசல இராமதாசர்

இன்றைய ஆந்திர பிரதேசத்தின் ஐதராபாத்துப் பகுதியிலே இராமதாசர் தோன்றினார். அப்போது தானேஷா என்ற முகம்மதிய மன்னன் அரசோச்சினான். அம்மன்னனிடத்தில் அமைச்சர்களாயிருந்த மாதன்னர், அக்கன்னர் என்பாரின் மைத்துனர் இலிங்கன்னர் நெற்கொண்டபல்லி என்னும் கிராமத்தில், காமாம்பாள் என்ற அம்மையாருடன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வந்தார். இவர்கட்கு மகப்பேறின்மையால், திருமாலைத் தொழுது வந்ததன் பயனாக, அம்மங்கையர் திலகம் மகவொன்றை ஈன்றாள். மறையவர்கள் ஒன்றுகூடி, அம்மகவிற்கு கோபன்னன் என்னுந் திருநாமமிட்டார்கள். அக்குழந்தையைப் பெற்றோர் செல்வமாக வளர்த்து வந்தனர். சிலகாலம் கழித்து கோபன்னனைப் பள்ளியில் சேர்த்துக் கலை பல பயிற்றுவித்தனர். இளம்சிறாரும் தன் பெற்றோரைப் போன்றே இளமை முதல் திருமாலிடத்து பேரன்பு கொண்டு அப்பெருமானையே மனத்தில் எண்ணியின்புற்றிருந்தார்.

கோபன்னர் ஒருமுறை இராமாயணச் சொற்பொழிவு ஒன்றைக் கேட்டார். அன்று முதல் இராமாவதாரக் காலத்தில் பிறந்து அப்பிரானுக்குத் தொண்டாற்ற முடியாது போயிற்றே எனப் பெரிதும் வருந்தினர். இதனால் அவர்தம் பக்தியின் சிறப்பு நன்கு விளங்குகிறது. சில நாளில் அவரது தாய் தந்தையர் விண்ணுலகெய்தினர். கோபன்னர் தனித்தவராயினர்.

பின்னர் தம் முன்னோர் வழிபட்டு வந்த இராம இலக்குமணத் திருவுருவங்களைக் குளத்திற்குக் கொண்டுபோய் திருமுழுக்காட்டி, வழிபடுவதை வழக்கமாய்க் கொண்டார். ஒரு நாள் கோபன்னர் திருவுருவங்களைக் குளத்தின் கரைமீது வைத்துவிட்டு தான் நீராடித் திரும்பிப் பார்க்கையில் அச்சிலைகளைக் காணாது பெரிதும் வருந்தினார். அவ்வமயம், கரைமேல் இருந்த கபீர்தாசரைக் கண்டார். அவரிடம் கடவுள் திருவுருவங்கள் கரந்த செய்தியை மனம் கரையக் கூறிக் கதறினார். “உலகில் தோன்றிய எல்லாப் பொருள்களும் அழியும். மக்கள் தோற்றுவித்த எதுவும் நிலையில்லாதன” என்று இவ்வுலக நிலையாமையை எடுத்து விளக்கினார் கபீர்; மேலும் கரந்த அத்திருவுருவங்களைக் குளத்தினின்றும் வரவழைத்துக் காட்டி, தாரகமான இராமநாமத்தை உபதேசித்துச் சென்றார்.

கோபன்னர் இல்லறத்தை விரும்பாதவராயினும், அவர்தம் உறவினர் தங்கள் குலத்திலேயே ஒரு பெண்ணைப் பார்த்து அவரை வற்புறுத்தி மணத்தை முடித்தனர். கோபன்னர் இல்லறத்தை இனிது நடத்தி வருகையில் அவர் மனைவி ஓர் ஆண் மகவை ஈன்றாள். சுந்தரமான மகவிற்குச் சுந்தரன் என்றே பெற்றோர் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். கோபன்னரும் அவர்தம் இல்லக்கிழத்தியாரும் அடியார்கட்கு அமுது படைத்தலில் பலகாலம் கனிவுமிக்க ஈடுபாடு காட்டினர். ஒருநாள் இளம்பிள்ளையான சுந்தரன் கஞ்சித் தொட்டியில் வீழ்ந்து இறந்தான். அடியவர்கள் இதனை அறிந்தால் அமுதருந்தாரென்று எண்ணி, தாய் தன் கணவர்க்கு அதை வருந்தி அறிவித்தாள். கோபன்னர் இராமபிரான் திருக்கோயிலுட் சென்று செய்த பிரார்த்தனையின் பயனாக, இறந்த மகன் உயிர்பெற்று எழுந்தான். அன்புருவான ஒரு உளம் வருந்த ஆண்டவன் பொறுத்திருக்க மாட்டான் என்பதை இவ்வரலாறு அறிவிக்கின்றது அல்லவா?

பக்தியிற் சிறந்த கோபன்னர் இராமச்சந்திரமூர்த்தியின் திருவுருவைச் சேவிக்க விரும்பி, முனிவரான கபீரிடம் அது குறித்து முறையிட்டார். அஃது எளிதன்று என்று அறிவித்தார் கபீர். கோபன்னர் எவ்வாறேனும் சேவிக்க வேண்டுமெனப் பெரிதும் வேண்ட, கபீர்தாசர் “நாளைப் பகல் பதினேழு நாழிகைக்குள் காகுத்தன் உனக்குக் காட்சி கொடுப்பான்” என்றியம்பிச் சென்றார் கோபன்னர் இராமச்சந்திரமூர்த்தியின் வரு

கையை எதிர்நோக்கி வீட்டை நன்கு அலங்கரித்துப் பீடம் ஒன்றையும் அவர்பொருட்டு அமைத்து வைத்திருந்தார். எதிர்பாராத விதமாக ஒரு எருமை மாளிகையில் நுழைந்து வீட்டை அசுத்தம் செய்தது. பீடத்தைச் சிதைத்தது. கோபன்னர் அது கண்டார்: கோபம் கொண்டார்; தடியை எடுத்தார்; எருமையைப் புடைத்தார். மாபெரும் எருமையும் ஓடி மறைந்தது. காகுத்தன் காட்சி தாராமையையும், எருமை செய்த செய்தியையும் மறுநாள் கபீரிடம் கொதித்த மனத்தோடு கூறினர் கோபன்னர். 'அந்த எருமைதான் இராமன், அதை அறியாமல் தடிகொண்டடித்தாய்' என்று கபீர் அறிவித்தார். உள்ளதுணர்ந்த கோபன்னர் உள்ளம் உடைந்தது. தன் அறியாமைக்குப் பெரிதும் மனம் வருந்தி, "பாவியேன் கடவுளென்று உணராது எருமையின் வடிவத்துடன் வந்த அப்பரம் பொருளைத் தடிகொண்டு அடித்து ஓட்டினேனே! அத்தகைய தீச்செயலைச் செய்த இக் கை அற்று வீழாது இன்னும் இவ்வுடலுடன் பொருந்தியிருக்கின்றதே! இஃது என்ன விந்தை! இப்பாவத்தை அடியேன் எவ்வாறு ஒழிப்பேன்" என்று கண்ணீர்விட்டுக் கதறினர்.

பக்தியிற் சிறந்த கோபன்னர் அடியவர்கட்கு அன்னமிட்டுத் திருவருள் சோதனையால் செல்வமனைத்தையும் இழந்து தான் பெரிதும் வருந்தலாயினர். இந்நிலையில் செய்வது தோன்றாமல் திருமாலைத் தொழுதார். அப்பரந்தாமர், "ஐதராபாக்கத்தரசரான தானேஷாவைக்காண், தாசில்தார் உத்தியோகம் பெறுவாய்" என்றார். பெருமானர் வாக்கிற்கிணங்க, தானேஷாவைக் கண்டு பத்திராசலத்தில் தாசில்தார் உத்தியோகம் பெற்று அத்திருப்பதியை அடைந்தார். பத்திராசல மக்களனைவரும் கோபன்னர் தாசிலாக வந்தது குறித்துப் பெரிதும் மகிழ்ந்தனர்.

கோபன்னர் தாசில் உத்தியோகத்தைப் பத்திராசல மக்கள் பாராட்டுகின்ற அளவிலேயும், மன்னர் தானேஷா புகழ்ந்து போற்றுகின்ற முறையிலேயும் திறம்பட நடாத்தி வந்தார். பத்திராசல மலைமீதுள்ள இராமபிரான் திருக்கோயிலைக் கண்டு, அதன் சீர்கெட்ட நிலைக்குக் காரணம் வினவ, அவ்வூர் மக்கள் "இவ்வூருக்குத் தாசிலாக என்னுடைய பக்தன் ஒருவன் வருவான், அவன் இக்கோயிலைப் புதுப்பிப்பான்" என்று ஆண்டவன் அறிவித்ததாக ஆன்றோர் கூறக் கேட்டனம். அந்த பக்தர் என்று தோன்றுவாரோ என்று எதிர்நோக்கியுள்ளோம்" என்று கூறினர். அதுகேட்ட கோபன்னர் எம்பெருமான் திருவருள் இவ்வாறோ என்று வியந்தார். சிறந்த சிற்பிகளை வரவழைத்து ஆறு இலட்ச வராகன் செலவில் கோயில் திருப்பணியைச் செவ்வனே முடித்தார். இராமபிரான் திருப்பணியைச் செய்ததால் அவருக்கு **இராமதாசர்** என்ற பெயர் வழங்கலாயிற்று.

பெருமானிடத்துப் பேரன்புகொண்ட காரணத்தால், அரசனுக்குச் செலுத்த வேண்டிய பணம் என்பதையும் நினையாதவராய், ஆறு இலட்ச வராகனையும் கோயில் திருப்பணியிலே செலவு செய்தார்.

காலத்தில் பணம் வாராமையால் அரசரது ஏவலர் வந்தனர். சேரவேண்டிய பொன்னைக் கொடும் எனச் செப்பினர். இருப்பு இன்மையால் கோபன்னர் வருந்தினர். அவரைச் சிறையிலிட்டு பலவாறாகத் துன்புறுத்தினர். இதனையறிந்த அமைச்சர்களான அக்கன்னரும், மாதன்னரும் கோபன்னரைத் தமது குலத்தைப் புகழ்ந்து பாடின் அவரைச் சிறையிலிருந்து மீட்பதாகச் சொற்றனர். அதற்குக் கோபன்னர் "எம்பெருமானைப் பாடிய நாவால் மற்றெவரையும் பாடேன்" என்றால் அவர் பக்திக்கு ஈடாக எதனைக் கூறுதற்கியலும்.

இயம்பொணு இன்னலுக் கிடையிலும், இடையறாது இறைவனை வழுத்தியதால் திருமாலின் மனமிரங்கி, மாறுவேடம் பூண்டு மன்னர் தானேஷாவிடம் ஆறு இலட்ச வராகனையும் கொடுத்துவிட்டு, அம்மன்னனிடம் கைச் சீட்டு பெற்றுச்சென்றனர். அதன்பின் ஆண்டவன் அக்கைச் சீட்டைச் சிறைச்சாலையில் வைத்துவிட்டு மறைந்தார்.

வைகறையில் இராமதாசர் துயிலெழுந்ததும், திருமாலின் திருவிளையாடலைக் கண்டு பெரிதும் வியப்பெய்தி மட்டற்ற மகிழ்வெய்தினர். அரசர் தானேஷாவும் இராம இலக்குமணர் மாறுவேடம் பூண்டு வந்ததை அறி

யாததைக் குறித்து மிகவும் வருந்தினு ரெனின், அவ்வரசர் எம்மதமும் சம்மதம் என்ற பெருநோக்கு படைத்தவர் என்று நன்கு விளங்கா நிற்கின்றது.

மன்னர் தானேஷா இராமதாசரை முறைப்படி வணங்கி, அவரை முன்புபோல் பத்திராசல தாசிலாகப் பதவி வகித்து, அதன் வருவாயனைத்தையும், இராமபிரானுக்கும் அடியவர்கட்கும் செலவிடுமாறு கூறி, ஆறு இலட்ச வராகனையும் திருப்பித் தந்தார். அரசன் ஆணைப்படி பத்திராசலம் சென்றார். அங்கே ஆண்டவனை வேண்டியதற்கிணங்க, விமானம் ஒன்று வர அதில் ஏறிச்செல்ல, வானவர்கள் பூமாரி பொழிந்தனர். மானில மக்களனைவரும், சிரத்தின்மீது கரத்தை உயர்த்தி வணங்கா நின்றனர்.

இராமரிடத்து இடையருப் பேரன்பு பூண்டு தொழுததாலும், அவர்தம் கோயிலுக்குத் திருப்பணி செய்தமையாலும், கோபன்னரை இராமதாசர் என்றழைத்தனர். இராமதாசரின் புகழ் என்றும் நின்று நிலவுமென்பதில் ஐயமில்லை.

---

## செய்திகள்

கள்ளங்குறிச்சி, கலியுகவரதராஜப்பெருமாளுக்கு 1369-ம் பசலி பிரம்மோற்சவம் 5—4—60 முதல் 14—4—60 வரை சிறப்பாக நடைபெறும்.

திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி கோயிலில் மாசித்திருவிழா 2—3—60 முதல் 13—3—60 வரை சிறப்பாக நடைபெற்றது.

திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி கோவியில் 8—3—60-ல் அறநிலையத்துறை ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கீழ்க்கண்ட விழாக்களில் கலந்து கொண்டார்கள். காலை 9 மணி. திருச்செந்தூர், நாகப்பழச்சாலை அருகில் உள்ள கோயில் நிலத்தில் இறைபணியாளர்கள் குடியிருப்புக் கட்டிடங்களுக்கு அடிகோலுதல். காலை 10 மணி, இவ்வாலய முன்னாள் தர்மகர்த்தர் திரு. ஐ. எஸ், முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களது உருவப்படத்தைத் திறந்துவைத்தல்.

திருச்செங்கோடு, தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் 12-வது மாநில மாநாடு 19—3—60 முதல் 21—3—60 வரை திருக்கைலாயநாதர் ஆலயத்தில் சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார், ஸ்ரீ பாரத்தசாரதி பட்டாச்சாரியார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் கனம் எம். பக்தவத்சலம், டி. எஸ். பட்டாபிராமன், எம்.ஏ.பி எல்., எம்.பி., டி. எம். காளியண்ணன், எம்;ஏ.. பி.காம்,, எம். எல், ஏ., கே. கே. சுப்பண்ண கவுண்டர், ஆர். பார்த்தசாரதி பட்டாச்சாரியார், பி. ஜி. கருத்திருமன், பி.எஸ்ஸி., எம்.எல்.ஏ., கே. என். சுப்ரமணிய கவுண்டர், எம்.எல்.ஏ., ஆர். கந்தசாமி, எம்.எல்.ஏ., எம். என். சாம்பசிவ சிவாசாரியர், கே. பழனியப்பன் பார்-அட்-லா, பச்சையண்ணன், பரசுராமகுருக்கள், விருத்தகிரீசன், எம். ஏ., பி.டி. முதலியவர்கள் கலந்துகொண்டார்கள். இன்னிசை நிகழ்ச்சியோடு மாநாடு முடிவுற்றது.

சென்னை, திருமயிலை, கபாலீசுவரர் கோயிலில் 1-4-60 முதல் 13-4-60 வரை பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

பரிதிரியப்பர் கோயில், பாஸ்கரேசுவரர் கோயிலில் 1-4-60 முதல் 10-4-60 வரை பங்குனி உத்திர பிரம்மோற்சவம் சிறப்பாக நடைபெறும்.

திருமண்டங்குடி, அரங்கநாதப் பெருமாள் கோயிலில், அறநிலையத்துறை, அமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் முன்னிலையில் 13-3-60-ல் மண்டலாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது,

# எறிபத்த நாயனுர்

இலைமலிந்த வேல்நம்பி
எறிபத்தர்க் கடியேன்

—சுந்தரர்.

ஊர்மதில் மூன்றட்ட உத்தமர்க்
கென்றே ருயர்தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன்
தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொளும் பாக
ருடறுணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு
வூரிலெறி பத்தனே

—நம்பியாண்டார் நம்பி.

சோழ மன்னர்கள் முடி சூடிக் கொள்ளும் ஐந்து நகரங்களில் ஒன்று கருவூர். அந்த நகர் தேவ நகரத்தையும் கீழ்படச் செய்த தென்பதை,

மாமதில் மஞ்சு சூழும்
மாளிகை நிரைவிண் சூழும்
தூமணி வாயில் சூழும்
சோலையில் வாசம் சூழும்
தேமலர் அளகம் சூழும்
சிலமதி தெருவு சூழும்
தாமகிழ்ந் தமரர் சூழும்
சதமகன் நகரம் தாழ

என்று சேக்கிழார் பெருமான் அழகுபடப் புகழ்கின்றார். அத்தலத்தில் பசுபதீசர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். அது திரு ஆனிலை என்று பெயருடையது. அக்கோயில் இறைவனைமுறையாக வழிபட்டு வருபவர் எறிபத்தர் என்பார்; சைவ ஒழுக்கம் உடையவர்; அடியார்களுக்கு இடையூறு வாராமல் காப்பதற்கு எப்போதுமே கையில் மழுவாயுதம் ஏந்தி வருபவர்.

கருவூர்த் திருநகரில் சிவகாமி ஆண்டார் என்ற அன்பர் ஒருவர் இருந்தார். அவர் நாள் தோறும் மலர் பறித்து இறைவனுக்கு மாலை சாத்தும் திருப்பணியைச் செய்து வந்தார். வழக்கம்போல் ஒரு நாள் அதிகாலையில் எழுந்து, நீராடி, வாய்கட்டி, நந்தவனம் சென்று அன்றலர்ந்த பூக்களைப் பறித்து, பூக்கூடையில் நிறைத்து அதை ஒரு தண்டில் தாங்கிக் கொண்டு விரைந்து இறைவன் திருக்கோயில் நோக்கி வந்துகொண்டிருந்தார். அன்று மகாநவமியின் முன்னாள். புகழ்ச் சோழ மன்னனுடைய பட்டத்து யானை ஆற்றில் நீராடி மிக்க களிப்புடன் வந்துகொண்டிருந்தது. முன் சென்று கொண்டிருந்த சிவகாமி ஆண்டாரின் பூக் குடலையைப் பறித்துச் சிந்தியது. அது கண்ட பாகர் அதனை விரைவில் செலுத்திப் போயினர். தண்டினால் அதை அடிக்க அதன் பின் ஓடிய சிவகாமியாண்டாரும் முடியாமற் போய்க் கீழே விழுந்தார்; எழுந்தார்.

களியா னையனீ ருரியாய் சிவதா!
எளியார் வலியா மிறைவா சிவதா!
அளியா ரடியா ரறிவே சிவதா !
தெளிவா ரமுதே சிவதா ! சிவதா !

என்று ஓலமிட்டு அலறினர். அவ்வமயம் அவ்வழியே வந்த எறிபத்தர் காதில் அந்த அறைகூவல் கேட்டது. "அடியார்க்கு யானை வழிப்பகை யன்றோ? அதனை வெட்டி வீழ்த்துகிறேன்" என்று கூறி, சிவகாமியாண்டாரை "அந்த யானை எப்படிச் சென்றது" என்று கேட்டார். "இறைவர்க்காகும் பூக்களைச் சிந்திய யானை பிழைத்து இத் தெருவே சென்றது" என்றார் சிவகாமியாண்டார். "அது இனி பிழைப்பது எங்கே" என்று கூறி அது சென்ற வழியே காற்றினும் கடிது சென்றார்; யானையைக் கண்டார்; அதன் துதிக்கை அற்றுக் கீழே விழும்படி மழுவால் துணித்தார்; பாகரையும் குத்துக் கோற்காரரையும் கொன்றார்.

இறந்தவர் போக எஞ்சிப் பிழைத்தோர் ஓடோடியும் சென்று அரசரிடம் பட்டத்து

யானையும் பாகரும் பட்டதை அறிவித்தனர். மன்னர் கடுஞ்சினங் கொண்டார். யார் என்றும் கேளாது உடனே நால்வகைச் சேனையுடன் புறப்பட்டு யானையும் பாகரும் இறந்து கிடந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார். குதிரை மேல் வந்த அரசர் பகைவர் எவரையும் கண்டிலர். சிவனடியார் கையில் மழுவுடன் நிற்பதைக் கண்டார். அவர் யானையைக் கொன்றிருப்பார் என்று எண்ணுதவராய், "வென்றவர் யாரே" என்று வெடிபட முழங்கக் கேட்டார். "மழுவேந்தி நிற்கும் இவரே யானையைக் கொன்ருர்" என்று அருகிலுள்ளோர் கூறினர். "சிவனடியார்கள் பிழைபடின் அன்றிக் கொல்லமாட்டார்கள்; ஏதோ தவறு நடந்து விட்டது" என்று மனதில் எண்ணி, சேனைகளைப் பின்னே நிறுத்திவிட்டு, குதிரையை விட்டிறங்கி, அடியார் முன் சென்று தொழுது "ஐயனே! நான் அங்கு கேட்டதொன்று; இங்கு காண்பது வேறு; யானை செய்த குற்றத்திற்கு அதனையும் பாகரையும் கொன்றது போதுமோ" என்று பணிந்து நின்ருர். நாயனர், "சிவகாமி ஆண்டார் கொண்டு சென்ற பூக்கூடையைப் பறித்துச் சிந்தியதாதலின் இவ் யானையையும், அதனை விலக்காது நின்ற பாகரையும் கொன்றேன். இதுவே நிகழ்ந்தது" என்று கூறினர். அரசர் அஞ்சி "அரனடியார்க்கு இழைத்த பெரும் பிழைக்கு இது போதாது; என்னையும் கொல்ல வேண்டும்" என்றுகூறித் தமது உடைவாளை எடுத்து நீட்டினர். அரசருடைய பேரன்பை அறிந்த எறிபத்தர் அவ்வாளைக் கையில் வாங்க மனமில்லையாயினும் அரசர் தாமே மாய்த்துக் கொண்டால் என் செய்வதென்று பயந்து அதை வாங்கினர். "அன்பரால் கொல்லப் படும் பேறு பெற்றேன்" என்று அரசர் மனமகிழ்ந்தார். நாயனர், "வாளைக் கொடுத்த அன்பர்க்கு தீங்கு நினைத்தேன் என்ற எண்ணத்தை விளைவித்தேன்; முன்னே என் உயிரைப் போக்கிக் கொள்வதே முடிபு" என்று எண்ணி, வாளைக் கழுத்தில் பூட்டி அரியலுற்ருர். அது கண்ட சோழ மன்னர் "அந்தோ கெட்டேன்" என்று உடனே எறிபத்தர் கையினையும் வாளையும் இறுகப் பிடித்துக் கொண்டார்; தொண்டர் வருந்தி நின்ருர். "அன்பு மிக்கவர்களே! உங்களுடைய திருத்தொண்டின் சிறப்பை உலகறியச் செய்வதற்கே யானை பூக் கூடையைச் சிந்த செய்தது" என்று வானத்தினின்றும் பேரொலி எழுந்தது. அவ்வளவில் யானையும் பாகரும் எழுந்தனர். சிவகாமியாண்டார் பூக்கூடை நிறைந்தது; எறிபத்தர் அரசரைப் பணிந்தார். அரசர் அடியவரைப் பணிந்தார். எல்லோரும் வானின்றெழுந்த திருவாக்கினைத் துதித்தனர்; மன்னர் யானை மீதேறித் தன் கோயில் புக்கார்; சிவகாமியார் தம் தொண்டின் மேற் சென்ருர்; எறிபத்தர் தமது திருப்பணி நோக்கி நடந்தார். இவ்வாறு பலகாலம் வன்தொண்டுசெய் செய்திருந்த எறிபத்த நாயனர் திருக்கயிலையில் கண நாயகராய் விளங்கும் பேறு பெற்ருர்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் எறிபத்தர் வரலாற்றை ஐம்பத்தேழு பாடல்களில் மிகவும் நயம்பட எடுத்தோதியுள்ளார். "தேனரும் தண்பூங்கொன்றைச் செஞ்சடையவர் பொற்ருளில் ஆனத காதல் அன்பர் எறிபத்த அடிகள்" என்று அழகாகப் போற்றிப் புகழ்கிருர்.

திருமருவு கருவூரா னிலையார் சாத்துஞ்
  சிவகாமி யார்மலரைச்
    சிந்த யானை
அரனெறியோ ரெறிபத்தர் பாகரோடு
  மறவெறிய வென்னுயிரு
    மகற்றீ ரென்று
புரவலனுர் கொடுத்தபடை யன்பால்
  வாங்கிப் புரிந்தரிவான்
    புகவெழுந்த புனிதவாக்கால்
கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார்
  தாமும் கணநாத ரதுகாவல்
    கைக்கொண்டாரே.

—உமாபதி சிவாசாரியார்.

[எறிபத்த நாயனர் திருநட்சத்திரம்—மாசி அத்தம்.]

---

திருவிழிமிழலை, வீழிநாதப் பெருமான் ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானுக்கு 29-3-60-ல் 7-வது ஆண்டு சிறப்புவிழா நடைபெற்றது.

# கண்ணன் பிறந்தான்–2

(பி. ஸ்ரீ.)

ஆவணி மாதம் தேய்பிறையில் ரோகிணி நட்சத்திரத்தில் அஷ்டமி திதியில் இரவு விருஷபலக்கினத்தில் எல்லாம் வல்ல இறைவன் தேவகியின் கர்ப்பத்திலிருந்து நாலு கைகளோடும் சங்குசக்கரங்களோடும் பிறந்தான் என்று ஸ்ரீமத் பாகவதம் தெரிவிக்கிறது.

## தீமையே பூமிக்குப் பாரம்

அரசர்களும் அசுரர்களாகி உலகத்தை ஹிம்ஸிக்க அந்தப் பாரத்தைத் தாங்கமாட்டாமல் பூமிதேவி பசுவடிவில் படைப்புக் கடவுளான பிரமனிடம் போய் முறையிட்டுக் கொண்டாளாம். பிரமன் அந்தப் பசுவின் கண்ணீர் சொரியும் முகத்தைக் கண்டான், அந்தப் புலம்பலையும் கேட்டான். தேவர்களையும் சிவபெருமானையும் அந்த மாநிலப்பசுவையும் அழைத்துக்கொண்டு பாற்கடலின் கரையை அடைந்தான். தோத்திரம் செய்தான்.

பிரமனுடைய சமாதிநிலையில் வானொலி ஒன்று எழுந்தது. 'பூமியின் வேதனை பரம புருஷனால் ஏற்கெனவே அறியப்பட்டது தான்' என்று சொல்லிற்று அந்த வாக்கு. 'தேவாதிதேவன் தன் காலசக்தியைக்கொண்டு பூமிபாரத்தைக் குறைப்பவனாகிப் பூமிமீது சஞ்சரிப்பான், நீங்களும் உங்கள் சக்திகளுடன் யாதவர்களுக்கிடையே பிறவி எடுங்கள், ஓ தேவர்களே! பசுக்களாய்ப் பிறப்பீர்கள், முனிவர்களே! தெய்வப் பெண்களும் நிலத்தில் பிறந்து நெடுமாலைப் பூசிப்பார்கள். ஆதிசேஷன் என்ற அனந்தன் பகவானுக்கு முன்னே பிறப்பான். மாயை என்ற சக்தியும் உடன்பிறந்து உதவி செய்வாள்' என்றான் பிரமதேவன்.

தியானவாசலைத் திறந்துகொண்டு சமாதி நிலையில் தான் கேட்ட அந்த அசரீரிவார்த்தையைப் பிரமன் எல்லாருக்கும் எடுத்துச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டான். அப்போது மதுராபுரியில் (வடமதுரையில்) யாதவகுலத்து அரசனான சூரசேனன் ஆட்சி செலுத்தி வந்தான். அவனுடைய புதல்வனான வசுதேவன் கம்ஸனுடைய சகோதரியான தேவகியை மணஞ்செய்து கொண்டான். கம்ஸன் அசுரசுபாவமுள்ள அரசர்களில் ஒருவன், இவனுக்கு மருகனாகத் தேவகியின் புதல்வனாகப் பிறக்க வேண்டுமென்று திருமால் திருவுள்ளம் பற்றியிருந்த செய்தியைத்தான் பிரமதேவன் குறிப்பாகத் தெரிவித்தான் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பூமிதேவிக்கும்.

பகவானின் திருவுள்ளம் அசரீரி வாக்காகக் கம்ஸனுக்கும் அறிவிக்கப்பட்டது. நல்லவர்களுக்கு ஆறுதலாகக் கேட்கும் தெய்வக் குரல் பொல்லாதவர்களுக்கு எச்சரிக்கையாக ஒலிப்பதும் உண்டு. கம்ஸன் பலவகைச்சீர் வரிசைகளையும் கொடுத்துத் தன் சகோதரியையும் மாப்பிள்ளையையும் வீட்டில் விட்டு வருவதற்காக இரதத்தில் ஏற்றித் தானே அந்தத் தேரை ஓட்டிக்கொண்டு போனான். மங்களகரமாக மிருதங்கம், துந்துபி, சங்கு முதலியன ஒரே முழக்கமாய் முழங்கின.

குதிரையின் கடிவாளவார்களைக் கையில் பிடித்திருந்த கம்ஸனை யாரோ கூப்பிடுவதுபோல ஒரு குரல் கேட்டது. 'ஓ மூடனே, இந்த உன் சகோதரியின் எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறதே!' என்றது அந்தக் குரல். உடனே கத்தியை உருவினான் கம்ஸன்; தன் சகோதரியைக் கொல்லத் துணிந்தான்.

பிறகு வசுதேவனின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைத் தன்னிடம் ஒப்படைக்கவேண்டும்

என்ற நிபந்தனையுடன் அவர்களை அப்படியே விட்டுவிட்டான் கம்ஸன். ஆனால் நாரதர் வந்து கோபத்திற்குத் தூபம் போடவே, கம்ஸன் சகோதரியையும் மாப்பிள்ளையையும் விலங்கிட்டுச் சிறைவைத்தான். நல்ல முறையில் நடந்துகொள்ள விரும்பிய தன் தந்தையான உக்கிரசேன மன்னனையும் சிறைப்படுத்தி தானே முடிசூட்டிக்கொண்டு சாதுக்களை ஹிம்ஸிக்கத் தொடங்கினான். பூமிக்குப் பாரம் அதிகரித்தது.

## தீமை கலங்குகிறது

ஆறு குழந்தைகள் பிறந்தன தேவகிக்கு. பிறந்தவுடனே குழந்தையைக் கல்லில் மோதிக் கொன்றான் கம்ஸன். 'எட்டாவது குழந்தைதானே நம்மைக் கொல்லப் போகிறது' என்று சும்மா இருந்துவிடாமல் அதிஜாக்கிரதையாகவே நடந்துகொண்டான். தன் தீமைச் சுமையைக் குறைத்துக்கொண்டு தப்பிப் பிழைக்கும் வழியை இவன் தேடவில்லை.

ஏழாவது கர்ப்பமும் தரித்தாள் தேவகி. யமுனையாற்றின் அக்கரையில் இந்த வடமதுரைக்கு அப்பால் கோகுலம் என்ற ஆய்ப்பாடியில் வசுதேவனுடைய மூத்தமனைவி ரோகிணி வசித்து வந்தாள். அங்கேதான் நந்தகோபன் என்ற ஆயர் தலைவனும் தன் மனைவி எசோதையுடன் வசித்து வந்தான். தன்னுடைய யோகமாயை என்ற சக்தியை நோக்கிப் பகவான் 'அதோ பார் அந்த ஆய்ப்பாடியை, அங்கே நீ போய்ச் சேரவேண்டும். நானும் அங்கே வருவேன்' என்றார்.

'அங்கே போய் நான் என்ன செய்ய வேண்டும்?'

'இரண்டு காரியங்கள் செய்யவேண்டும். முதல்முதல் தேவகியின் ஏழாவது கர்ப்பத்தை ரோகிணியின் வயிற்றுக்கு மாற்றிவிடு; நான் தேவகியின் எட்டாவது குழந்தையாய்ப் பிறப்பேன்'

இரண்டாவதாக நான் செய்யவேண்டியது என்னவோ?'

'நீ நந்தகோபனின் வாழ்க்கைத் துணைவியான எசோதையின் கர்ப்பத்தில் பெண்ணாய்ப் பிறப்பாய்,'

தேவகியின் ஏழாவது கர்ப்பம் ரோகிணியிடம் போய்ச் சேர்ந்ததன் பலனாகப் பலராமன் பிறந்தான் கோகுலத்திலே. வடமதுரையிலோ தேவகியின் ஏழாவது கர்ப்பம் கலங்கிப் போய்விட்டதாக வதந்தி.

பிறகு எட்டாவது கர்ப்பமாகப் பிரவேசிக்கிறான் பகவான். தேவகியின் அழகும் ஒளியும் அதிகரிக்கின்றன. அந்தக் கர்ப்பத்திலுள்ள தெய்வத்தைத் தேவர்கள் கட்புலனாகாமல் வந்து தோத்திரம் செய்கிறார்கள்.

குழந்தை பிறந்ததும் அந்தப் பேரழகையும் பேரொளியையும் கண்ணுற்றுத் தாய் மகிழ்ந்து போகிறாள். நாலு கைகளையும் சங்குசக்கரங்களையும் கண்டு பகவானே தன் வயிற்றில் பிறந்திருக்கிறான் என்ற பெருமகிழ்ச்சியும் ஏற்படத்தான் செய்கிறது இவளுக்கு. எனினும் கம்ஸனை நினைத்ததும் 'ஐயோ!' என்று திடுக்கிடுகிறாள். கம்ஸனும் 'ஐயோ, என் சத்துரு பிறக்கப்போவது நிச்சயம் தான்!' என்று கலங்குகிறான்.

'கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற நெடுமாலே!' என்று திருப்பாவைச் செல்வியான ஆண்டாள் கோபியர் வாயிலாகக்கூவி அழைக்கிறாளல்லவா கண்ணபிரானை. கஞ்சனின் கொடுமை பிறர் வயிற்றில் நெருப்பென்ன நின்றது. 'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது ஒரு சூட்சும விதி. கம்ஸன் பிறர் நெஞ்சிலே இட்ட நெருப்பு இவனது கொடிய நெஞ்சிலே கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

## தெய்வச் செயல்

திட்டப்படி நடக்கிறது தெய்வச்செயல்; அதிசயமாகவே நடைபெறுகிறது. பிறந்த குழந்தை பேசுகிறது; தாய்க்கு ஆறுதல் சொல்லுகிறது. நாலு கைகளையும் திவ்ய ஆயுதங்களையும் கண்டும் 'தெயவத்தின் திவ்ய சொரூபத்திற்கு ஆபத்து வந்துவிடும்!' என்று கூட அஞ்சுகிறது தாயுள்ளம். 'இந்தச் சொரூபத்தை மறைத்துக்கொள், குழந்தாய்!' என்று வேண்டுகிறாள். உடனே அதிகக் கைகள் இரண்டும் ஆயுதங்களும் மறைந்து போகின்றன.

அதே சமயம் ஆய்ப்பாடியில் எசோதைக்குப் பெண்குழந்தை பிறக்கிறது. குழந்

தைக் கிருஷ்ணனை அவளிடம் விட்டு அந்தப் பெண்குழந்தையை இங்கே கொண்டுவர வேண்டுமென்று புறப்படுகிறான் வசுதேவன். விலங்கு அறுந்து விழுகிறது. மேக சஞ்சார மும் அந்த இருட்டும் யமுனையும் எல்லாம் வசுதேவனுக்குத் துணையாகின்றன. நதி வழி விட, வசுதேவன் தன் காரியத்தை இடையூறின்றி இனிது முடித்துக் கொள்கிறான்.

### 'உன்னைக்கொல்ல ஒளிந்து வளர்கிறான்!'

'குவா குவா' என்று குழந்தை அழுதது. கம்ஸன் நியமித்திருந்த காவலர்களின் காதில் விழுகிறது. சத்துருவைக் கொல்ல ஓடி வருகிறான் கம்ஸன் தன் கட்டிலிலிருந்து. அவிழ்ந்த மயிர்முடியன் தட்டித் தடுமாறிக் கொண்டு வருகிறான் பிரசவ வீட்டை நோக்கி.

'எங்கே அந்த எமனாகிய மருமகன்?' என்று கர்ஜிக்கிறான். 'உன் மருமகள்தான் இவள்! இந்தக் குழந்தையையாவது நான் வளர்க்கக் கூடாதா?' என்று 'குழந்தைப் பிச்சை' கேட்கிறாள் தாய்.

கால்களைப் பற்றிக்கொண்டு ஒரு பாறையின்மேல் ஓங்கி அறையப் பார்க்கிறான் பாவி. குழந்தையோ திமிறிக்கொண்டு கிளம்பி விடுகிறது. வானவீதியில் காணப்படுகிறாள் கண்ணன் தங்கை. ஆயுதங்களால் அலங்கரிக்கப்பெற்ற எட்டுப் பெருங் கைகளுடன் 'துஷ்ட புத்தியே! உன்னைக் கொல்லவந்தவன் ஒளிந்து வளர்கிறான்' என்றுகூறி மறைந்து விடுகிறாள்.

துர்க்கையின் காட்சி கண்டு அந்த எச்சரிக்கை கேட்டதும் கம்ஸன் பிரமித்துப் போகிறான். பச்சாத்தாபம் கூட ஓரளவு ஏற்படுகிறது. தேவகி வசுதேவர்களை விடுவித்துப் போகிறான். தெய்வமாகிய திருமால் தனக்கு விரோதமாக இருப்பதாக உணர்ந்து கவலைப்படுகிறான். எனினும் திருந்தி வாழ்வோமென்று மனம் திரும்பி விடவில்லை.

'பழிக்குப் பழி வாங்குவோம்; தெய்வத்தையே பழி வாங்குவோம்!' என்று கொதிக்கிறது நெஞ்சு ஒரே அக்கினிப் பிரளயமாக. 'முனிவர்களைக் கொல்லுங்கள்; சாதுக்களை வதைத்து விடுங்கள்; பசுக்களையும் சிசுக்களையும் கொன்றுவிடுங்கள்!' என்று உத்தரவுகள் பறக்கின்றன. பூதனை என்ற கொடிய அரக்கி குழந்தைகளைக் கொன்று திரிகிறாள். அதே வேலையாக இரவெல்லாம் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறாள். முக்கியமாக 'ஒளித்து வளரும் அந்தக் குழந்தை எங்கே எங்கே?' என்று தேடிக்கொண்டிருக்கிறாள்.

### தெய்வமும் தன்னை மறைத்துக்கொள்ள முடியவில்லை

கண்ணன் தோன்றிய வைபவத்தால் ஆய்ப்பாடி மேலும் மேலும் செழித்துக் காண்கிறது. கண்ணன் பிறந்தான் என்று நந்த கோபன் மாளிகை விழாக்கொண்டாடுகிறது. மங்களம் பாடுகிறார்கள் பாடகர்கள். பேரிகை முழங்குகிறது. இந்தக் கொண்டாட்டமும் கோகுலத்தின் செல்வச் சிறப்பும் பூதனைக்கு 'இங்கே தான் கம்ஸனுக்கு ஆபத்து விளைகிறது!' என்று சொல்லாமல் சொல்லிவிடுகின்றன.

பூதனை தன் எசமானாகிய கம்ஸனுடைய ஆபத்தைப் போக்குவோமென்று விரைந்து வருகிறாள். தன்னை ஓர் அழகிய இளம் பெண்ணாக்கி அலங்கரித்துக்கொண்டு வருகிறாள். கண்ணனைப் பார்க்கவரும் உறவினருள் ஒருத்தியாக நடித்துக்கொண்டு மாளிகைக்குள் பிரவேசிக்கிறாள்.

தெய்வத்தாலும் தன்னை ஒளித்து வைக்க முடியவில்லையென்பது தெரிந்துவிடுகிறது. பூதனைக்கோ தெய்வ நம்பிக்கை ஒரு துளியும் கிடையாது. 'இந்தக் குழந்தைச் சத்துருவைக் கொன்று எசமானனுக்கு வரப்போகும் ஆபத்தைப் போக்கிவிடுவோம்' என்று வருகிறவள் தானே ஆபத்துக்குள்ளாகி விடுகிறாள்.

பூதனையின் கள்ள உள்ளத்தை ஆய்ப்பாடியில் ஒருவரும் அறிந்துகொள்ள முடியவில்லை. குழந்தையைப் பிரியமாகி வாரியெடுத்து மடியில் வைத்துக்கொள்கிறாள்; பால் கொடுக்கிறாள். ஆனால் கள்ளக் கிருஷ்ணனுக்குத் தெரியாதா இந்தக் கள்ளத்தனமெல்லாம்?

பூதனை பால் கொடுக்கக் குழந்தையும் பால் குடிக்கத்தான் செய்கிறது. பூதனையோ அலறித் துடித்துக்கொண்டு தரையில் விழுந்து விடுகிறாள். அலங்கார இளநங்கை அமர்ந்திருந்த இடத்தில் கிடக்கிறது பூதாகாரமான ஒரு பிரேதம். யாதும் அறியாதது போல் ஏறி விளையாடும் குழந்தையை நோக்கி

ஓடி வருகிருர்கள் எசோதைத் தாயும் கோபி மாரும். கண்ணனைக் குளிப்பாட்டி, 'தெய் வமே! எங்கள் குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்' என்று பிரார்த்திக்கிருர்கள்.

தெய்வக்குழந்தை தன்னை மறைத்துக் கொள்ள முடியாததால் வேறு அசுர ஆபத்து களும் நேரிடுகின்றன. சகடாசுரன் முதலான வர்கள் வதமாகிருர்கள். கடைசியாக அசுர மாமனும் வதமாகிருன். இப்படிச் செல்லு கிறது ஸ்ரீமத் பாகவதத்திலே கண்ணன் பிறந்த கதை. இனி, இந்தக் கதையின் உட் பொருள் என்ன என்று சற்றுப் பார்க்கலாம்.

### பாகவதம் சொல்லும் அவதாரச் செய்தி

கவித்திறனும் தத்துவ அழகும் ஒருங்கே வாய்க்கப் பெற்றது வடமொழியிலுள்ள ஸ்ரீமத் பாகவதம். இதில் கண்ணபிரானின் அவதாரச் செய்தி ஒரு விசேஷ சோபையுடன் வெளியிடப்பெறுகிறது.

மகாபாரதத்திலே நாம் காணும் அவ தாரமூர்த்தி பேராற்றல் படைத்த ஒரு இராஜ தந்திரி. பகவத்கீதையில் காணும் கண்ணன் ஜகத்குரு; சமயங்களுக்கிடையே சகோதர தர்மத்தை வற்புறுத்தி உலகம் வாழ வழி காட்டும் பரமாசாரியன். கண்ணனது எளி மைக்கும் அரும்பெருங் குணதிசயத்திற்கும் சான்றுகளை மகாபாரதத்திலும் காண்கிருேம். எனினும் பாகவதகிருஷ்ணன் இல்லாவிட் டால் கிருஷ்ணபரமாத்மாவின் அவதாரச் செய்தியே மூளியாகி விட்டதுபோலத் தோன் றும் என்பது பக்தரஸிகர்களின் கருத்து.

ஜகன்மோகன பாலகோபாலனை, பசு பாலனம் செய்த இராஜகோபாலனை, ஜகன் மோகன வேணுகோபாலனைப் பாகவதத்தில் காண்பதுபோல் வேறு புராணத்திலோ இதி காசத்திலோ காண முடியாது. உலகத்தை வசீகரித்திருக்கும் கிருஷ்ணலீலைகளை வேறு எங்கேதான் பார்க்க முடியும்?

'என்னையே சரணகதி செய்; நான் உன் னைப் பாவங்களிலிருந்தும் பயங்களிலிருந்தும் கவலைகளிலிருந்தும் விடுவிப்பேன்' என்று கீதாசாரியன் உறுதி கூறுகிருனே, அந்தச் சரணகதி வழியைத்தான் எவ்வளவு வசீகர மாக, அன்பு மயமாக, அழகு மயமாகச் செய் திருக்கிறது பாகவதம்!

ஆண்டவன் குழந்தையாக வசீகரிக் கிருன்; மிடுக்கும் துடுக்கும் உள்ள சிறுவனக விளையாடியும் உள்ளம் கவர்கின்ருன். அசுர விரோதியாகி, நல்லவர்களுக்கு அருமைத் தோழனுகிருன். 'அன்பே வழி' என்று துணிந்த பக்தர்களுக்குக் காதலனும் ஆகி ருன். இது பாகவதபுராணம் நமக்குத் தரும் அவதாரச் செய்தி.

ஞானயோகத்தைப் பாகவதமும் போற் றுகிறது; கர்மயோகத்திற்கும் வழி காட்டு கிறது. இராஜயோகிகளுக்கும் அவசியமான இரகசியங்களை இப்புராணத்தில் காணலாம். எனினும் தேடும் இதயத்தை நாடிவரும் அருள் அன்பு வழியிலேதான் ஓடி வருகிறது என்பதை நாம் ஸ்ரீமத் பாகவதத்தில் அதி முக்கியமான கிருஷ்ணவதாரச் செய்தியாக உணர்ந்துகொள்கிருேம்.

அன்பு, நம்பிக்கை என்ற இரண்டு சிறகுகளைக்கொண்டு நாம் பக்தியின் அந்த ரங்கமான பிரதேசங்களிலும் சஞ்சரிக்க முடி யும் என்கிறது பாகவதம். நிர்க்குணப் பிர மத்தைக் குறித்தும் பாகவதம் பிரஸ்தாபிக் கிறது; எனினும் அவதாரமூர்த்தி மானுடச் சட்டையில் நம்முடன் கலந்து உறவாடுகிருன் என்ற நம்பிக்கையுடன் காதலாகிக் கசிந்து பக்தி பண்ணுவதே சுலபமான, வசீகரமான, பெருநெறி என்கிறது பாகவதம்.

பக்திப் பெருங் காதலருக்கே புருஷோத் தமன் அன்பும் கருணையும் நிறைந்த தன் இத யத்தைத் திறந்து காட்டுகிருன் என்ற கொள் கையை எல்லாவற்றுக்கும் மேலாக வெளியிடு கிறது பாகவதம்.

* * *

மானுடப்பண்பு தெய்விக பரிணம முறையில் ஓங்குவதற்காகத் தெய்வ சக்தி காலந்தோறும் இறங்கி வருகிறது—அதா வது, அவதரிக்கிறது என்றும், இத்தகைய அவதாரங்கள் பல என்றும் பாகவதபுரா ணம் தெரிவிக்கிறது. இத்தகைய அவதாரங் களில் எல்லாம் பரிபூர்ண அவதாரம் 'எங்கள் கண்ணன் பிறந்தான்' என்று ஒவ்வொரு ஆண்டிலும் குதூகலமாய் ஸ்ரீ ஜயந்திகொண் டாடுகிருேமே, அந்தக் கொண்டாட்டத்திற்கு உரிய ஸ்ரீ கிருஷ்ணவதாரம்தான் என்பதும் ஸ்ரீமத் பாகவதம் முடிவாகத் தெரிவிக்கும் அவதாரச் செய்திதான்.

அடுத்த கட்டுரை:

[**கண்ணன் கதை:** ஒரு முழு நோக்கு —3]

# வைஷ்ணவம்

(பி. ஸ்ரீ)

## நற்றிணையும் திருமாலும்

சங்க இலக்கியங்களில் பரிபாடல் தோன்றுவதற்கு மிகவும் முற்பட்டுத் தோன்றியது நற்றிணை என்று ஊகிக்கலாம். இதில் திருமாலின் உயர்வு குறிக்கப் பெற்றிருக்கிறது. 'திருமால் எவ்வளவு உயர்ந்தவர்?' என்று கேட்கும் ஒரு குழந்தைக்கு, 'அவர் மலைபோல் அவ்வளவு பெரியவர்' என்று ஒருவன் பதில் சொல்லக் கூடுமல்லவா? இந்த வினு-விடையை உள்ளத்திற்கொண்டு பெரிய மலைக்குத் திருமாலை உபமானமாகக் காட்டுகிருர் புலவர்.

## திருமாலின் பெருமையும் உயர்வும்

மாயவனைப் போன்ற உயர்ந்த மலை என்று கூறும் முறை கூர்ந்து கவனிக்கத் தக்கது.

மாயோன் அன்ன
மால்வரை

என்பது இந்தச் சங்கப் புலவர் வாக்கு. 'மாயோன்' என்ற சொல்லுக்குக் 'கருநிறமுள்ளவன்' என்ற பொருளும் உண்டு. கருநிறமுள்ள பெரிய மலையை 'மாயவனைப் போல் இருக்கிறது அம்மலை' என்று தூரத்திலிருந்து சுட்டிக் காட்டும்போது, திருமாலின் உயர்வுடன் எல்லையற்ற நிலைக்கும் அந்த நீலக் கருமலை ஒரு நினைவுக் குறியாகலாம்.

திருமாலுக்கு மலையை உபமானமாகக் கூறுவதுதான் இதைக் காட்டிலும் பொருத்தமாயிருக்கும் : கண்ணுல் காணமுடியாத பொருளுக்குக் கண்ணெதிரே காணும் பொருளை உவமிப்பதுதானே இயற்கைமுறை. ஆனல் இங்கே கட்புலனுகாத கடவுளைக் கண்ணுல் பார்க்கக்கூடிய பொருளுக்கு உபமானமாக்குகிருரே என்ருல், திருமாலின் உயர்வை மக்கள் அந்நாளில் சர்வசாதாரணமாக அறிந்திருந்தார்கள் என்று ஊகிக்கலாமல்லவா?

## வாசலில் விசுவரூபம்

நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்தாக அமைந்திருக்கிறது ஓர் அருமையான பாட்டு. பின்னுளில் பாரதம் பாடிய பெருந்தேவனுர் பாடிய பாட்டே இது. அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு ஆகிய தொகை நூல்களுக்கும் இப்புலவர் கடவுள் வாழ்த்துக்கள் பாடித் தந்திருக்கிருர். இவர் சைவ வைணவ சமரச நன்னிலை கண்ட பெரியார். சிவபெருமானையும் முருகனையும் மற்றத் தொகை நூல்களில் வாழ்த்தியிருப்பவர் நற்றிணையில் நாராயணனது விசுவரூபத்தில் ஈடுபடுவதைக் காண்கிருேம்.

'என்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய' விசுவரூபத் திருமாலை வேத முதல்வனுகக் காட்டுகிருர்.

வேத முதல்வன்
என்ப

என்பது இவர் வாக்கு. 'இது என் கருத்து மட்டும் அன்று; பெரியோர்கள் நீண்ட காலமாக இந்த நாட்டிலே இப்படி உறுதிகூறி வருகிருர்கள்' என்பது இவர் குறிப்பு.

திருமாலின் விசுவரூபம் குறித்த இப் புலவரின் சொல்லோவியம் ஏழு அடிகளில் அமைந்திருக்கிறது. இப் பெருமான் எங்கே இருக்கிருர்? எங்கும் இருக்கிருர், என்றும் இருக்கிருர் என்பது இவர் பதில். 'இந்த உலகத்தைத் தானே நாங்கள் காண்கிருேம்' என்று கூறுவோரை நோக்கி,

மாநிலம் சேவடி

அதாவது இந்தப் பூமியே இறைவனது திருவடி என்கிருர்.

அகண்ட பூமியைத் திருவடியாகக் கொண்டு நிமிரும் பரம்பொருளுக்குக் கடலே ஆடை என்கிறார். கடலாடை உடுத்த நிலம் என்று புலவர்கள் வருணிக்கக் கேட்டிருக்கிறோம். ஆனால் இது ஸ்தூலக் காட்சிதான். பெருந்தேவனாரோ உற்றுப் பார்ப்பவர் மட்டு மல்ல, ஊடுருவிப் பார்ப்பவரும் கூட. ஊடுருவிப் பார்த்து உண்மை காணும் இப்புலவர் கடலாடை உடுத்த நிலத்தைக் காணவில்லை. நிலத்தைச் சேவடியாகக்கொண்டு கடலாடை உடுத்து வானுற நிமிரும் தெய்வத்திருமேனியைக் காண்கிறார். ஆகாயமே அந்தத் திருமேனி என்கிறார்.

ஆகாயம் உடம்பாக, திசைகள் கைகளாகின்றன.

விசும்புமெய் யாக,
திசைகை யாக

என்பது இவர் காட்சி. திருமாலின் திருவடி கண்டோம்; ஆடை கண்டோம்; திருமேனி கண்டோம்; நாலு திசைகளும் நாலு கைகளாகத் திகழ்வதையும் கண்டோம்.

ஆகாயமெல்லாம் திருமேனியாகக் காணும் இந்தப் பரம்பொருளின் கண்கள் சூரியசந்திரர்கள் என்கிறார்:

பசுங்கதிர் மதியமொடு
சுடர்கண் ணாக.

[பசுங்கதிர் மதியம் - சந்திரன். சுடர்- சூரியன்.]

எங்கே பார்த்தாலும் திருமாலின் திருமேனியையே இவர் காண்கிறார். தம் பரந்த சிந்தையாலும் சிறந்த இதயக் கண்ணாலும். உலகினைக் காக்கும் கடவுள், உலமெங்கும் வியாபித்திருப்பதைக் காண்கிறார். இறைவன் காக்கும் உலகத்தை அந்த இறைவனுக்குள்ளே அடங்கியிருப்பதைக் காண்கிறார்.

மரத்தை மறைத்தது
மாமத யானை,
மரத்தில் மறைந்தது
மாமத யானை;
பரத்தை மறைத்தது
பார்முதல் பூதம்,
பரத்தில் மறைந்தது
பார்முதல் பூதம்

என்ற திருமூலர் வாக்கை இங்கே நினைவூட்டிக் கொள்ளலாம்.

உலகத்தைப் பார்க்கும்போது பரம் பொருள் மறைந்திருப்பதாகவும், பரம் பொருளை நோக்கும்போது உலகம் மறைந்து விடுவதாகவும் பேசுகிறார் மேலே சொன்ன சித்த புருஷர். அனுபவ வாயிலாகப் பேசுகிறார்; தியான வாயிலாகப் பேசுகிறார். தியானத்தில் மூழ்கிப் புறக்கண்களை மூடிக்கொள்ளும்போது சிவபெருமான் காட்சியளிக்கிறார் இச்சித்தர் பிரானுக்கு; தியானம் கலைந்ததும் உலகைக் கண்டு அன்பர் பணிசெய்கிறார். ஆண்டவன் பணியும் செய்கிறார். ஆனால் பாரதம் பாடிய பெருந்தேவனார். இத்தகைய சித்த புருஷரல்லர். புலமைக் கண்ணால் உலகத்திலே இறைவனைக் காண்பவர்.

இப் புலவருக்கு உலகே அவன், அவனே உலகு! அங்கே ஒடுங்கிய சிந்தையும் திறந்த இதயமும் சிவபெருமானைக் கண்டுகொண்டன. இங்கே பரந்த சிந்தையும் பண்பட்ட இதயமும் காத்தற் கடவுளை உலகமாகவே காண்கின்றன. உலகத்தை மறந்தோ, துறந்தோ காணும் காட்சி அல்ல இது. அழித்தல் என்ற வியாஜத்தால் விடுதலையருளும் பெருமானை, உலகை மறந்த நிலையில் காணும் காட்சி அது. காக்கும் கடவுளை, அவன் காக்கும் உலகை மறக்காமலே, ரசித்துக் காணும் காட்சி இது. அவர் சிவயோகி; இவர் கலா யோகி.

மண்ணோடு விண்ணுமாகி, இப்பெரும் பூதமும் தாமேயாகி, திசைக் கைகளால் அனைத்துயிரையும் அணைத்துக் காப்பவராகி, சூரிய சந்திரக் கண்களால் அனைத்துலகையும் பார்ப்பவராகி, எல்லாவற்றையும் தனக்குள் அடக்கியவராகி, விசுவரூப தரிசனத்தை இந்த உலகக் காட்சிகளினூடே, மண்ணிலும் விண்ணிலும் திகழும் முடிவில்லாத அழகுகளினூடே அளிக்கிறார் திருமால் புலவர்பிரானாகிய பெருந்தேவனாருக்கு. அவர் காட்ட இவர் காண்கிறார். கருத்திலே கண்டு கவிதையில் வடிக்கிறார்.

இனி நாம் பெருந்தேவனாரின் இக்கவிதை முழுமையும் பார்ப்போம்.

மாநிலம் சேவடி
யாக, தூநீர்
வளைநரல் பௌவம்
உடுக்கை யாக,
விசும்புமெய் யாக,
திசைகை யாக,
பசுங்கதிர் மதியமொடு
சுடர்கண் ணாக,
இயன்ற எல்லாம்
பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன்
என்ப,
தீதற விளங்கிய
திகிரி யோனே.

[ தூநீர் - அலையால் தாவப்படும் நீர். வளை - சங்கு. நரல் - முழங்குதல். பௌவம்- கடல். உடுக்கை - உடை. திகிரி - சக்கரம்.

## தோரண மணிவாசல்

நற்றிணையின் இந்தக் கடவுள் வாழ்த்து நற்றிணைக்கு ஒரு நல்ல வாசல். இதை இந்தத் தொகை நூலுக்கு ஒரு தோரண மணிவாசலாக அமைத்திருக்கிறார்பாரதம்பாடிய பெருந்தேவனார். 'தீதற விளங்கிய திகிரியோன்' காவலில் எல்லாம் நலமாக, மங்களமாக நடைபெறும் என்பது குறிப்பு.

அரசர்களின் ஆணையை 'ஆக்ஞாசக்கரம்' என்றார்கள். இதைத் தமிழில் 'ஆணையங் திகிரி' என்று மொழிபெயர்க்கலாம். சகல லோக ஆட்சியும் கடவுள் வசகமாக இருப்பதால் திருமாலைத் திகிரியோன் என்று குறிப்பது பொருத்தமே. திருமாலின் திகிரி தீமையை அறுத்த வண்ணமாய் இருப்பதால் நல்லோர் அஞ்ச வேண்டியதில்லை என்பது குறிப்பு.

நன்னெஞ்சே நம்பெருமான்
நமக்கருள்தான் செய்வானே

என்ற ஆழ்வார் வாக்கின் பொருளை வற்புறுத்தியே தம் கடவுள் வாழ்த்துப் பாட்டை முற்றுப் பெறச் செய்கின்றார்.

இத்திருமாலை 'வேத முதல்வன் என்ப' என்று இவர் குறிப்பிடுவதால் வைணவமும் தமிழகத்தில் வழிவழி வழிபாடாக வந்து கொண்டிருக்கிறது என்பது உறுதிப்படுகிறது. இந்த வழிபாட்டிலே 'செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்' என்ற திடநம்பிக்கைக்கு(மகாவிசுவாசத்துக்கு) விசேட இடம் இருக்கிறது என்பது விஷ்ணு பக்தர்களின் கொள்கை.

இந்தப் பாட்டில் முதல் முதல் நாம் காண்பது இறைவன் திருவடிதான். திருவருளுக்கு அறிகுறியான திருவடியை மாநிலமாகக் காண்கிறோம். இறைவனது நீலமேனியை நீலவானமாகக் காண்கிறோம். பகலில் சூரியக் கண்ணாலும் இரவில் சந்திரக் கண்ணாலும் பகவான் பார்த்துக்கொண்டே இருக்கிறார் என்று காட்டி, இப்புலவர் தம் கற்பனைத் திறத்தைத் தமக்குப் பயன்படுத்திக் கொண்டதுபோல் நமக்கும் பயன்படுத்தப் பார்க்கிறார்.

இந்தப் பாட்டிலே, திசைகள் கைகளாவதையும், அத்தகைய கை ஒன்றில் சூது, வாது என்ற தீதெலாம் சுட்டெரிக்கும் சக்கரம் ஜொலிப்பதையும் காண்கிறோம். திருமுடி குறிக்கப்படவில்லை அது எங்கே இருக்கிறது என்று யார் கண்டார்?

தோள்கண்டார் தோளே கண்டார்;
தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்;
தடக்கைகண் டாரும் அஃதே;
வாள்கொண்ட கண்ணார் யாரே
வடிவினை முடியக் கண்டார்?

என்ற கம்பன் வாக்கும் நற்றிணைக் கடவுள் வாழ்த்தில் தோய்ந்து எழுந்ததோ? என்று தோன்றுகிறது.

நற்றிணை என்ற தொகைநூலில் தோரண வாசலை எப்படி எப்படி அழகு செய்திருக்கிறது இந்தக் கடவுள் வாழ்த்து! 'திருமாலின் புகழ்பாடி நற்றிணையின் பெருமை காண வாருங்கள், காவல் தெய்வத்தை வணங்கிக் கவிதைத் தெய்வத்தைத் தரிசிப்போம் வாரீர்' என்று பெருந்தேவனார் கூவியழைக்கிறார். இது பெருந்தொண்டு இல்லையா?

* * *

நற்றிணையில் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 பாடல்கள் காணப்படுகின்றன. 'நற்றிணை நானூறு' என்ற பெயரே இதைப் புலப்படுத்தும். நூற்று எழுபத்தைந்து புலவர்கள் பாடியிருக்கிறார்கள். ஐம்பத்தாறு பாடல்களுக்கு அவற்றைப் பாடிய புலவர்களின் பெயர்கள் அறியப்படவில்லை. நற்றிணைப் பாடல்கள் பாடிய புலவர்களில் பெண்கள் எட்டுபேர். கபிலரும் உலோச்சனார் என்ற புலவரும் அதிகமாய்ப் பாடல்கள் பாடியிருக்கிறார்கள். இவர்களில் விஷ்ணு பக்தர்களும் காணப்பட்டார்கள் எனலாம். நற்றிணைப் பாடல்கள் பிறந்த சங்ககாலப் பகுதியில் திருமாலின் உயர்வும் பெருமையும் புலவர்களுக்கும் மக்களுக்கும் இடையே அறியப்பட்டிருந்தன என்று துணியலாம்.

இத்தகைய விதையிலிருந்து முளைத்தது பெருந்தேவனாரின் 'விசுவரூப'க் கொள்கை. இந்தக் கொள்கையைப் பெருந்தேவனார் தாம் பாடிய பாரதத்திலும் சிறப்பாகக் குறிப்பிடுகிறார். வியாசர் இயற்றிய மகாபாரதத்திலும் விசுவரூப தரிசனம் வருணிக்கப்படுகிறது.

அடுத்த கட்டுரை :

விசுவரூப தரிசனம்

# வேதாரணியம்



அறநிலைய ஆணையர் நூல் நிலையத்தைத் திறந்துவைத்தல்.



திருப்பணிக்கால்கோள் விழாவை அமைச்சர் நடத்துதல்.

15833 8

# நவ திருப்பதி அநுபவம்

[திரு. K. பட்சிராஜன் B. A., B. L.,]

மேலே சொன்ன அதி அற்புதமான கதையைக் கேட்ட விசுவசகன் சனகரை வணங்கி "சுவாமீ! எட்டுத் திருப்பதிகளின் மகிமையை விளக்கினீர்கள். ஒன்பதாவது தலத்தின் பிரபாவத்தையும் அருளிச்செய்ய வேணும்" என்று பிரார்த்தித்தான். சனகரும் புன்முறுவலோடு "அரசனே! உன் விருப்பம் மிக நல்லதே. இந்த நவ திருப்பதிகளில் மிகச் சிறந்ததாகிய தலத்தின் வரலாறு மிக விரிவானது, சுவையுள்ளது; கவனமாகக் கேள்" என்று கூறத்தொடங்கினர்.

முன் சொன்ன திருக்கோளூர்ப் பதிக்குச் சற்று மேற்கே பொருனையின் தென்கரையிலே உள்ளது ஒன்பதாவது திருப்பதியாகிய குருகூர் என்னும் தலம். முன்னொரு காலத்தில் வியாசபகவானை வணங்கி அவர் குமாரர் என்று கூறப்படும் சுகப்பிரம முனிவர் குருகூர் மகிமையைப்பற்றிக் கூறவேண்டும் எனப் பிரார்த்திக்க வியாசர் கூறுவார்:—

பரந்தாமனுக்கு விபூதிகள் இரண்டு. ஒன்று போகத்துக்கு, மற்றொன்று லீலைக்கு. முன்னையது விரஜாநதிக்கு அப்புறமுள்ளது. பின்னையது அந்நதிக்கு இப்பாற்பட்டது. முன்னையது நித்தியமானது. நாராயணன் தன் அலகிலா விளையாட்டாக இந்த லீலா விபூதியைச் சிருட்டித்து, ஆன்ம வஸ்துக்களை அதிலே விளையாட விட்டுப் பார்த்துப் பின் எல்லாவற்றையும் சங்கரித்துத் தன்னுள்ளே ஒடுக்கிக்கொள்கிறான். இப்படி முன் ஒரு கால் யாவும் அவனுள்ளே ஒடுங்க அப்பால் அவன் அவற்றை மீண்டும் சிருஷ்டிக்கத் திருவுளம் பற்றித் "தன்னுள்ளே நான்முகனை மூழ்த்த நீருலகெல்லாம் படை என்று முதல்" படைத்தான். அந்த நான்முகனும் அப்படைப்புக்குப் பூர்வ அங்கமாக நாராயணனைக் குறித்துத் தவம் செய்ய பகவானும் அவனுக்கு முன் தோன்றினர். பிரமன் அவரை வணங்கி "பெருமானே! தேவரீரை வணங்குகிறேன். எத்தனையோ யுகங்கள் கல்பங்கள் இப்படியே நடந்து கழிந்தன. இந்த லீலா விபூதியிலுள்ள பாகவதர்கள் என்றென்றும் தங்களைக் கண்டு தரிசிக்க வாய்ப்பாகத் தேவரீர் ஆங்காங்கே அர்ச்சாவதாரம் செய்தருளி நித்திய வாசம் செய்யவேணும்" என்று வேண்டினன். பெருமாளும், "பிரமனே! உன் உள்ளக்கிடக்கை நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அண்ட சிருஷ்டிக்குப் பின் உன்னைப் படைக்கு முன் நாம் நோக்கினேம். சம்புத்தீவில் பரதகண்டத்தின் தென் கோடியில் தாம்பரவருணி என்ற நதி ஓடுகின்றது. அதன் தென்பால் நமக்கு மனரம்மியமான ஒரு இடத்தைப் பார்த்தோம். அங்கே நாம் நித்திய வாசம் செய்கிறோம். ஆதியிலே நாம் ஆசைப்பட்ட இடமாதலின் அதற்கு ஆதிக்ஷேத்திரம் என்று பெயரிட்டோம். இனி இந்த அண்ட சிருஷ்டி காலத்துக்கு நாம் அங்கேயே தங்கி அங்கிருந்தே நம் காத்தல் தொழிலை நடத்துவோம். அவதாரங்களையும் செய்வோம். நீ வந்து நமக்கு நாள்தோறும் பூசை செய்வாயாக" என்றருளிச்செய்தார்.

பிரமன் மீண்டும் பணிந்து "சுவாமீ! அடியேன் பேறுபெற்றேன். அடியேனுக்கு இன்னுரை வழங்கும்போது குருகாத்திர தெரிசனம் என்று அருளிச் செய்கையால் அப்பதிக்குக் குருகை என்று பெயர் விளங்க அனுமதிக்கவேண்டும்" என்று வேண்டினர்.

பகவானும் "அப்படியே ஆகட்டும் அயனே! அந்தப்பதியின் சுற்றிலும் ஒரு யோசனை தூரத்துக்குப் பரிசுத்த பூமியாயிருக்கும். எவ்வகைப் பாவமும் அணுகாது. அங்கே எல்லாத் தீர்த்தங்களிலும் மேலான தீர்த்தம் இருக்கும். பூதப் பிரேத பிசாசுகள் அணுகாது. நீ அங்கு வந்து நம்மை அர்ச்சிக்கக்கடவாய். உன் விருப்பம் ஈடேறப் பின்னொருகால் ஒரு பத்தனையிட்டு அங்கே அர்ச்சாவதாரனாய் என்றும் இருப்போம். உன்னு

டைய பகல் முடிவில் ஏற்படும் பிரளயம் அந்தப்பதியை பாதிக்காது. மீண்டும் சிருஷ்டிக்கும்போது இப்பதி அப்படியே இருக்கும். இப்படி உன் முதல் பரார்த்தம்போய் இரண்டாம் பரார்த்தத்தில் ஏழாவது மனு அந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர் யுகத்தில் கலி பிறந்த நாற்பத்து மூன்றுநாள் நம்முடைய பக்தன் வடிவாய் நாமே அவதாரஞ் செய்து வேதங்களின் உண்மைப் பொருளைப் பலரும் அறிய வெளியிட சங்கல்பித்துள்ளோம். அதனை உணர்ந்து அந்த பக்தனை வழிபட்டு அவர் உபதேசப்படி ஒழுகுபவர்களைக் கலி நலியமாட்டாது. அவர்கள் நமக்கு இனியராய் இங்கு வாழ்ந்து பின் நித்திய விபூதியிலே நம் பெரிய திருவோலக்கத்தை யடைவார்கள்'' என்று அருளி மறைந்தார். பிரமனும் மிகவும் மனச்சாந்தியும் மகிழ்வும் பெற்றவனுய் அந்த ஆதிக்ஷேத்திரமான குருகூருக்கு வந்து அங்கே தங்கி நாராயணனை ஆராதித்துப் பின் சத்தியலோகம் போனுன்.

வியாசர் இவ்வாறு கூறி முடிக்க சுகர் அவரை மீண்டும் வணங்கி "ஐயனே! தலம் வந்த வரலாறு மிகவும் ஆச்சரியமானது. அதற்குப் பின் எத்தனை யுகங்கள் கழிந்து விட்டனவே. இவற்றுக்கிடையில் எத்தனையோ புகழ்பெற்ற, அதிசய நிகழ்ச்சிகள் அங்கே நிகழ்ந்திருக்குமே. அவற்றில் கொஞ்சமேனும் அடியேன் அறிய அருளவேண்டும்'' என்று இரந்தார். வியாசர் கூறுவார்:—

முன்காலத்தில் முனிவர்கள் அனைவரும் தலயாத்திரையாகப் புறப்பட்டு ஒவ்வோரிடமாக நீராடி நிமலனை வழிபட்டு வந்துகொண்டிருந்தவர்கள் இந்தத் திருப்பதியை அடைந்தார்கள். அங்கே தாம்பரவருணியில் ஒரு துறையிலே நீராடி இறைவனை வணங்கிச் சிலநாள் தங்கினுர்கள். அப்போது ஒருநாள் பல்லாயிரம் சங்கங்கள் சூழ்ந்த வலம்புரிச் சங்கொன்று நதி வழியே வந்து அத்துறையிலே ஏறி அழகாக வலம்புரி முன்னு அணிவகுத்து ஆதிநாத வேதியை பிரதட்சணம் செய்து வணங்கி மீண்டும் அத்துறை வழியே நதியில் இறங்கி மறைந்தன.

மற்ருெரு நாள் ஒரு யானையும் வேடனும் தமக்குள் போரிட யானை மடிந்தது; வேடனும் மாண்டான். அவ்விரு ஆத்மாக்களையும் விஷ்ணு தூதர்கள் வந்து அழகிய விமானத்தேற்றிச் செல்வதை முனிவர்கள் கண்டனர். விஷ்ணுதூதர் சென்ற சில விநாடிகளில் அங்கே முனிவர்கள் ஆச்சரியம் திருமுன்பே இந்திர தூதர்களும் யமபடர்களும் வந்தார்கள். ஒருவரை ஒருவர் வினவ யமபடர்கள் கூறுவர் :—இந்த யானை முன் பிறப்பில் மானிடனுக வாழ்ந்து கணக்கில்லாப் பாவம் புரிந்திருக்கிறது. அந்தப் பாவத்தின் பலனுகவே விலங்காய்ப் பிறந்தது. இன்னும் எஞ்சிய பாவங்களுக்காக எத்தனையோ பிறவிகள் எடுக்கவேண்டும். வேடனுக வந்தவனே உயிர்வதையே பொழுதுபோக்காக வாழ்ந்து பாவம் செய்தவன். அதற்குரிய நரக வாழ்வை அவன் வாழ்ந்து தீரவேண்டும். அவர்கள் இருவரையும் கொணர நாங்கள் வந்தோம். நீங்கள் ?''

இந்திர தூதர்கள் அதுகேட்டு "இரண்டு பேரும் சூரர்களாய் நின்று போர்செய்து போரில்பட்டவர்களாதலாலே அவர்களை வீர சொர்க்கம் கொண்டுசெல்ல யாம் வந்தோம். இப்போதோ நம்மிருவரையும் நிற்க வைத்து விஷ்ணு தூதர்கள் அவர்களைக் கொண்டு போய்விட்டார்கள்'' என்று கூறினர். "முனிவர்கள் மேலும் ஆச்சரியமடைந்து நிற்கையில் வானெலி யொன்று எழுந்து "முனிவர்களே! படைப்பு நாள்தொட்டு இந்தத் திருப்பதி ஸ்ரீமந் நாராயணன் திருவுள்ளம் உவந்த தலமாதலால் இந்த மண்ணிலே உடலைவிடும் ஆன்மாக்கள் வீடு பேறுபெறும்'' எனக்கூறியது. அதுகேட்டு இந்திர, யமதூதர்கள் தம் வழியே போனுர்கள். முனிவர்கள் மேலும் வியப்பில் மூழ்கி நிற்க அங்கே வசிஷ்ட முனிவர் வந்தார். முனிவர்கள் அவரை உபசரித்து வணங்கி அவ்வூரில் தாங்கள் கண்ட அதிசயங்களை (வலம்புரி முன்னு சங்குகள் அணிவகுத்ததும், விலங்கும் வேடனும் விமானத்தேறிச் சென்றதும்) அவரிடம் கூறி அத் திருப்பதியின் மகிமைகளைக் கூறவேண்டும் என்று இரந்தனர். வசிஷ்டர் கூறுவார்:-

அரிக்ஷேத்திரமான சாளக்கிராம மலைச் சரிவிலே ஒரு அந்தணன் அனேகம் மாணவருக்கு மறையோதிக் கொண்டிருந்தான். அம் மாணவருள் ஒருவன் இத்தனை மறைகளை ஓதிப் பயன் என்ன என்று நினைத்தான். எத்தனையோ தடவை குரு சொல்லியும், தண்டித்தும் கேளாமல் அவன் தன் ஐயத்தை

விடவில்லை. குரு கோபித்து "நீ மறு ஜன்மத்தில் வேதம் கற்க இயலாத குலத்தில் பிறப்பாயாக" என்று சாபம் இட்டார். அம்மாணவனோ அதைப்பற்றிக் கொஞ்சமும் மனத்தில் கவலையுறுமல் அங்கிருந்து போய் நெடுந்தொலை அலைந்து ஒரு விஷ்ணுத் தலத்தைச் சேர்ந்தான். அங்கே கோயிலைச் சுற்றி வளர்ந்திருந்த புல்லைவெட்டிப் பசுமாடு வைத்திருப்போர்க்கு விற்று வாழ்ந்தான். இவனை இறைவன் விசேஷ கடாட்சம்செய்து நமக்கு கைங்கர்யம் பண்ணினுன் என்று மதித்து அவன் பெற்றிருந்த சாபத்தையும் எண்ணி, மறுபிறப்பில் குரு சாபமிட்ட குலத்தில் பிறந்தாலும் பரபக்தி, பரஞான, பரமபக்திகளுண்டாகி முத்தனுவான் என்று அருள்செய்தார். அவனும் தன் வாழ்நாள் தீர மறுபிறப்பிலே நான்காம் வருணத்திலே பிறந்தான். எனினும் சிறந்த அறவுணர்வுடன் வளர்ந்து, சாதுக்களுக்குக் கைங்கர்யம் செய்து வாழ்ந்து வந்தான். தாந்தன் என்பது அவன் பெயர். அவன் தீர்த்தயாத்திரையாக வந்தவன் விந்திய மலையில் ஒரு பெரிய மரநிழலில் சில காலம் தங்கி இளைப்பாறி அப்பால் தென் திசை வந்து குருகாபுரியிலே வந்து மனம் மகிழ்ச்சி நிறைந்தவனுனன். அவன் அங்கிருக்கையில் ஒருநாள் அசரீரி யொன்று எழுந்து "இங்கேயே நித்தியவாசம் செய்து வேதியிலே மறைவில் வதியும் இறைவனை ஆராதனம் செய். உன் குலத்தையிட்டு விலக வேண்டாம். உனக்கு மோட்சம் கிடைக்கும்" என்று கூறியது, தாந்தனும் அந்த வானொலியின்படியே நாள்தோறும் பகவானை ஆராதித்து வந்தான்.

அனேகமாக இதே சமயத்தில் அசுரர்களால் நலிவுபட்ட இந்திரன் முதலிய தேவர்கள் பிரமனைச் சரணடைந்தார்கள். பிரமன் அவர்களை நோக்கி "பூமியிலே குருகாபுரியில் வேதியிலே மறைந்து வாசம் செய்கிற ஆதிநாதனை ஆராதியுங்கள். அவர் அருளால் நீங்கள் அசுரரை அழிக்கவல்ல வலிமை பெறுவீர்கள்" என்று கூறினுன். தேவர்களும் குருகைக்கு வந்து ஆதிநாதனை மலரால் அருச்சித்துப் போற்ற அவர் அருளால் மன வலியும் உடல் வலியும்பெற்று மகிழ்ந்தனர். அச்சமயத்திலே அதே இறைவனைப் பூசிக்கத் தாந்தன் வரக்கண்டு தேவர்கள் அவன் குலத்தையிட்டு அவனை இகழ்ந்து பாகவதாபசாரப்பட்டார்கள். தாந்தன் அவர்களை ஒன்றும் சொல்லாமல் தான் கொணர்ந்த மலர்களுடன் இறைவனிருந்த வேதியின் ஈசானதிக்கில் ஒரு கூப்பிடு தூரம் போய் அங்கே ஒரு திண்ணையைப் பண்ணி அதிலே அந்நிய தேவதையை (இலிங்கத்தை?)ப் பிரதிஷ்டித்துப் பூசை செய்தான். உடனே அவன் இதயத்திலே சங்கசக்கர கதையுடனும் திருமகளுடனும் பகவான் தோன்றினுர். அதே நேரத்தில் தேவதைகள் தம் பார்வை யிழந்தனர். உடனே அவர்கள் நாம் இத்தண்டனை பெற என்ன பாவம் செய்தோமென்று அறியமாட்டாதவராய் ஆதிநாதனை வணங்கி வேண்ட அங்கே ஒரு காணுக்குரல் "பரமபக்தனை தாந்தனை நீங்கள் குலத்தையிட்டு இகழ்ந்தீர்கள். அவன் நான்காம் வருணத்தவனுனலும் விஷ்ணுபக்தி மகிமையால் அவன் நீங்களும் வணங்கத்தக்கவன். அவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்" என்று கூறியது. தேவதைகள் தாந்தன் பால்சென்று அவனை வணங்கி நடந்ததைக் கூறித் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று குறையிரந்தனர். தாந்தனும் இறைவன் அருளை வியந்து தேவர்களைக் கண்குளிர நோக்கி ஆதிநாதனை மனத்தே நினைந்து அவர்கள் பார்வைபெற அருளுமாறு வேண்ட தேவர்கள் கண்பெற்று வானுலகம் சென்று அசுரரை வெற்றிகொண்டனர். சிறிது காலம் சென்று தியானத்திலே ஒன்றியிருந்த தாந்தன் முன்னே ஆதிநாதன் நித்திய சூரிகளுடன் தோன்றி தம் பாதபங்கயத்தைத் தாந்தன் தலைக்கணியாய் அணிவித்து அவனுக்கு சாயுச்சியத்தை அருளினர். வானோர் மலர் மாரி தூவினர்,

இவ்வாறு வசிஷ்ட பகவான் கூறலும் முனிவர்கள் மிகவும் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து வசிஷ்டரை நோக்கி "சுவாமீ! இத்தலத்தின் மற்ற மகிமைகளையும் சொல்ல வேண்டும். வலம்புரிச்சங்கு வழிபடுகிறதன் பொருள் என்ன?" என்று கேட்டனர்.


(தொடரும்)


---


**கூவனூர், அகத்தீசுவரர் கோயிலில் 25—3—60-ல் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.**



காஞ்சியில் சிவ சிவ ஒலிமண்டபத் திறப்பு விழா














திருமோகூர் பள்ளிகொண்ட பெருமாள்

# திருமோகூர்

**தாளதாமரைத் தடமணிவயல் திருமோகூர்**
**நாளுமேவி நன்கமர்ந்துநின் றசுரரைத் தகர்க்கும்**
**தோளும் நான்குடைச் சுரிகுழல் கமலக்கட்**
**கனிவாய்க்**
**காளமே கத்தையன்றி மற்றொன்றிலங் கதியே**

—நம்மாழ்வார்

"ஈரொன்பதாம்பாண்டி" என்றபடி மங்களசாசனம் பெற்ற திவ்வியதேசங்கள் பாண்டி நாட்டில் பதினெட்டு இருக்கின்றன. அவைகளில் ஒன்று **திருமோகூர்** என்பது. அப்பதி மதுரைக்கு வடகிழக்கே ஏழு கல் தொலைவிலுள்ளது. மோகன க்ஷேத்திரம் என்றும் கூறுவர்.

"வாய்த்த தண்பணைவளவயல்சூழ் திருமோகூர்", "எண்திசையும் ஈன்கரும்பொடு பெருஞ் செந்நெல்விளையக் கொண்டகோயில்" என்று நம்மாழ்வார் அருளியதற்கிணங்க கோயில் இயற்கை சூழ்ந்த எழில்நலம் கலந்த இடத்தில் அமைந்திருக்கிறது. கிழக்கு பார்த்த சந்நிதி. எம்பெருமான் கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலத்தில் வழிபடுவோர்க்கு சேவை சாதிக்கிறார். அவர் திருநாமம் **காளமேகப் பெருமாள்** என்பது. நாச்சியார் திருப்பெயர்கள் **திருமோகூர் வல்லி, மேகவல்லி, மோகனவல்லி** என்பன. சதுர்முக விமானம்; பிரம்மாதி தேவர்களுக்குப் பிரத்தியட்சம்.

கோயிலுள் இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. தாயார், ஆண்டாள், பள்ளிகொண்ட பெருமாள், ஆழ்வாராதியர் முதலியவர்களுக்குத் தனிச் சந்நிதிகள் இருக்கின்றன. பள்ளிகொண்ட பெருமாள் திருவடிகளைச் சீதேவி பூதேவிப் பிராட்டியார்கள் பிடிக்காமல் தங்கள் இரண்டு கைகளையும் ஏந்திக்கொண்டு வேண்டுவதுபோல் காட்சியளிப்பது மனதைக் கவர்கிறது.

கோயில் மிகப்பழைமையானது. அழகிய யாளித்தூண் மண்டபம் இருக்கிறது. இரதி மன்மதன் இவர்களின் உருவங்கள் தனித் தனித் தூண்களில் காட்சியளிக்கின்றன. இராமர் சீதை ஒரு தூணிலும், இலக்குமணர் ஒரு தூணிலும் நின்று நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றனர். சின்ன மருது, பெரிய மருது, அவர்களின் அமைச்சர் முதலியோரின் உருவங்களும் பார்க்கத்தக்கவை. கோயிலின் வெளிப் பிரகாரம், உள்மதில் சுவர்களில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கோயிலின் வெளிப் பிரகாரத்தின் தென்மேற்கு மூலையில் கொத்தாள முனீசுவரர் கோயில் இருக்கிறது. திரிசூலம் நாட்டப்பெற்றிருக்கிறது. படிக்கட்டுகள் ஏறி மேலே போய்த்தான் வழிபடவேண்டும்.

இத்தலத்தின் விருட்சம் **வில்வம்.** இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. **தாளதாமரை** என்பது ஏரியாக இருக்கிறது. திருப்பாற்கடல் அல்லது க்ஷீராப்தி புஷ்கரிணி திருக்குளமாக கோயிலின் அண்மையில் இருக்கிறது. இக்குளத்தில் தண்ணீர் எப்போதும் உள்ளே வந்து வெளியே போய்க்கொண்டிருக்கிறது. கோயிலில் ஆறுகால பூசை நடக்கிறது. வைகாசி விசாகத்தில் திருத்தேர்விழா. மாசி மகத்தில் ஆனை மலைப்பக்கத்திலுள்ள நரசிங்கத்திற்கு பெருமாள் எழுந்தருளி கஜேந்திர மோட்சக் காட்சி நடைபெறும். பங்குனி உத்தரத்தில் திருக்கல்யாண உற்சவம் நிகழும். இப்பதிக்குப் பக்கத்திலுள்ள ஆனைமலையில் யானை படுத்திருப்பதுபோன்ற காட்சி வெகு தொலைவுவரை தெரியும். அதன் தலைப் பக்கத்தில் நரசிங்கப்பெருமாள்—நரசிங்கவல்லி கோயில் கொண்டெழுந்தருளியுள்ளனர். வால் பக்கம் கொடிக்குளம் என்ற ஊரில் **வேதநாராயணப் பெருமாள்** கோயில் இருக்கிறது. அங்கு தாயார் சந்நிதி இல்லை. இந்த ஆனைமலையில் சமணர்கள் இருந்தனர் என்பதைத் திருஞான சம்பந்தர் "ஆனைமாமலையாதிய இடங்களில் பல அல்லல் சேர் ஈனர்கட்கு எளியேனலேன்" என்று திருவாலவாய்த் தேவாரத்தில் கூறுகிறார்.

ஆழ்வார்களுள், நம்மாழ்வாரால் திருவாய் மொழியில் பத்தாம்பத்து முதல் திருவாய் மொழியால் பாடப்பெற்ற சிறப்புடையது திருமோகூர். 'தாளதாமரைத் தடமணிவயல் திருமோகூர்', 'நலங்கொள் நான்மறை வாணர்கள் வாழ்திருமோகூர்', 'படர்கொள் பாம்பணைப் பள்ளிகொள்வான் திருமோகூர்', 'அண்ட மூவுலகளந்தவன் அணிதிருமோகூர்' என்றெல்லாம் போற்றிப் புகழ்கின்றார். எம்பெருமானை குடமாடு கூத்தன், தயரதன் பெற்ற மரகதமணி, சுடர்கொள் சோதி, திருமோகூர்ஆத்தன் என்ற பெயர்களால் அழைக்கிறார். 'காளமேகத்தையன்றி மற்றொன்றிலம் கதியே', 'இடர் கெடஅடி பரவுதுந் தொண்டீர் வம்மினே', 'கோயிலை வலம் செய்துஇங்கு ஆடுதுங் கூத்தே', 'நாமமே நவின்று எண்ணுமின் ஏத்துமின் நமர்காள்' என்று நமக்கு அறிவுரை பகர்கின்றார்.

திருமங்கையாழ்வாரால் சிறிய திருமடலில் "சீராரும் மாலிருஞ்சோலை திருமோகூர்" என்று சிறப்பிக்கப் பெற்றிருக்கிறது. மணவாள மாமுனிகள்,


தாளடைந்தோர் தங்கட்குத்
தானே வழித்துணையாம்
காள மேகத்தைக்
கதியாக்கி—மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகி
லேகவெண்ணு மாறனெனக்
கேதமுள்ள தெல்லாம் கெடும்

என்று திருவாய் மொழிநூற்றந்தாதியில் திருமோகூர்ப் பெருமாளைப் பாடியிருக்கின்றார். திவ்வியகவி-பிள்ளைப் பெருமாளையங்கார்,

வாயால் மலர்கோதி வாவிதொறும் மேயுமோ
மேயாமல் அப்பால் விரையுமோ—மாயன்
திருமோகூர் வாயின்று சேருமோ நானை
வருமோகூர் வாயன்னம் வாழ்ந்து

என்று நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதியில் கூறியிருக்கின்றனர்.

இன்னும் வடமொழியில் மச்சபுராணத்திலும், பிரம்மாண்ட புராணத்திலும் சில அத்தியாயங்களில் இந்த திவ்வியதேசத்து மூர்த்தி, தலம், தீர்த்தம் இவைகளின் பெருமை கூறப்பட்டிருக்கிறது. இதை யொட்டித் தமிழில் "ஸ்ரீமோகக்ஷேத்ர மாஹாத்மியம்" என்ற நூலை 1936-ஆம் ஆண்டில் தேவஸ்தானத்தார் வெளியிட்டிருக்கின்றனர்.



திருமோகூர் கோயில் விமானம்

பொன்னனை வாளரக்கனை நூற்றுவரைக் காவை
பொருசிலையைக் கனைகடலைப் பொன்னனீன்ற
நன்மகற்காய்ச் சுரர்க்காய் ஐவருக்காய்க் காதல்
நப்பின்னைக்காய்ச் சானகிக்காய் நடவைக்காக
மன்னுகிரால் வடிக்கணையால் வளையால் புள்ளால்
வளங்கெழு தோள்வலியால் வானரங்களாலும்
முன் உடல்கிறிச் சிரங்கொய்து அமரில்வீழ்த்து
முதலொடுங் கீண்டு அறுத்து அடைத்தான்
மோகூரானே

—மாறனலங்காரம்.

நாளு மோகனவல்லி நலங்கொளும்
காளமேகம் கவின்பெறு கண்களும்
தோளும் மார்பும் துவரிதழும் துணைத்
தாளும் வாழ்க சகதலம் வாழவே.

# திருப்பாற்றுறை

பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவின் அல்லா ரெயிலெய்தார்
பாவந் தீர்புனல் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே
—திருஞானசம்பந்தர்.

கொள்ளிடம், காவிரி ஆறுகளுக்கிடையே வுள்ள தீவில் பாடல்பெற்ற பதிகளான திரு வரங்கம், திருவானைக்கா இவைகள் இருக்கின் றன. அதே தீவில் திருப்பாற்றுறை என்ற தேவாரப் பாடல்பெற்ற தலமும் இருக்கிறது. அது திருவானைக்காவின் கிழக்கே நாலுகல் தொலைவிலிருக்கிறது. ஸ்ரீரங்கம் இருப்புப் பாதை நிலையத்திலிருந்து ஐந்து கல் தூரம். மாட்டு வண்டி அல்லது குதிரை வண்டியில் தான் போக முடியும்.

கொள்ளிடத்தின் தென்கரையில் கோயில் இருக்கிறது. அழகிய சிறு கோயில் அண்மையில் திருப்பணி செய்யப்பெற்றது. கோயில் கிழக்கு நோக்கிய சந்நிதி. தென்புற மிருந்தும் ஒரு திருவாயில் இருக்கிறது. கிழக் கிலும், தெற்கிலும் கோபுரங்கள் இருக்கின் றன. கோயிலுக்கு வெளியே கிழக்குக் கோபு ரத்திற்கு இருபக்கங்களிலும் விநாயகர், தண்ட பாணி, கறுப்பர் இவர்களுடைய சந்நிதிகள் இருக்கின்றன.

இறைவன் சந்நிதி கிழக்கு நோக்கியிருக் கிறது. அவர் திருநாமம் மூலநாதர். புற்றி லிருந்து பொன்மயமாக எழுந்தருளினர். மார்க்கண்டேயர் வழக்கமாக வழிபாடு செய் யும்போது ஒருநாள் பால் இல்லாமற்போக இலிங்கத்திலிருந்து பால் பெருகியது. திரு முடியில் சிறிது குழியாக இருக்கிறது. இலிங்கமூர்த்தியின்பேரில் புரட்டாசி 7, 8, 9, பங்குனி 7, 8, 9 இந்த தேதிகளில் சூரியனின் கிரணங்கள் படுகின்றன. தேவியின் சந்நிதி கிழக்கு பார்க்க இருக்கிறது. திருப்பெயர் **மேகலாம்பிகை** என்பது.

கோயிலினுள்ள பிரகாரத்தில் பிரதான கணபதி, முருகன், கஜலட்சுமி, பைரவர், நவக்கிரகங்கள் இவர்களின் தனிச் சந்நிதிகள் இருக்கின்றன. கர்ப்பக்கிரகச் சுவர்களில் பிட்சாடனர், வீணாதட்சிணாமூர்த்தி, தட்சிணா மூர்த்தி, அர்த்தநாரீசுவரர், பிரமன், துர்க்கை இவர்களுடைய விக்கிரகங்கள் இருக்கின்றன. சோழ மன்னன் ஒருவனுடைய சிலையும் கோயிலில் இருக்கிறது.

இத்தலவிருட்சம் கொன்றை என்று சொல்லப்படுகிறது. கோயிலுக்கு எதிரில் சிறு திருக்குளம் ஒன்று இருக்கிறது. கொள்ளிட நதியே இத்தலத்தின் தீர்த்தம். கோயிலில் நாலு கால பூசை நிகழ்கிறது. நவராத்திரியிலும் மார்கழித் திருவாதிரையிலும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

இத்தலத்திற்கு, திருஞானசம்பந்தர் பாடியருளிய பதினொரு பாடல்களுள்ள பதி கம் ஒன்று இருக்கிறது. 'பாரார் நாளும் பர விய பாற்றுறை', 'பாதம் தொண்டர் பரவிய யாற்றுறை', 'பண்ணார் வண்டினம் பாடல் செய் பாற்றுறை', 'பாடல்வண்டினம் பண் செயும் பாற்றுறை', 'பைந்தண் மாதவி சூழ் தரு பாற்றுறை' என்று பலவாறு அவர் புகழ்ந்து பாடுகிறார்.

இத்தலத்தின் கோயிலிலிருந்து அரசாங் கத்தார் பல கல்வெட்டுக்களைப் படியெடுத் திருக்கின்றனர். அவை, பராந்தகன் I, இராஜ ராஜன் I, இராஜேந்திரன், விக்கிரமசோழன், உத்தமசோழன், குலோத்துங்கன், நந்திவர்ம பல்லவன் III, ஹொய்சள வீரராமநாதன் முதலிய மன்னர்களின் காலத்தவை. கோயி லுக்கு நிலம், விளக்கு, ஆடுகள், விளக்கெரிக் கப்பொன், விளக்கெரிப்பதற்காகப் பசுக்கள் முதலியவைகள் வழங்கியது; நிலவிற்பனை, நில மாற்றம் முதலிய செய்தது; பூசை, திருமஞ்ச னம் முதலியவற்றிற்குத் தானம் அளித்தது; கோயிலில் சூரியவிக்கிரகம் எடுப்பித்தது; கோயிலுக்கு வடக்கிலிருந்த காக்குநாயகன் மடத்திற்கும், கோயிலுக் கருகிலுள்ள திரு நாவுக்கரசுதேவர் மடத்திலிருந்த மாகேசுவரர் களுக்கு உணவளிப்பதற்காகவும் நிலம் வழங்கி

யது; திருவானைக்காவிலுள்ள சண்பைக்குடி முதவியார் சந்தானத்தைச் சேர்ந்த ஆண்டார் எம்பிரானுர் மடத்துக்கும், திருச்சத்தி முற்றத்து முதலியார் சந்தானத்தைச் சேர்ந்த நாற்பத்தெண்ணுயிரவர் திருமடத்திற்கும்,திரு ஞானசம்பந்தர் திருமடத்திற்கும் நிலம் அளித் தது; இன்னேரன்ன பிற அரிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. பாண்டிகுலாசனிவளநாட்டு உத்தம சீலிசதுர்வேதி மங்கலத்திலுள்ள திருப்பாற்றுறை என்று கூறப்படுகிறது. இறை வனே, திருப்பாற்றுறை மகாதேவபட்டாரர், திருப்பாற்றுறையூர் மகாதேவர், திருப்பாற் றுறை யுடையார் முதலிய பெயர்களால் அழைக்கின்றன. திருப்பனம்பூதூர் பரமேசு வரர், திருவானைக்கா திருவெண்ணுவலுடை யார், தயாபரப்பேரம்பலக் கோயில் முதலி யவைகளைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படு கின்றன.

இத்தலத்திற்குக் கிழக்கே சுமார் ஒரு கல்தொலிவுள்ள உத்தமசேரி என்ற ஊரில் செங்கனிவாய்ப் பெருமாள்கோயில் இருக் கிறது. கல்வெட்டுக்களில் குறிக்கப்படும் உத்தமசீலி சதுர்வேதிமங்கலம்தான் உத்தம சேரியைக் குறிக்கும்போலும்.

திருப்பாற்றுறை செல்வோர் அவசியம் காணவேண்டியது மற்றென்றுண்டு. அதன் கிழக்கே நாலுகல் தொலைவில்தான் புகழ்பெற்ற கரிகாலச் சோழன் காவிரிக்கும் கொள்ளிடத் துக்கும் இடையே கட்டிய கல்லணை இருக் கிறது. இது தற்காலப் பொறியியல் வல்லு நர்க்கு எடுத்துக்காட்டாக விளங்கி நிற்கிறது. கல்லணை அருகில் கரிகாலன் யானைமேல் அமர்ந்திருக்கும் காட்சியும், காவிரியம்மை கையிலுள்ள குடத்திலிருந்து தண்ணீர் கொட் டிக்கொண்டிருக்கும் அழகும், அகத்தியர், கமண்டலத்தைக் கவிழ்த்து நீரைப் பெருக் கிய காகத்தைத் துரத்துவதுபோன்ற உருவங் களின் எழிலும், சுற்றிலுமுள்ள சோலைகளின் இயற்கை வனப்பும் பார்ப்பவர் மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கின்றன.

மாகம் தோய்மதிசூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினுர்
பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே

—திருஞானசம்பந்தர்.


## ஸ்ரீ அக்கினீசுவரசுவாமி கோயில், திருப்புகலூர்

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், திருப்புகலூர் ஸ்ரீ அக்கினீசுவரசுவாமி கோயிலில் நடத்திவரும் திலகவதியார் சித்தவைத்தியசாலையில் அறநிலையத்துறை ஆணையர் அவர்களின் ஆணைப்படி அடியிற்கண்ட விபரமுள்ள மருந்துகள் தயார் செய்யப்பட்டிருக் கின்றன. ஷை மருந்துகள் அடங்கிய பெட்டி ஒன்றின் விலை பெட்டியுள்பட ரூ. 31/- ஆகத் தற்போது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மருந்துகளின் 'உற்பத்தி பெருக்கத்திற்கேற்ப விலையும் பின்னர் குறைக்கப்படலாம். ஒருமுறை வாங்கியபின் மறுமுறை வாங்கும்போது பெட்டி விலையாகிய ரூ. 3-25-ம் குறைபடும். தேவைகளுக்கு ஸ்ரீ அக்கினீசுவரசுவாமி கோயி லுக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

1. குழந்தைகளுக்கு சுர மாத்திரை
2. பெரியவர்களுக்கு சுரமாத்திரை
3. குழந்தைகளுக்கு இருமல் மாத்திரை
4. குழந்தைகளுக்கு சுகபேதி மாத்திரை
5. கட்டுவாதி மாத்திரை
6. சீத, ரத்த பேதி மாத்திரை
7. காலரா மாத்திரை
8. வயிற்றுவலி மருந்து
9. பித்த மெழுகு
10. விஷ ஜுரங்களுக்கும், ஜன்னிக்கும்
11. கர்னரோகத் தைலம்
12. கரப்பான் தைலம்
13. நாக்குப்பூச்சிக்கு மருந்து
14. வெட்டைச்சூடு நீர் கடுப்புக்கு
15. பிளாஸ்திரி
16. களிம்பு
17. கண் தைலம்
18. தலைவலி மருந்து
19. கணை எண்ணெய்
20. கஸ்தூரி மெழுகு
21. விஷக்கடி மருந்து
22. தேள் கொட்டுக்கு மருந்து
23. டிஞ்சர் பென்சாயின்
24. டிஞ்சர் அயோடீன்.

டிரெஷரர்

ADVT

# - செய்திகள் -

## திருமண்டங்குடியில் மண்டலாபிஷேகம்

### அமைச்சர் திரு. பக்தவத்ஸலம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது

ஸ்ரீ தொண்டரடிப் பொடி ஆழ்வாரின் பிறந்த ஸ்தலமான திருமண்டங்குடியில் சுமார் 22,000 ரூபாய் செலவில் திருப்பணி செய்யப்பெற்று 25-1-60 அன்று மஹாசம்ப்ரோக்ஷணம் நடைபெற்றதை யொட்டி மண்டலாபிஷேகம் 13-3-60 அன்று காலை அறநிலைய இலாகா அமைச்சர் திரு. M. பக்தவத்ஸலம் அவர்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தஞ்சை ஜில்லா கலெக்டர், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டெண்டு, அறநிலைய இலாகா டிபுடி கமிஷனர், உதவி ஆணையர் முதலிய அதிகாரிகளும் தஞ்சை ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ குத்தாலம் அரங்கசாமி ரெட்டியார், ஸ்ரீ T. S. சாமிநாத உடையார் M.L.A., காரைக்குடி ஸ்ரீஇராயசொக்கலிங்கம் செட்டியார் முதலிய பிரமுகர்களும் பிரசன்னமாகியிருந்தனர்

காட்டுமன்னார் கோயில் பாஞ்சராத்ர விசக்ஷண ஸ்ரீ K. ஸ்ரீநிவாசபட்டாச்சாரியார் தலைமையில் வைதிக யாக காரியங்கள் நடைபெற்றன.

13-3-60 காலை விச்வரூபம், திருவாராதனமும், விசேஷ திருமஞ்சனமும், தஞ்சை பக்தஜன சேவாசமாஜத்தாரின் பஜனையும் நடைபெற்றன. அமைச்சர் கனம் M. பக்தவத்ஸலம் அவர்கள் காலை ஒன்பது பதினைந்துக்கு ஆலயத்துக்கு விஜயம் செய்தார்கள், ஆலயவாசலில் திருப்பணிக்கமிட்டி காரியதரிசி ஸ்ரீ பண்டிதசிரோமணி அரங்கநாதாச்சாரியார், ஸ்தானீகம் டிரஸ்டிகளான ஸ்ரீ S. மாதவாச்சாரியார், ஸ்ரீ S. அரங்கநாத அய்யங்கார், ஸ்ரீ தி.ப. இராமையா படையாச்சி, திருப்பணிக்கமிட்டி தலைவர் ஸ்ரீ K. V. இராமானுஜலு நாயுடு, ஸ்ரீ K. G. பட்டாபிராமன் முதலியோர், பூமாலை சூட்டி பூர்ணகும்ப மரியாதையுடன் வரவேற்றனர்.

அமைச்சர் யாக மண்டபத்தை அணுகியதும் அத்யாபக கோஷ்டியினர் "கதிரவன் குணதிசை" என்ற பாசுரத்தை சேவிக்க திரை நீக்கப்பெற்றது. அரங்கநாதன் சயனக்கோலத்திலும், அவரது திருவடி அருகில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் பள்ளியுணர்த்தும் நிலையிலும் காட்சியளித்தது பக்தர்களைப் பரவசப் படுத்தியது. கடம் தீபாராதனைக்குப் பின் குடந்தை ஸ்ரீ V. சிவசுப்பிரமணியபிள்ளை கோஷ்டியாரின் விசேட நாதஸ்வர இசையுடனும், வேதபிரபந்த பாராயணங்களுடனும் கடம் புறப்பட்டு பிரதக்ஷணம் வந்து பெருமாள் தாயார் ஆழ்வார் மண்டலாபிஷேகப்ரோக்ஷணம் அமைச்சர் முன்னிலையில் நடைபெற்றது.

### ஆழ்வாருக்கு அரவணை மரியாதை

இவ்வைபவத்தையொட்டி ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருக்குடந்தை ஸ்ரீ ஆராவமுதன், ஸ்ரீசக்கரத்தாழ்வான், திருவிண்ணகர் ஸ்ரீ ஒப்பிலியப்பன், திருப்போர்நகர் ஸ்ரீ அப்பக் குடத்தான், திருஅழுந்தூர் ஸ்ரீ ஆமருவிஅப்பன், புள்ளம் பூதங்குடி ஸ்ரீ வல்வில் இராமன், நந்திபுர விண்ண கரம் ஸ்ரீ ஜகன்னாதப் பெருமாள், சிறுபுலியூர் ஸ்ரீ கிருபாஸமுத்ரப்பெருமாள், திருக்கூடலூர் ஸ்ரீஜகத்ரக்ஷகப் பெருமாள், ஆதனூர் ஸ்ரீ ஆண்டாளக்குமய்யன், திருக்கண்டியூர் ஸ்ரீஹரசாபஹரப் பெருமாள், திருக் கண்ணன் கவித்தலம் ஸ்ரீ கஜேந்திரவரதன் ஆகிய திவ்யதேசத்தெம்பெருமான்களது அரவணை மரியாதை உரியபிரபந்த சேவைகளுடன் சமர்ப்பிக்கப்பெற்றன.

ஆழ்வார் ஸன்னதிமுன், வெள்ளை சலவைக் கற்களில் பொறிக்கப்பெற்ற ஸ்ரீ தொண்டரடிப்பொடி ஆழ்வார் பற்றிய, அப்பிள்ளை, ஸ்ரீ வேதாந்த தேசிகர் ஆகியோர் அருளிய வாழித் திருநாமக் கல்வெட்டினை அமைச்சர் திரு. M. பக்தவத்ஸலம் அவர்கள் திறந்துவைத்தார்கள். யாகசாலை முன் அமைக்கப்பட்டிருந்த விசேடப்பந்தலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. திருப்பணிக்கமிட்டித் தலைவர் ஸ்ரீ இராமானுஜலு நாயுடு மாலை சூட்டினார். காரியதரிசி சிரோமணி A.S. ரங்கநாதாச்சாரியார் அமைச்சரையும் மற்றும் அனை வரையும் வரவேற்றுப் பேசுகையில் 'ஆழ்வார்கள் பாடியதால் ஏற்றம்பெற்ற திவ்யதேசங்களைபோல ஆழ்வார்கள் அவதரித்த இடங்களும் பிரதானமானதே. ஆழ்வார்களின் அவதார ஸ்தலங்களுள் மிகவும் சீர்கேடடடைந்திருந்த இந்த திருமண்டங்குடியில் திருப்பணி, ஸம்ப்ரோக்ஷணம் இனிது நிறைவேறியது எம்பெருமான் திருவருளாலேயே' என்று கூறினார்.

ஷை ஊர் பிரபல மிராசுதாரான ஸ்ரீ K. G. பட்டாபிராமன் திருப்பணிக் கமிட்டியின் சார்பில் ஒரு வரவேற்பிதழை அமைச்சருக்கு வாசித்தளித்தார். அதில் மண்டங்குடி சிறப்பும் ஆழ்வார் பெருமையும். அமைச்சரின் சாதனைகளும், மண்டங்குடியில் இனி செய்யவேண்டியவைகளும் குறிப்பிடப்பட்டிருந்தன

திருப்பணிக் கமிட்டியின் செயலரும் பொக்கிஷதாருமான பண்டித சிரோமணி ஸ்ரீ A. S. அரங்க நாதாச்சாரியார் திருப்பணித் தொண்டினைப் போற்றி திருமண்டங்குடிசரக அன்பர்களின் சார்பாக ஒரு பாராட்டுரையை ஸ்ரீ K. G. பட்டாபிராமன் வாசித்தளித்தார்.

'திருப்பணித்திலகம்' என்ற பட்டம் பொறிக்கப்பெற்ற பொற்பதக்கமும், பொன்னுடையும் அமைச்சர் மூலமாக மக்கள் சார்பில் காரியதரிசிக்கு சமர்ப்பிக்கப்பெற்றன.

காரியதரிசி, தமக்கு அளிக்கப்பட்ட மரியாதைகட்கு நன்றி தெரிவித்தவுடன் கனம் M. பக்தவத்ஸலம் அவர்கள் தம் உரையை நிகழ்த்தினர். சில ஆண்டுகட்கு முன் கள்ளியும் முள்ளும் மண்டிக் கிடந்த இவ்வாலயத்தின் திருப்பணியைக் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக, குறைந்த செலவில் நிறைவேற்றியதற்கு மகிழ்வதாகவும், இதற்ககன உழைத்த ஸ்ரீ அரங்கநாதாச்சாரியாரை, ஸ்தலத்திலுள்ள அன்பர்கள் போற்றியதும், பட்டம் வழங்க முன் வந்ததும் மிகவும் போற்றுதற்குரியதாகும். ஒரு பத்திரிகையாளர் என்ற முறையாக அன்னுரை எனக்கு முதலில் நன்கு தெரியும். பின்னர் அவர் பல துறைகளிலும் செய்து வரும் பணிகளும் தெரியும். நான் அவரைப் போற்றுவதைக் காட்டிலும் ஸ்தலத்திலுள்ளவர்கள் போற்றுவது மிகவும் உயர்ந்த முறையாகும் என்று குறிப்பிட்டு தொண்டரடிப்பொடி ஆழ்வாரின் பள்ளியெழுச்சி, திருமாலை பாசுரங்களின் சிறப்பையும் அரங்கன் ஆழ்வாருக்கு அருள் செய்தமையையும், குறிப்பிட்டு மண்டங்குடி என்றும் சிறப்புடன் விளங்கப் பிரார்த்திப்பதாகவும் கூறினர். திருவாசகமணி ஸ்ரீ K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் பள்ளியெழுச்சியின் பெருமையினை விளக்கிப் பேசியபின், காரியதரிசி ஸ்ரீ அரங்கநாதாச்சாரியார் ''மண்டலாபிஷேகமலரை'' சமர்ப்பித்தார். அதில் திருப்பணி சம்பந்தமான விபரங்களும், வரவு செலவு கணக்குகளும் சமர்ப்பிக்கப் பெற்றிருந்தன. பின்னர் அனைவருக்கும் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிவுற்றது. திருப்பணிக் கண்டிராக்டர் ஸ்ரீ ஓவியம் நடராஜிற்கு மாலை சூட்டப் பெற்றுக் கவுரவிக்கப்பெற்றது.

பின்னர் சாத்துமுறையும், கோஷ்டியும் இனிதுநிறைவேறிஅமைச்சருக்கு ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வாரின் மரியாதை, பிரசாதங்கள் வழங்கப்பெற்றன. சுமார் 3 மணி நேரம் இப்புனித விழாவில் கலந்துகொண்டு சுவைத்த அமைச்சரின் பக்தியினைப் போற்ருதார் இல்லை. வெளியூர்களிலிருந்து வந்திருந்த அனைவருக்கும் கோஷ்டி பிரசாதம் வழங்கப்பட்டு விழா இனிது முடிவுற்றது.

## காஞ்சி ஏகாம்பரநாதர் ஆலயத்தில் ''சிவ சிவ ஒலி மண்டபத்'' திறப்பு விழா

25-2-60 அன்று காஞ்சிபுரம், ஏகாம்பரநாதர் ஆலயத்தில், திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் அமைக்கப்பெற்ற ''சிவ சிவ ஒலி மண்டபத்தை'' சென்னை அறநிலையத் துறை ஆணையர் திரு அ உத்தண்டராமன், ஐ ஏ. எஸ்., அவர்கள் திறந்துவைத்தார்கள். விழா துவங்குவதற்கு முன்பாக தேவார இசையரங்கு நடைபெற்றது. ஸ்ரீ காசிமடத்துத் தலைவர் அவர்கள் சுமார் அரை கோடி ரூபாய்ச்செலவில் 286 தருமங்களுக்குமேல் நடைபெறத் திட்டம் வகுத்து, இன்னும் நாள்தோறும் சிறந்த அறப்பணிகளெல்லாம் செய்து வருகிருர்கள். ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்தில் 1955-ம் ஆண்டிலிருந்து தேவாரம், திருவாசகம் முதலிய தெய்வப்பனுவல்கள் ஒலிபெருக்கியின்மூலம் நாள்தோறும் ஓதுவதற்குத் திட்டம் வகுத்து இவ்வாலயத்தில் இயங்கிவரச் செய்திருக்கிருர்கள். அப்பணி இன்னும் சிறப்பாக நடைபெறுவதன் பொருட்டு இங்கு சிவ சிவ ஒலி மண்டபம் ஒன்றை இப்போது அமைத்திருக்கிருர்கள். அறநிலையத்துறை ஆணையர் திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமையுரையில் இவ்விழா நடந்துகொண்டிருக்கையில் இறைவனும் இறைவியும் உலாச்சென்று திரும்பி வரும்போது விழாப்பந்தலில் கூடியிருந்தவர்களுக்குக் காட்சிதந்தது இறைவன் திருவருள் எதிர்பாராமல் கிடைக்கக்கூடியது என்பதை மெய்ப்பிப்பதாகும் என்றும், அது அவ்விழாவை இறைவன் வாழ்த்துவதுபோல் அமைந்த நிகழ்ச்சியாகும் என்றும், சிவ சிவ ஒலி மண்டபத்தை அமைத்தருளிச் செய்தவர் எவ்வளவு அருள் உடையவர் என்பதைக் காட்டுவது இறைவன் எழுந்தருளிக் காட்சிதந்த நிகழ்ச்சி என்றும் குறிப்பிட்டார்கள். இறைவன் ஓசை ஒலியாகவும், தேச விளக்காகவும், வாச மலராகவும், இப்படியாக உலகத்தில் உள்ள எல்லாம் அவனுகவே இருக்கிருன் என்றும், எல்லாவற்றையும் இறைவன் திருவருளாகக் காண வேண்டுமென்றும், நாம் பார்க்கின்ற ஒவ்வொன்றிலும் பரிபூரணனைக் காணவேண்டும் என்றும், இந்த நிலையில்தான் நாம் கேட்கின்ற ஒலிகளெல்லாம் இறைவனுடைய சிவ சிவ ஒலியாகவே இருக்கவேண்டும், பார்க்கும் இடமெல்லாம் சிவ சிவ ஒளியாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் எங்கு பார்த்தாலும் திருமுறை ஒலிக்கும்படியாகவும், சிவ சிவ ஒளி பிரகா

சிக்கும்படியாகவும் அமைத்துக்கொண்டு வருகிறார்கள் என்றும் குறிப்பிட்டு, எங்கு சிவ சிவ ஒலி இருந்தாலும், அது திருப்பனந்தாள் மடத்தார் தான் வைத்திருப்பார்கள் என்று நினைக்கும் அளவுக்கு சுவாமிகள் அவர்கள் 'சிவ சிவ'த்தைப் பரப்பியிருக்கிறார்கள் என்றும், குறிப்பிட்டார்கள். அரை கோடி ரூபாய்க்குமேல் ஸ்ரீ காசி மடத்துத்தலைவர் அவர்கள் பேரறக் கட்டளைகள் நிறுவியிருக்கிறார்கள் என்றும், அன்னார் இலட்சம் இலட்சமாகச் செலவு செய்வதோடு இலட்சியத்திற்காகவே செலவிடுகிறார்கள் என்றும், அதுபோன்றுதான் சிவ சிவ ஒலி மண்டபங்களைப் பல இடங்களில் வைத்து வருகிறார்கள் என்றும், இறைவன் எண்ணம் இப்படி எப்பொழுதும் நினைவிற்கு வரவேண்டுமென்று அவர் செய்துவருகிற பணிகள் கணக்கில் அடங்கா என்றும் குறிப்பிட்டார்கள். "தேவாரத்தினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்பதை நிதரிசனமாகக் காட்டும் வண்ணம் இவ்விழாவில் நம் முன்னால் 91 வயது நிரம்பிய பெரியார் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார் என்றும், அவர் 84-ஆவது வயதிலே கீழே விழுந்ததன் காரணமாக வலதுகால் முழங்காலுக்குக் கீழேயும் இடுப்பிலும் எலும்பு ஒடிந்துவிட்டது என்றும், அதைப் பெரிய பெரிய மருத்துவர்களும் குணப்படுத்த முடியவில்லை என்றும், கடைசியில் தேவாரப்பதிகங்கள் பாடி, இறைவனிடம் முறையிட்டு, தீராத நோயிலிருந்து இறைவன் திருவருளால் விடுபட்டார் என்றும், அவரை நாம் இன்று நம் கண் முன்னே கண்டுகொண்டிருக்கிறோம் என்றும் எடுத்துரைத்தார்கள். மண்டபம் திறந்து வைக்கப்பட்டதற்குப் பிறகு, ஓதுவா மூர்த்திகள் இருவரும் மாறி மாறியும், சேர்ந்தும் 'முந்தைகாண், பாயுமால்விடை, எள்கலின்ற, படமாக, அற்புதத் தெய்வந்த, மன்னுக தில்லை, எண்ணில் ஆகமம், நெஞ்சம், சென்ற காலத்தின்' என்று துவங்கும் பதிகங்களைப் பாடினார்கள். சிவநெறிச் செல்வர் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரித் தலைவர் வித்துவான் கே. எம். வெங்கட்டராமையா, எம். ஏ., பி. ஓ. எல்., அவர்கள் "காஞ்சியும் திருமுறையும்" என்னும் பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். 25-2-60 காலை ஸ்ரீ ஏகாம்பரநாதருக்குப் புனுகு மெய்ப்பூச்சும் விசேஷ ஆராதனையும் ஸ்ரீ காசிமடத்துச் சார்பில் நடைபெற்றது.

✳✳✳

**பழநி :** தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் பங்குனி உத்திர பிரம்மோற்சவ விழா 3-4-60 முதல் 12-4-60 வரை நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

**காஞ்சிபுரம் :** மெய்கண்டார் கழகம், திருவேகம்பநாதர் கோயிலில் பங்குனி உத்திரப் பெருவிழா 31-3-60 முதல் 13-4-60 வரை நடைபெறும். அதுபோது சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

**திருப்பேரூர் :** பட்டீசுவரசுவாமி கோயிலில் பங்குனி தேர்த்திருவிழா 1-4-60-ல் தொடங்கி 10-4-60-ல் நிறைவேறும்.

◆ ◆ ◆ ◆

**ஆத்தூர் :** சோமநாதசுவாமி கோயிலில் பங்குனித் திருவிழா 31-1-60ல் தொடங்கப்பெற்று 9-4-60-ல் நிறைவேறும். ஒவ்வொருநாள் மாலையிலும் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பெறும்.

◆ ◆ ◆ ◆

**கல்லங்குறிச்சி :** கலியுகவரதராஜப்பெருமான் கோயிலில் பிர்ம்மோற்சவவிழா 5-4-60 முதல் 14-4-60 வரை நடைபெறும். விழா நாட்களில் சமயச்சொற்பொழிவுகளும், இன்னிசை அரங்கும் நடைபெறும்.

◆ ◆ ◆ ◆

**திருப்பேரூர் :** கந்தசாமி திருக்கோயில் முருகன் செந்தமிழ்க் கழகச் சுவடி நிலையத்தை சென்னை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. எம், எஸ். சாரங்கபாணி முதலியார், பி. ஏ. பி. எல். அவர்கள் 31-3-60-ல் திறந்து வைத்தார்கள். திரு. கி. சோமசுந்தரஞ்செட்டியார், பி. ஏ. அவர்கள் தலைமை வகித்தார்கள். வித்துவான் திரு. எஸ். முருகேச முதலியார் அவர்கள் " முருகன் பெருமை " பற்றி விரிவுரையாற்றினார்கள்.

**திருவாரூர் :** தியாகராஜசுவாமி கோயிலில் பங்குனி உத்திரமகோற்சவ விழா 12-3-60 முதல் 19-4-60 வரை நடைபெறும்.

**திருக்கண்டியூர் :** ஹரசாப விமோசனப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவ விழா 1-4-60 முதல் 12 4-60 வரை நடைபெறும்.

**இளையாற்றக்குடி :** கைலாசநாதசுவாமி கோயிலைச் சேர்ந்த கீரணிப்பட்டி முத்துமாரி யம்மன் கோயிலில் மகோற்சவ விழா 10.4-60 முதல் 19-4-60 வரை நடைபெறும்.

**வலங்கைமான் :** வரதராஜம்பேட்டை மகா மாரியம்மன் கோயிலில் 27-3-60 அன்று பெருந்திருவிழா நடைபெற்றது 3-4-60-ல் புஷ்பப்பல்லக்கு உலாக்காட்சியும் நடைபெறவிருக் கிறது.

**ஆண்டார்குப்பம் :** பாலசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரம்மோற்சவ விழா 22-4-60 முதல் 4-5-60 வரை நடைபெறும்.

**திருநெல்லிக்காவல் :** நெல்லிவனநாதசுவாமி கோயிலில் வாரவழிபாட்டுக் கூட்டத்தை 24-2-60 புதன் கிழமை தஞ்சை அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு. டி. எச். விவே கானந்தம்பிள்ளை, பி. ஏ. எல். டி. அவர்கள் ஆரம்பித்து வைத்துச் சொற்பொழிவும் நிகழ்த் தினர்கள்.

**திருமுருகன் பூண்டி :** முருகநாதேசுவரர் கோயிலில் தேர்த் திருவிழா 5-3-60 முதல் 16-3-60 வரை நடைபெற்றது.

**திருநாட்டியத்தான்குடி :** இரத்தினபுரீசுவரசுவாமி கோயிலில் சென்ற ஒரு திங்களாக சுவாமிக்கும் அம்பாளுக்கும் நடந்துவந்த இலட்சார்ச்சனை பூர்த்தி விழா சென்ற 18-3-60 வியாழனன்று சிறப்பாக நடைபெற்றது. பாலக்குறிச்சி மிராசுதார் திரு. பி. கே. இராஜரத் தினம் அவர்கள் தன் சொந்தசெலவில் பூர்த்தி விழாவைச்சிறப்பாக நடத்திக்கொடுத்தார்கள்.

**லால்குடி :** சப்தரிஷீசுவர சுவாமி கோயிலில் 31-3-60 முதல் 18-4-60 முடிய பிரம்மோற்சவம் நடைபெறும்.

**நிலக்கோட்டை வட்டம்** முள்ளிப்பள்ளம் வரதராஜப் பெருமாள்கோயிலில் இராமநவமி உற்சவம் 5 முதல் 14-4-60 முடிய நடைபெறும்.

**ஒரத்தநாடு வட்டம் :** காசவளநாட்டு கோயிலூர் ஜம்புகேசுவரசுவாமி கோயிலில் பங்குனிப் பெருந்திருவிழா 1 முதல் 11-4-60 வரை நடைபெறும்.

**சிக்கரசன் பாளையம் :** பண்ணாரிமாரியம்மன் கோயிலில் பங்குனிப் பெருந்திருவிழா 28-3-60 முதல் 11-4-60 வரை நடைபெறும்.

**அதிராம்பட்டினம் :** அபயவரதேசுவரசுவாமி கோயிலில் 22-3-60-ல் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. தஞ்சை அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை அவர்கள் வாரவழிபாட்டைத் துவக்கி வைத்துச் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். திருமுறை திருக்கோயில் திறப்பு விழாவும் நடைபெற்றது. திரு. டி . எஸ். கே. சோமசுந்தர தேவர் தலைமை தாங்கினர்கள். திரு. பி. துளசேந்திர ராஜா பான்சுலே வரவேற்பு உரை நிகழ்த்தினர்கள்.

**செட்டிகுளம் :** தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் 2-4-60 முதல் 14-4-60 வரை பங்குனி உத்திரவிழா நடைபெறும். 10-4-60 அன்று தேர்விழா.

# திருவிளையாடற் பாமாலை

திருநெல்வேலியில் சுமார் 64 ஆண்டுகளுக்கு முன் சைவ வேளாள குலத்தில் தோன்றிய மா. வீரபாகுபிள்ளையவர்கள் பத்தினி முத்தம்மாள் என்ற அம்மையார் நூலறிவு அதிகம் இல்லை யெனினும் இறையன்பும் அருளும் நிறைந்த வாழ்க்கை நடத்திவந்து திருவிளையாடற் புராணத்தின் சாரமாக ஒரு அற்புத பாமாலை மீனுட்சியம்பிகைபேரில் இயற்றியுள்ளார். திருச்செந்தூர் நவராத்திரி கட்டளை நடத்திவரும் குடும்பத்தாரின் மூதாதையரில் அவ்வம்மையார் குடும்பமும் ஒன்று. இறையருள் உள்நின்றுணர்த்த அவ்வம்மையார் இந்த அரிய பாமாலையை இயற்றியிருக்கிறுர். இப்பாமாலைக்குச் சாற்றுக்கவியாக ஆழ்வார் திருநகரி அட்டாவதானம் பெரிய திருவடிக்கவிராயர் அவர்கள் ஒரு வெண்பாமூலம் பாராட்டியுள்ளார்கள்.

அன்பரெலாஞ் சொக்கரறுபத்து நாலென்னும்
இன்பவிளையாட்டை யியம்பிடுக—நன்புடனே
பாமாலையாகப் பகர்ந்திட்டாள் முத்தம்மாள்
தேமா கற்கண்டென்க தேர்ந்து.

இந்த பாமாலை மிகவும் எளிய இனிய தமிழ் நடையில் எல்லோரும் நன்கு புரிந்து கொள்ளும் வகையில் இரத்தினச் சுருக்கமாக அமைந்திருப்பது இதன் சிறப்பியல்பாகும். இந்த பாமாலையை ஆடவரும் பெண்டிரும் பெரியோரும் சிறியோரும் நாள்தோறும் ஓதிவந்தால் திருவிளையாடற்புராணம் பாடக்கேட்ட பயனைப்பெறலாம்.

### காப்பு

பத்தியாய்த் துதித்துநின்று பணிந்திடு மடியார்க் கெல்லா
முத்தியை யருளுமூல முதற்பொருளாகி நின்ற
வித்தக விமலசித்தி விநாயக மறைகள்போற்றும்
உத்தம சிறியேனெஞ்சி லுறைந்து நற்றுணைச் செய்வாயே.

### 1. இந்திரன் பழிதீர்த்த படலம்

கற்பகத் தருவோன்கொண்ட கடும்பழிநீக்கியாண்ட
அற்புதனிடத்தினீங்கா வருள்பழுத்தொழுகியெங்குந்
தற்பரவத்துவாகிச் சராசர நிறைந்துநின்ற
சிற்பரத்திருவேகன்னி சிறந்த மீனுட்சித்தாயே.

### 2. வெள்ளையானை சாபந்தீர்த்த படலம்

வாரண முனிசாபத்தால் வருந்தியே வானநீங்கித்
தாரணிதன்னில்வந்து சஞ்சரித்துழன்றுவாடிப்
பூரணவன்பாய்நின்று பூசிக்கப்பழியைமாற்றுங்
காரண நிதியைச்சார்ந்த கன்னிமீனுட்சித்தாயே.

### 3. திருநகரங்கண்ட படலம்

கானகந்தன்னைநீக்கிக் களிப்பொடு மதுரையாக்கித்
தானதிற் செழியன்மேவித் தங்கிடக்கிருபைசெய்த
மோனமாம் பொருளேயான முதல்வனைப்பகிர்ந்து மேவுந்
தேனம ரலங்கல்வேய்ந்த செல்விமீனுட்சித்தாயே.

### 4. தடாதகைப்பிராட்டியார் திருவவதாரப் படலம்

மலையமாத்துவசன்கொண்ட மகவிலாவறுமைநீங்கச்
சிலைநுதற்குழவியாகத் தேயுவினிடத்திற்றேன்றிப்
பலமுறுதவஞ்செய்ராச பத்தினி மடியின்மேவித்
தலைவியாயாடல்செய்த தையன் மீனுட்சித்தாயே.

### 5. திருமணப் படலம்

கன்னிகையாகி வையங் களிப்புறச்செங்கோ லோச்சித்
துன்னியே யட்டதிக்குஞ் சூளினுலடக்கிமேலாம்
பன்னரும் பொருளாய்நின்ற பரமற்குமாலைவேய்ந்த
தன்னிகரில்லாக் காட்சித் தையன் மீனுட்சித் தாயே.

### 6. வெள்ளியம்பலத் திருக்கூத்தாடியபடலம்

தும்பையோ டறுகுகங்கை துளிமதுக்கொன்றை தாங்கிப்
பம்பைசின்னங்களார்ப்பப் பரவியமுனிவர்க்காக
அம்பலந் தன்னினிர்த்த மாடிய வருளைச்சேர்ந்த
உம்பர்நாயகியே கன்னி யுறைந்த மீனுட்சித்தாயே.

### 7. குண்டோதரனுக்கு அன்னமிட்டபடலம்

கடிமணந்தெரிசித்தோர்க ளருந்தியுங் கணக்கில்லாமற்
படியினின்மேருவாகப் பகர்ந்திடுமன்னக்குன்றை
அடிமிசை தொழுத பூத் மருந்திடவருள்செய்சோதி
பொடியணியுருவின்மேவிப் பொருந்து மீனுட்சித்தாயே.

### 8. அன்னக்குழியும் வையையு மழைத்தபடலம்

எங்குமாய் நிறைந்துநின்றே னேத்திடும் பூதமுண்ணப்
பொங்கிய வன்னக்குண்டும் பொருந்திய வையையாறும்
இங்கழைத்தருத்தல்செய்த வேகமாம் பிரமஞ்சேர்ந்த
திங்களின் வதனீகன்னிச் செல்விமீனுட்சித்தாயே.

### 9. எழுகடலழைத்த படலம்

பொன்னிறக் கொன்றைசூடிப் புண்ணியப் பொருளாய்நின்ற
முன்னவன் மாமிக்காக முழங்கிடும் வாரியேழும்
இன்னிலந் தனில்வரச்செ யேகமாம் பிரமமான
கன்னலின் ரசத்தைச்சேர்ந்த கவுரிமீனுட்சித்தாயே.

### 10, மலையத்துவசனையழைத்த படலம்

பொன்னகர்க்கிறைவன்கூடப் பொருந்திடுஞ் செழியன்றன்னை
உன்னியீண்டழைத்துமாமி யுடன் கடலாடச்செய்து
தன்னிகரில்லாமேலாந் தனிப்பதமருள் செய்திட்ட
மின்னிகர் மௌலியானைமேவு மீனுட்சித்தாயே.

### 11. உக்கிரபாண்டியன் திருவவதாரப்படலம்

பற்பலயுகமாய்த்தேவர் படுந்துயர் நீக்கியாண்ட
சிற்பரம்பொருளைமேலாந் திருவயிறுளையவீன்றே
அற்புதத்தனப்பாலூட்டி யருள்பழுத்தமர்ந்துமேவுங்
கற்பகத்தருவேஞானக் கன்னிமீனுட்சித்தாயே.

### 12. உக்கிரகுமாரனுக்குவேல்வளைசெண்டுகொடுத்தபடலம்

இந்திரன்றேசை வென்றிங் கிலங்கியே சொலிக்குஞ்சேய்க்குச்
செந்திருவனையாடன்னைத் திருமணம் புரிந்துகாந்தி
தந்திடுமௌலிசூட்டித் தாங்கவேல் வளைசெண்டீந்த
சுந்தரப் பொருளைச்சேர்ந்து துலங்குமீனுட்சித் தாயே.

## 13. கடல் சுவற வேல்விட்ட படலம்

கந்தனே செழியனென காளையென்றுணரானுகி
இந்திரன் மதுரைவீய வேலியவாரிபொங்கி
வந்திடவேலான்மாற்ற மைந்தனுக்கருள்செய்திட்ட
அந்தமில் பொருளைமேவு மம்மை மீனுட்சித்தாயே.

## 14. இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

பன்னவும் பரவிவேதம் பணியவு மளவிலாதோன்
தன்னையே நிகர்த்ததேசு தங்கிடுஞ்செழியனென
மன்னனை வலாரிசெம்பொன் மகுடத்தை வளையாற்ருக்குங்
கன்னலினமுதையீன்ற கன்னிமீனுட்சித்தாயே.

## 15. மேருவைச் செண்டாலடித்த படலம்

தன்னிகரில்லா நேயத் தற்பரம்பொருளா யெங்கு
மின்னினைப் பழித்ததேசு விளங்கிடும் பரமன் வில்லாம்
பொன்னசலத்தைச் செண்டாற் புடைத்து வைப்பெடுத்த மைந்தற்
கன்னையாங் கன்னிக்கோல மமைந்தமீனுட்சித் தாயே.

## 16. வேதத்துக்குப் பொருளருளிச்செய்த படலம்

ஆதியாயமலமாகி யளவிலா முதலுமாகி
நீதியாயமர்ந்தோய்வேத நெறியெமக் கருள்வாயென்ன
ஓதிய முனிவர்தேர்வா னுசிதமாம் பொருடெரித்த
சோதியிற் கலந்துதேசு சொலிக்குமீனுட்சித்தாயே.

## 17. மாணிக்கம் விற்றபடலம்

கோமுடிக்குமரற்காகக் குருமணித்திரளையீந்து
பூமகட் கிறைவனுக்கும் புனிதனைக் கலந்துமேவு
மாமறைச் சிலம்பொலிக்கு மலர்ப்பதக் கொடியே ஞானச்
சேமவைப்புருவமாகத் திரண்டமீனுட்சித்தாயே.

## 18. வருணன்விட்ட கடலைச்சுவறச் செய்த படலம்

அப்புவினரசனேவு மளக்கர்மா மதுரைசூழச்
செப்புதற் கரியோன் காராற் சிதறவே குடிக்கச் செய்து
இப்புவனத்தின்மேலா யிலங்கிரத்தினத்தின்றேசு
வைப்பினைக் கலந்துமேவி வழங்குமீனுட்சித்தாயே.

## 19. நான்மாடக் கூடலான படலம்

சோதியாம் புனிதன்றன்னைச் சோதிக்க வருணனேவ
மேதினிதுன்பமெய்த விரைந்துபெய் மாரிதன்னைச்
சீதமா முகிலையேவிச் சிதைத்துநான் மாடமாக்கும்
நாதனிற் கலந்துமேவு நங்கை மீனுட்சித்தாயே.

## 20. எல்லாம் வல்ல சித்தரான படலம்

முத்திக்கோர் வித்தாய்வேத முதற்கொழுந்தாகி ஞானப்
பத்திசெய்துறவோர்நெஞ்சிற் பரப்ரம வெளியாய் நிற்போன்
சித்தராயாலவாயிற் றிருவிளை யாடல்செய்த
அத்தனிற் கலந்துமேவி யமர்ந்த மீனுட்சித்தாயே.

### 21. கல்லானைக்குக் கரும்பருத்திய படலம்

பலபலயுகமாய்வேதன் பறவையாய்த் தேடிக்காணுக்
கலைநிறை மதியஞ்சூடுங் கடவுளைச் செழியன் வேண்டச்
சிலைகயவுருவாய்க்கன்ன றின்றிட வருட்கண்வைத்த
தலைவனைப் பகிர்ந்துமேவுந் தையன்மீனாட்சித்தாயே.

### 22. யானையெய்த படலம்

ஐவர்களென்றவேட ரடங்கவே பொறியால்வென்ற
மெய்யர்கட் கொளியாய்நின்று விளங்குவோன் செழியற்காகக்
கையில்வில் லேந்திவேடக் காளையாய்க் களிற்றை மாய்த்த
துய்யனைக்கலந்துமேவிச் சொலிக்குமீனாட்சித்தாயே.

### 23. விருத்தகுமார பாலரானபடலம்

பருவரலெய்தித்தேவர் பதுங்குங் காலாலந்தன்னை
இருளதாய்க் கண்டஞ்சேர்த்த வேகனைக் கவுரிக் காகக்
கருணைசேர் விருத்தனுகிக் காளையாய்க்குழவியான
அருளினைக் கலந்துமேவு மம்மை மீனாட்சித்தாயே.

### 24. மாறியாடின படலம்

வடவரை சிலையாய்ச் சேர்த்த மாணிக்கத்திரளை வேப்ப
மடலணி மார்பன் வேண்டி வருந்தியே பணிந்து நிற்கத்
தடமலர்ப்பாதமாறி நடித்திடுந்தவத்தின் வாழ்வை
இடமதாயமர்ந்து கன்னிக் கிசைந்தமீனாட்சித்தாயே.

### 25. பழியஞ்சின படலம்

அரவம் வெள்ளெருக்குச்சூடு மாதியே முறையோ வென்று
புரவலன் மறையோற்காகப் புலம்பியே பழிக்குநியாயந்
திரமுறவுரைப்பா யென்னத் திகழ்தல் செய் பொருளைச்சேர்ந்த
பரையெனுமுமையே கன்னிப் பருவமீனாட்சித்தாயே.

### 26. மாபாதகந் தீர்த்த படலம்

தந்தையைக்கொன்று தாயைத் தழுவியகொடி யோனைச்சூழ்
அந்தமில் பழியை நீக்கி யருமறையவனுய்ச்செய்த
இந்துசேர் சடையினானை யிடமதாயமர்ந்து நீங்காச்
சுந்தரவுமையே கன்னி சொலிக்கு மீனாட்சித்தாயே.

### 27. அங்கம் வெட்டின படலம்

குரவன்றனில்லாட்சேரக் குறிப்புடைக் கொடி யோன்றேகம்
அரிதல்செய்தவடன் கற்பை யருளிய வமலன்மூன்று
புரமழல்படநகைத்த புங்கவனிடத்தின்மேவுந்
தரளவெண்ணகையாய் கன்னி தங்கு மீனாட்சித் தாயே.

### 28. நாகமெய்த படலம்

அஞ்சனக் குண்டரேவு மரவினையடுபோர்செய்து
பஞ்சவன்றுணித்தலோடும் பணியுமிழ் விடத்தை நீத்த
குஞ்சர வுரியினானைக் குறிகுணமில்லாவாழ்வைத்
தஞ்சமாய்ச் சேர்ந்துமேவுந் தையன்மீனாட்சித் தாயே.

### 29. மாயப்பசுவை வதைத்த படலம்

அடுபழியஞ்சாக்கைய ரவலம்வந்தாவை யேவக்
கடிகமழ் வேப்பந்தாரான் கலங்கியே போற்றி செய்ய
விடையினையேவிமாயப் பசுவினை வீழ்த்தல்செய்த
பொடியணி பொருளைச்சேர்ந்த புனிதமீனாட்சித் தாயே.

### 30. மெய்க்காட்டிட்ட படலம்

சிவந்தகட் சமணைக்காய்ந்த சேவடிக்கன்பு பூண்டு
பவந்தனை விலக்குஞ்சேனை காவலன் பரிவுக்காக
அவந்தெறு பலவாந்தேசத் தரசராய் மெய்க் காட்டிட்ட
கவின்பெறு பொருளைச்சேர்ந்து களிக்குமீனுட்சித் தாயே.

### 31 உலவாக்கிழியருளிய படலம்

மறையவரொழுக்கநீக்க வறுமைநோயுற்றுவாடி
இறைவனே முறையோவென்றன் றிரங்கியே செழியன்றுழ்ந்து
தறையிடைத் துயிலுங்காலை தனக்கிழி யருளிச் செய்த
பிறையணி பொருளைமேவும் பெருமை மீனுட்சித் தாயே.

### 32. வளையல்விற்ற படலம்

பணிப்புறு வளையல்விற்கும் பழவணிகனைப் போல் வந்து
வணிகமாப் பெண்கள்கையில் வளையணிந்தருட்க ணேக்கத்
தணிவிலாமோகங்கொண்டு தனையருற் பவிக்கச் செய்த
கணிதமில் பிரமஞ்சேர்ந்து களிக்குமீனுட்சித்தாயே.

### 33. அட்டமாசித்தி யுபதேசித்த படலம்

வரதனன்மொழியாற்கல்லா மங்கையர்க் கருட்கண் வைக்க
அரிவையரெழுந்துபோற்றி யடியிணைவணங்கிக் கேட்கச்
சரதமாஞ் சித்தியெட்டுந் தயையுடனுபதேசித்த
விரதனிற் கலந்துமேவி விளங்கு மீனுட்சித்தாயே

### 34. விடையிலச்சினையிட்ட படலம்

கருதருஞ் சேவைசெய்யக் கருதிய வளவன்றன்னை
இருளிடை யழைத்துப்போகி யின்புறுங் காட்சி நல்கி
அருள்புரிந் தனுப்பி வாசற் கடல்விடைக் குறியை யிட்ட
விரைகமழ்கொன்றையானை மேவுமீ னுட்சித்தாயே.

### 35. தண்ணீர்ப்பந்தல் வைத்த படலம்

செழியனும் வளவன்றனுஞ் சீறிநின்றடுபோர் செய்யக்
கழுகுசேர் களத்தின்மேவுங்கைதவன் சேனைவாடும்
பொழுதினிற் றுகந்தீரப் பொருந்தியே தண்ணீர் வார்த்த
தழலுருப் பரனைமேவுந் தையன்மீனுட்சித்தாயே.

### 36. இரசவாதஞ்செய்த படலம்

சித்தராயுருவங்கொண்டு சேயிழை யகத்திற்போகி
அத்தவென்றன்னுள்போற்ற வகமகிழ்ந்துலோகந் தன்னைச்
சுத்தவெண் பூதிதூவிச் சுடரிடைப் பொன்னுச் செய்த
உத்தமப்பொருளைமேவி யுலவுமீனுட்சித்தாயே.

### 37. சோழனை மடுவில்வீட்டிய படலம்

தென்னனுங்கோழிவேந்துஞ் சீறிநின்றமர் செய்தோடி
அன்னவ ராலவாயி னகழில்வீழ்ந் தமிழப்பாண்டி
மன்னவ னுய்யுமாறு மகிழ்வுடன் கருணைசெய்த
பொன்னிற மௌலியானைப் பொருந்து மீனுட்சித் தாயே.

### 38. உலவாக்கோட்டை யருளியபடலம்

சுழியுடைக் கங்கைசூடுஞ் சோதியே பொருளென்றெண்ணிப்
பழிதவிர்த் தொழுகுமன்பன் படுந்துயர் வறுமைநீங்க
அழகியவுலவாக்கோட்டை யருளிய வமுதைச்சேர்ந்து
குழவியாச்சிறந்துகன்னி குலாவுமீனுட்சித்தாயே.

### 39. மாமனுகவந்து வழக்குரைத்த படலம்

காமனைப் பொடியாய்ச்செய்த கண்ணுதல்வணிகச் சேய்க்கு
மாமனுய்வழக்குவென்று மங்கையின் றுன்பநீக்குந்
தாமமாங்கொன்றைசூடி சச்சிதானந்த வாழ்வை
வாமமாய்க் கலந்துதேசு வழங்கு மீனுட்சித்தாயே.

### 40. வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம்

வரகுணச்செழியன்கொண்ட மாற்றரும்பழியை நீக்கித்
திரமுறவவற்கு மேலாந் தெரிசன மமையச்செய்த
புரவலன்சுருபந்தன்னிற் பொருந்தியேயுயிர்கடோறு
நிரைதவநிதியமாக நிறைந்தமீனுட்சித்தாயே.

### 41. விறகு விற்ற படலம்

செந்திருமார் பன்வேதன் தேடரும் பொருளாய் நின்றேன்
இந்தனமுடிமேற்றுங் கியிசைவலான்பொருட்டாய்த் தோன்றிச்
சுந்தரவிசையாலேம நாதனைத் துளங்கவென்ற
அந்தமிலாத தேசிலடங்கு மீனுட்சித்தாயே.

### 42. திருமுகங்கொடுத்த படலம்

கார்புனைசடிலத் தண்ணல் கருதியபாணற்காகச்
சேரலனிதியமீயத் திருமுகமெழுதியீந்தோ
னீரலர் மௌலிநாத னித்தியானந்தவாழ்வாம்
பூரணனிடத்தின்மேவிப் பொருந்து மீனுட்சித் தாயே.

### 43. பலகையிட்ட படலம்

கலைமதிக்கற்றைசூடுங் கருதரும்பொருளேயென்று
தலமிசைப்பாணன்பாடுந் தனியிசைப் பாடற்காகப்
பலகையை யீதல்செய்த பரப்ரமவெளியைச் சேர்ந்த
சிலைநுதற்றிருவே கன்னி சிறந்தமீனுட்சித்தாயே.

### 44. இசைவாதுவென்ற படலம்

பனிமதிமரபோன்வார வழக்கினைப் பகரயாழின்
தனியிசைவிறலிமேலாந் தனிமுதற் கபயமென்னப்
புனிதமெய்ப் புலவனுகிப் பொதுமையா யுரைத்துவென்ற
வினியபே ரமுதைச்சேர்ந்தே யிலங்குமீனுட்சித் தாயே.

### 45. பன்றிக்குட்டிக்கு முலைகொடுத்த படலம்

பொன்றிகழ்மேனியானைப் புலம்பிவிண்ணடைந்த தாயாய்ப்
பன்றிமைக்குருளையுண்ணப் பாலமுதருத்தி ஞானம்
வென்றிசேர் மனுடயாக்கை விளங்கிடக் கிருபை செய்த
மின்றிணிமௌலியானை மேவுமீனுட்சித்தாயே.

### 46. பன்றிக்குட்டிகளை மந்திரியாக்கிய படலம்

சந்திர மௌலியான்செந் தழலதா யமைந்தமேனிச்
சுந்தரன் சூகரத்து முகமுடன் சொலிப்போர்தம்மை
மந்திரியாகப்பாண்டி மன்னவர்க்குறுதிசெய்த
அந்தமில் சுருபன்றன்னேடைமந்த மீனுட்சித்தாயே.

### 47. கரிக்குருவிக்குபதேசஞ்செய்த படலம்

வரிப்புலியுரித்துப்போர்த்து மன்னுயிர்க் குயிராய் நின்றேன்
கரிக்குரீஇ புன்மைநீங்கக் கருணையா லுபதேசித்தோன்
சிரிப்பினுற் புரங்கண்மூன்று மெரித்திடுந் திறலோனை
நிருத்தனுரிடத்தின்மேவு நிமலமீனுட்சித்தாயே.

### 48. நாரைக்கு முத்திகொடுத்த படலம்

பத்திசெய் பாலற்காகப் பகடிவர் கூற்றைக்காய்ந்தோன்
வித்தக நாரை தாழ்ந்து வேண்டிடக் கிருபையோடு
முத்தியை யளித்தமேலா முதலெனும் வாழ்வைச் சேர்ந்தே
சத்தியாங் கவுரியான தையன்மீனாட்சித்தாயே.

### 49. திருவாலவாயான படலம்

வேலைகளேழும்பொங்கி மேதினி யழிந்துதோன்ற
மாலையிற்பிறைபோல்வந்த மன்னவன் வேண்டவெல்லை
மேலணியரவாலால வாயெனவேலியிட்ட
மூலமாம் பொருளைமேவு முதல்விமீனாட்சித்தாயே.

### 50. சுந்தரப்பேரம்பெய்த படலம்

கந்தரங்கறுத்தோயென்று கருதிடுஞ் செழியனோடு
வந்தமர் புரிந்தபொன்னி வளவனோடெதிர்த்து நின்று
சுந்தர நாமவாளி தூவியே வெற்றிகொண்ட
அந்திவான் சடையான்பாக மமர்ந்த மீனாட்சித்தாயே.

### 51. சங்கப்பலகைதந்த படலம்

நாமகளருளாற்றேன்று நாவலர்வேண்டிப்போற்ற
மாமதிதனைப்பழிக்கும் வாலிய பலகையீந்து
தாமதிலமர்ந்து சங்கத்தமிழினைத் தேற்றல்செய்த
ஓமெனும் பொருடனைச்சேர்ந்துலாவு மீனாட்சித்தாயே.

### 52. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம்

தஞ்சமென்றடியில்வீழ்ந்ததருமிபொற்கிழியைமேவப்
பஞ்சவன்கருத்தை யாங்குபனுவலாயருளிச்செய்த
நஞ்சணிகடவுளான நாயகனிடத்தின்மேவும்
வஞ்சியே கன்னிக்கோலம்வாய்த்த மீனாட்சித்தாயே.

### 53. கீரனைக் கரையேற்றிய படலம்

மதித்திடா தெதிர்த்துவார்த்தை வழங்கிய கீரன்றேகம்
பதைத்திடப் பொரிந்துபொய்கை படிந்திடப் புலவோர்வேண்டித்
துதித்திட வன்னோன்றேகந் தோன்றிடக் கரையேற்றிட்ட
கதித்கொருவித்தாந்தேசைக் கலந்த மீனாட்சித்தாயே.

### 54. கீரனுக்கிலக்கணமுபதேசித்த படலம்

மெய்யனே விமலாவேத வித்தனே தழலாமேனி
ஐயனே யென்றுபோற்ற வருளுடன் பொதியை மேவுந்
துய்யனைவருத்திக்கீரற் கிலக்கணந் துலங்கும் வண்ணஞ்
செய்தவப் பொருளைச்சேர்ந்து சிறந்த மீனாட்சித்தாயே.

### 55. சங்கத்தார் கலகந்தீர்த்த படலம்

அந்தமில் கேள்வியோடு மமைந்தசங் கத்தாரெல்லாஞ்
செந்தமிழ் செய்து தம்மிற் செருக்குறுங் கலகந்தீர்ப்பான்
வந்தனைசெய்யமூங்கை வணிகபுத்திரனாற் றேற்றுங்
கந்தரங் கறுத்ததேனைக் கலந்தமீனாட்சித்தாயே.

### 56. இடைக்காடன் பிணக்குத்தீர்த்த படலம்

பன்னருந்துன்பத்தாழ்ந்து பகரிடைக் காடனோடு
முன்னரும் விமானநீங்கி முடியுடைவேந்தன் ரூழ்ந்து
நன்னிதி பனுவல்கேட்டு நாவலர்க்குதவச்செய்த
பொன்னவிர் தேசைச்சேர்ந்துபொருந்து மீனாட்சித்தாயே.

158338
சென்னை-600 008

### 57. வலைவீசின படலம்

சந்தநான் மறைகள்போற்றத் தனிமுதலுருவாய்த் தோன்றி
அந்தமிலளக்கர்தன்னி லாடல்செய்சுருவா நந்தி
வந்துற வலையைவீசும் வரனுக்குப் பரதனல்குஞ்
சுந்தரத்திருவே கன்னி துலங்குமீனாட்சித்தாயே.

### 58. வாதவூரடிகளுக்குபதேசித்த படலம்

பொய்யெனுங் குறும்பைநீத்துப் புலனைநல் வழியிற் சேர்த்து
மெய்யெனும் பதத்தைமேவி விளங்கிடும் வாதவூரற்
கையமில் குருவாய்ஞான மமையவே பாதஞ்சூடுங்
தெய்வநாயகனைச்சேர்ந்து சிறக்குமீனாட்சித்தாயே.

### 59. நரி பரியாக்கிய படலம்

பன்னியே துதித்துப்பாடிப் பரவிய தொண்டர்க் காகத்
துன்னிய நரிகடம்மைத் தொகையிலா விவுளியாக்கி
மன்னவன் றனக்குநல்கு மறுவிலாமணியைச் சேர்ந்து
தன்னிகரில்லாக்கோலந் தழைக்குமீனாட்சித்தாயே.

### 60. பரி நரியாக்கிய படலம்

மரகதம் பொலிந்த மேனிவள்ளலுக் காழியீந்த
பரமெனுந் துரியமேலாம் பண்ணவன் விளையாட்டாகக்
குரகத நரியாய்க்கானங் குழுமியே யோடச்செய்த
புரவலன்றன்னைமேவிப் பொருந்து மீனாட்சித்தாயே.

### 61. மண்சுமந்த படலம்

முறையமிட் டலறித்துன்ப மூழ்கிய தொண்டர்க் காகத்
தறையிடைத்தோன்றி வந்தி தந்தபிட்டருந்தி வையைத்
துறையின்மண் சுமந்துவேந்தன் றாண்டிடும் பிரம்பான்மோத
மறைசிவக் கொழுந்தைமேவி மகிழுமீனாட்சித் தாயே.

### 62. பாண்டியன் சுரந்தீர்த்த படலம்

இழிவுறுஞ் சமண்பேயென்னு மிருளினை யகற்ற வேண்டி
விழுமிய குலத்துப்பாவை விரும்பியே தொழுது போற்ற
வழுதிதன் சுரத்தைநீக்கு மறைமொழிக்கு மரனுக்கன்று
எழில்பெறு ஞானப்பாலை யீந்தமீனாட்சித்தாயே.

### 63. சமணரைக் கழுவேற்றிய படலம்

ஆயுநான் மறைநாவாளரருளிய பதிகந்தன்னைத்
தேயுவினிடமும் வையை நீரிலுஞ் சிறக்கச்செய்து
மாயைசெய் சமணர்தம்மை வலிக்கழுவேற்றுவித்த
தூயமெய்ச் சுடரைச்சேர்ந்து சொலிக்கு மீனாட்சித் தாயே.

### 64. வன்னியுங் கிணறும் இலிங்கமுமழைத்த படலம்

பன்னருந் துன்பத்தாழ்ந்து பரவியே வணிகமாது
துன்னுமங் கலநாளன்று தோன்றிய கரிகள்வேண்ட
வன்னியுங் கிணறும்லிங்க முடன்வரப் புரிவித் தாண்ட
தன்னிகரிலாத தேசிற்றங்கு மீனாட்சித்தாயே.

### அருச்சனைப் படலம்

பொதியமாமுனியும்வேத ரிசிகளும்போந்துகூடற்
பதியினில் விமானமேய பரஞ்சுட ருருவங்கண்டு
விதியினாலருச்சித்தேத்தி வேண்டிடக் கிருபை நல்குந்
துதிபெறு பொருளைச்சேர்ந்து சொலிக்குமீனாட்சித் தாயே.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# திருவெம்பாவை

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொல் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

[பெருமானே! உமது கையிற் சேர்க்கப்பெறும் இப்பிள்ளை உனக்கே அடைக்கலம் என்ற பழமொழியை இன்று புதுக்கும் அச்சத்தோடு உமக்கு நாங்கள் ஒன்று கூறுவோம், கேட்பாயாக. உன் அன்பரல்லாதவர்க்கு யாம் வாழ்க்கைப்பட வேண்டா; நாங்கள் செய்யும் செயல்கள் எல்லாம் நின் திருப்பணியேயாக; இரவு பகல் எக்காலமும் எங்கண்கள் நின்னையன்றி வேறொன்றையும் பார்க்க வேண்டா. இவ்வாறு எங்களுக்கு வரம் தந்தால் நாங்கள் எதற்கும் பயப்படமாட்டோம்.]

---

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

குத்துவிளக் கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய் நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய்.

[குத்துவிளக்கெரியவும் கட்டிலின்மேல் மிருதுவான மெத்தையில் நப்பின்னையுடன் உறங்கும் திருமார்பனே! வாய்திறந்து பேசியருளுவாய்! நப்பின்னையே! நீ உன் கணவனை நொடிப்பொழுதும் துயிலெழ இசையாதிருக்கிறாய்; கணப்பொழுதும் பிரிவைச் சகிக்கமுடியாதிருக்கிறாய். உண்மையாக இது உனக்குத் தகுதியன்று.]

## அடியவர் திருநட்சத்திரங்கள்


விகாரி—சித்திரை

சைவம்

9உ—திருநாவுக்கரசு சுவாமிகள்
14உ—சிறுத்தொண்ட நாயனார்
16உ—மங்கையர்க்கரசியார்
19உ—விறல்மிண்ட நாயனார்
27உ—இசை ஞானியார்
28உ—திருக்குறிப்புத்தொண்ட நாயனார்

வைணவம்

27உ—மதுரகவியாழ்வார்



திருத்தணி மலைக்கோயில்



திருத்தணி—குமரர் புஷ்கரணி